மாதம் இரு இதழ்

# இது நம்தேசம்

பார்வை 01 | வியூகம் 02 | 14.08.2012 - 31.08.2012 | பக்கங்கள் : பதினாறு | விலை ரூபா : 15.00

# கிழக்குத்தேர்தல்; எங்கிருந்து வந்தது பணம்

கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் தமிழ்தரப்புக்களை ஊக்குவிக்கும் வகையில் பணம் பரிமாறப்பட்ட விவகாரம் சூடு பிடிக்கத்தொடங்கியுள்ளது 13வது திருத்தச் சட்டத்தின் கீழான மாகாணசபையை ஏற்று அங்கீகரிப்பதே கிழக்கு மாகாணசபை தேர்தலில் தமிழ் தரப்புக்களை போட்டியிடச் செய்வதன் நோக்கமென விமர்சனங்கள் கடுமையாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. தமிழ்தேசியவாத நிலைப்பாட்டில் பற்றுறுதியுடனுள்ள தரப்புக்களது தேர்தல் புறக்கணிப்பு கோரிக்கையும் இதனை அடிப்படையாக வைத்தே எழுப்பப்படுகின்றது.

இத்தகைய சூழலில் தேவையற்றவர்களது கைகளில் மாகாணசபை ஆட்சி போய்விடக் கூடாதென்ற கோசத்துடன் தமிழ்த் தரப்புக்கள் தேர்தல்களம் குதித்துள்ளன. விரும்பியோ விரும்பாமலோ தமிழ்மக்களும் அவர்களுக்கு வாக்களிக்க நிரப்பந்திக்கப்பட்டுளனர். எனினும் கிழக்கு மாகாணசபை தேர்தலில் அத் தரப்புக்களை போட்டியிட வைத்து வெற்றி கொள்ள வைப்பதன் மூலம் மாகாணசபையை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளரென பிரச்சாரப்படுத்த வெளிச்சக்திகள் சில முற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இலங்கை அரசு தனது இனப்படுகொலை யுத்தத்தை நியாயப்படுத்திக்கொள்ளவும், தமிழ் மக்களது ஆதரவு தனக்கிருப்பதாகக் காட்டிக் கொள்ளவும் இத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்வதாக பரவலாக அவதானிகள் கருத்து கூறியே வருகின்றனர். எனினும் அதனையும் தாண்டி அவசர அவசரமாக உரிய காலத்திற்கு முன்பதாக கிழக்கு தேர்தலை அறிவித்ததன் பின்னணியில் வெளிச்சக்திகளது ஆலோசனையின் கீழான 'சதி முயற்சிகள் இருப்பது அம்பலமாகியுள்ளது.

விடுதலைப் புலிகள் பலம்மிக்கவர்களாக இருந்த காலப்பகுதியில் நிராகரிக்கப்பட்ட மாகாணசபை தேர்தல்களில், அவர்களது ஆதரவார்கள்போன்று வெளிப்படையாகக் காட்டிக் கொண்ட தரப்புக்களை போட்டியிட வைப்பது அரசியல் சாதுரியம் மிக்க நகர்வாகவே பார்க்கப்படுகின்றது. அத்துடன் இத்தகைய தேர்தல்களில் வாக்களிப்பதுடன் தமது கடமை கள் எல்லாம் முடிந்து விட்டதென்ற மனோ நிலையை தமிழ்மக்களிடையே ஏற்படுத்துவதும் நோக்கமாகவுள்ளது.

அவ்வகையில் வெற்றி தோல்விகளுக்கப்பால் தமிழ்தரப்புக்களை தேர்தல் களத்தில் செயற்படுத்த தூதரக மட்டங்களில் பணப் பரிமாற்றம் இடம் பெற்றுள்ளமை அம்பலத்திற்கு வந்துள்ளது. முன்னைய காலங்களில் புலம்பெயர் தரப்புக்கள் உதவின. எனினும் இம் முறை ஒன்று மற்ற மாகாணசபையில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. அதனால் அவர்கள் உதவ வில்லையென்கிறார் மூத்த தமிழ் அரசியல் வாதியொருவர். தகவலை உறுதிப்படுத்திய அவர் பரிமாற்றப்பட்ட தொகை பற்றி தான் முழுமையாக அறிந்திருக்கவில்லையென்றார்.

கொழும்பில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமென வழங்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதி பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மீதிக்கு என்ன நடந்தது என்பது பற்றி தெரியவில்லை என்கின்றன சில உட்தரப்புகள். முழுப்பணப்பரிமாற்றமும் தலைமையுடன் மட்டுமே கையாளப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. அந்த உற்சாகத்தில் கூடிய பட்சம் அனை வரையும் தேர்தல் பணிகளில் ஈடுபட அவர் வேண்டியுள்ளார்.

முஸ்லிம் தரப்புக்கள் ஒத்து வராவிட்டால் ஐ.தே.கவுடன் இணைந்தாவது ஆட்சியை பிடிக்கலாமென சிலர் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் கூறுகின்றது.

## உள்ளே...

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பக்கம் 03

ஹெசோ மாநாடும் அரசியல் நகர்வுகளும் பக்கம் 04

இனிமேல் இரணைமடு யாருக்கு பக்கம் 05

தமிழ் மக்களின் அரசியற் பலம் எவ்வாறானது பக்கம் 06

இராணுவத்தால் சூழப்பட்டுள்ளோம் ~ யாழ் ஆயரின் பேட்டி பக்கம் 08

## வன்னியில் தொடரும் மீள்குடியமர்வு நாடகம்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் மெனிக் முகாமில் தங்கியுள்ள மக்களை விரட்டியடித்து அம்முகாமிற்கு மூடு விழாநடத்த முழு அளவில் முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளது. சர்வதேச அழுத்தங்கள் மத்தியில் வன்னி இடம் பெயர்ந்த மக்கள் முழுமையாக குடியமர்த்தப்பட்டு விட்டனர் என்பதை காண்பிப்பது மட்டுமே தற்போதைய அரசின்நோக்கமாக இருக்கிறது ஏற்கனவே பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஸ மெனிக் முகாம் மூடு விழா பற்றி அண்மையில் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

எனினும் மூடு விழாவிற்கென விரட்டியடிக்கப்படும் மக்களை மீண்டும் புதிய முகாம்களிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் மாற்றிடங்களிலும் தங்கவைக்கவே முயற்சிகள் தொடர்கின்றன. ஏற்கனவே முல்லைத்தீவின் கோம்பாவிலும் திருமுறிகண்டியிலும் இத்தகைய

(13 ஆம் பக்கம் பார்க்க)

யாருமற்றுப் போகவில்லை...




டெல்றொக்சனின் மரணத்திற்கு நியாயம் கேட்டு...

# அவுஸ்திரேலியாவிற்கான ஆட்கடத்தல் பின்னணியில் அரசியல்வாதிகளா

இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அகதிகளென்ற பெயரில் அவுஸ்திரேலியாவிற்குச் சென்றடைவதன் பின்னணியில் அரசியல் சூழ்ச்சிகள் இருப்பதாக நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் திருகோணமலையிலிருந்து படகுகள் மூலம் ஆட்கள் அனுப்பப்பட்டனர்.

அதன் பின்னணியில் இலங்கையின் முக்கிய அரசியல்வாதி ஒருவர் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது எனினும் அத்தகைய பயணம் பின்னர் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறையென விரிவடைவதாக பேச்சு அடிபடுகின்றது.

ஒருசிலதினங்களாகவெளியாட்களது நடமாட்டம் எமது கிராமத்தில் அதிகமாகவிருந்தமையால் சந்தேகம் எழுந்திருந்த போதும் பின்னரே அறிந்து கொண்டோம் இரவோடிரவாக எங்கள் கடற்கரையிலிருந்தும் படகில் ஆட்கள் அவுஸ்திரோலியாக்கு போயிருந்தார்களாம். அவ்வாறு போனவர்கள் நடுக்கடலில் பிடிபட்டதாகவும் இல்லை மூழ்கி உயிரிழந்து விட்டதாகவும் பல பல கதைகள் உலாவுவதாகவும் மீனவ சங்கப் பிரமுகரொருவர் கூறுகின்றார்

உண்மையில் உயிரைப் பணயம்வைத்து புறப்பட்டவர்கள் எவ்வளவு பேர். அவுஸ்திரேலியா சென்றடைந்து குடும்பத்தவர்களுக்கு தகவலளித்தாலே பாதுகாப்பாக சென்றடைந்தமை பற்றிய தகவல்கள் உறுதியாகின்றன அவ்வாறு தகவல்கள் இல்லாதோர் உயிருடனில்லையென்றே கருதப்பட வேண்டியிருக்கிறது.

எந்தவித பாதுகாப்பு உத்தரவாதமுமற்ற இக் கடல் பயணம் பதினைந்து நாட்களுக்கு மேலாக நீடித்திருப்பதாக கூறப்படுகிறது பல நாடுகளது எல்லையோர காவல்படைகளது கண்காணிப்பு வளையத்தை தாண்டியதாகவே இப் பயணம் அமைகின்றது. எனினும் இலங்கை கடற்படை பெரிதாக கண்டுகொள்வதில்லையெனவும் கூறப்படுகிறது. அண்மையில் இவ்வாறு ஆட்களை அழைத்துச் சென்றவர்களுள் படகோட்டிகளாக நான்கு கடற்படையினரும் அவுஸ்திரேலியாவை சென்றடைவதாக கூறப்படுகின்றது. எனினும் அவர்கள் பற்றிய மேலதிக தகவல்களை அரசு இருட்டடிப்பு செய்து விட்டது.

அடுத்த சந்ததிகளை உருவாக்கக் கூடிய இளம் வயதினரே கூடுதலாக இவ்வாறாக வெளியேற ஊக்குவிக்கப்படுகின்றனர். ஒன்று ஆசையூட்டப்படுகின்றனர் அல்லது தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாகப் பலர் வெளியேறுகின்றனர். குறிப்பாக முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீதான அச்சுறுத்தல்களும் இத்தகைய வெளியேற்றத்திற்கு காரணமாயிருக்கின்றது. எதிர்காலத்தை

(13 ஆம் பக்கம் பார்க்க)

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல,43, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே இல : 021 222 3739
மின்னஞ்சல் : e.namthesam@gmail.com

# கிழக்கு மாகாண சபைத்தேர்தலும் தமிழர் அரசியலும்

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் செப்ரெம்பர் 8 ம் திகதி நடாத்தப்படவுள்ள நிலையில் தமிழர் அரசியல்க்களம் வாதப் பிரதிவாதங்களால் சூடாக்கப்பட்டுள்ளது. இலங்கைத்தீவிற்குள்ளும், பிராந்திய வல்லரசின் கோடிக்குள்ளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தமிழ்த் தேசிய அரசியலை, உயர்ந்த அர்ப்பணிப்புக்கள், தியாகங்களினூடாக சர்வதேச மயப்படுத்திய தமிழீழ விடுதலைப் புலிகளது வீழ்ச்சிக்குப் பின்னர் தமிழர் தாயகத்தின் ஓர் அங்கமான கிழக்கு மாகாணத்தின் மீது இத்தேர்தல் திணிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை முறை என்பது தமிழர்கள் மீது அவர்களது விருப்பங்களிற்கு மாறாகத் திணிக்கப்பட்டது முதல் கடந்த 2009 மே மாதம் வரை தமிழ் அரசியல் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் தமிழரது அரசியல் தலைமை துரதிஸ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கைமாறியது. இந் நிலையில் திணிக்கப்பட்டுள்ள இத்தேர்தலை எவ்வாறு கையாள்வது என்பதே இவ்விவாதங்களில் முக்கிய கருப்பொருளாகும்.

80 களின் பிற்பகுதியில் தென்னாசியாவில் குறிப்பாக இலங்கையில் நிகழ்ந்துகொண்டிருந்த பூகோள அரசியல் மாற்றங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவே இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டமும், அதனூடான மாகாண சபை முறைமையின் உருவாக்கமுமாகும். அதாவது எண்பதுகளில் (பனிப்போரின் கடைசிக் காலம்) இலங்கைத்தீவின் அதிகார பீடம் இந்தியாவின் விருப்பிற்கு மாறாக அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குள் செல்வதனை தடுப்பதற்கான கருவியா கவே இலங்கைத் தமிழர் விவகாரம் இந்தியாவினால் கையில் எடுக்கப்பட்டது. தமிழீழத்தை உருவாக்கப்போவதாக கொழும்பிற்கு ஓர் போக்குக்காட்டி எச்சரித்து அதன் மூலம் கொழும்பைப் பணியவைத்து தனது இலாபத்திற்காக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அமெரிக் காவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் புதுடில்லி அப்போது வெற்றியும் கண்டது.

தமிழீழம் அமைத்துத் தரப்போவதாக நம்பிக்கையூட்டி தமிழ் மக்களைப் பயன்படுத்திப் பலிக்கடாக்களாக்கி தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டது புதுடில்லி. அவ்வாறு தான் பயன்படுத்திய தமிழ் மக்களுக்கும், ஈழத்தமிழ் மக்கள் மீது எப்போதும் அனுதாபம் கொண்டிருந்த தமிழக மக்களுக்கும் இலங்கை - இந்திய ஒப்பந்தமானது ஈழத் தமிழ் மக்களது நன்மைக்காக உருவாக்கப்பட்டது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் டில்லிக்கு எழுந்தது. அதற்காக தீர்வு என்ற பெயரில் ஏதோ ஒன்றைத் தமிழ் மக்களுக்குக் காட்டி ஏமாற்ற வேண்டும். அதேவேளை தனது அழுத்தத்திற்கு அடிபணிந்து கொண்ட கொழும்பை பகைத்துக் கொள்ளவும் கூடாது. அதற்கேற்ற வகையில் 13 ம் திருத்தச் சட்டம் என்ற ஓர் மாயமானை உருவாக்கி தமிழர் மீது இலங்கை இந்திய அரசுகள் திணித்தன.

இத்திணிப்பை அப்போது அனைத்துத் தமிழ்த் தரப்பினரும் நிராகரித்திருந்தனர். அது மட்டுமன்றி அப்போது இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் நடாத்தப்பட்ட மாகாணசபைத் தேர்தலை ஈபிஆர்எல்எவ் தவிர்ந்த அனைத்து அரசியல் அமைப்புக்களும் புறக்கணித்தன. 13 ம் திருத்தச் சட்டத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணி அதிலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி டில்லிக்கு ஓர் கடிதத்தினையும் எழுதியிருந்தது. அக்கடிதத்தில் அப்போதய தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும், தற்போதய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் தலைவருமான இரா சம்பந்தன் அவர்களும் கையொப்பமிட்டிருந்தார்.

பின்னர் அப்போதய இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த திரு.வரதராஜப்பெருமாள் கூட மாகாண சபை முறையை ஏற்க முடியாது என்று கூறி சுதந்திர தமிழீழத்தைப் பிரகடப்படுத்திவிட்டு இந்தியாவிற்கு ஓடியிருந்தார்.

உண்மையில் மாகாண சபையில் அப்படி என்னதான் இருக்கின்றது? இது ஓர் ஒற்றையாட்சிக்குட்பட்ட வெறும் அதிகாரப் பரவலாக்கம் (De-centralization) மட்டுமே. இம்முறையை தமிழ்த் தரப்புக்களின் விருப்பு வெறுப்புக்களைப்பற்றிக் கணக்கெடுக்காது இலங்கை அரசாங்கம் பாராளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அகற்றிவிட முடியும். மேலும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டதாக காட்டப்பட்ட ஒருசில அற்ப சொற்ப அதிகாரங்கள்கூட உண்மையில் மக்களால் தேர்தெடுக்கப்பட்ட மாகாண சபைக்கு இல்லை.

அது ஜனாதிபதியினால் நேரடியாகத் நியமிக்கப்பட்ட ஆளுனரிடமே உள்ளது. இவ் ஆளுனர் ஜனாதிபதியின் விருப்பு வெறுப்புக்களிற்கு மாறாக செயற்படின் ஜனாதிபதி இவரை எந்நேரமும் பதவி விலக்க முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபையானது வெறுமனே ஆளுனருக்கு உதவி வழங்கவும் ஆலோசனை வழங்கவும் மட்டுமே முடியும். அவ்வாலோசனைகளை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆளுனரின் கேள்விக்குட்படுத்த முடியாத தற்துணிவு அதிகாரத்திற்குட்பட்டதாகும்.

மேலும் இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாரிய சவால் தமிழ் மக்களின் தாயக பூமியானது சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு தமிழர் தாயகம் என்ற ஒன்றே இல்லை என்ற நிலைக்குள்ளாக்கப்படுவதாகும். அரச காணிகளில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புக்கள், அபகரிப்புக்களை மாகாண சபைக்குள்ள எந்தவொரு அதிகாரத்தினாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஆக இப்பேற்பட்ட மாகாண சபையை, இதுவரை காலமும் தமிழ்த் தேசியவாதிகளால் அடியோடு நிராகரிக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டு வந்த மாகாண சபையை வடக்கும் கிழக்கும் பரிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியம் பேசி வாக்குகளை பெற்று மக்கள் பிரதிநிதிகளாகியுள்ளவர்கள் ஏற்று அங்கீகரிப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் வரலாற்றுத் துரோகம் மட்டுமல்ல தமிழ் மக்களதுஅரசியல் இருப்பை மீள முடியாத பாரிய சகதிக்குள் கொண்டுசென்று புதைக்கும். பாரிய இன அழிப்பு அரங்கேறியுள்ள நிலையில் இதுவரை காலமும் இலங்கைத்தீவில் நிலவிவந்தது ஓர் இனப்பிரச்சினை என்ற பரிமாணம் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்குமான ஓர் அதிகாரப் பிரச்சினை என்ற ஓர் தவறான பரிமாணத்தினை எடுக்கும்.

ஆகவே இச்சூழ்நிலையில் இலங்கைத்தீவில் இன்று தமிழ்த் தேசியவாத அரசியலை முன்னெடுப்பதாகக் கருதப்படும் இருதரப்புக்களில் ஒன்றாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கிழக்கு மாகாண சபைத் தேர்தலை புறக்கணித்து தமிழ்த் தேசியவாத அரசியலை தக்கவைத்துள்ளது. ஆனாலும் மக்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்க் கூட்டமைப்பு இத்தனை இழப்புக்களையும் சந்தித்த பின்னர் மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்பதன் மூலம் இதற்கு ஓர் உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கி வரலாற்றுத் துரோகம் இழைத்திருக்கின்றது. கூட்டமைப்பானது தனது ஏஜமான்களின் பூகோள நலன்களுக்காக தமிழ் மக்களின் அரசியலை பலியிட்டுள்ளது. இதனை அண்மையில் 98 கையொப்பங்களுடன் வெளிவந்துள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளது அறிக்கையும் கட்டியம்கூறி நிற்கின்றது. ஆகவே தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய அரசியலை நேர்மையாகவும் உறுதியாகவும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய சரியான மாற்றுத் தலைமையை அடையாளம் காணவேண்டிய தருணம் வந்துள்ளது.

# இலங்கையில்


## கேள்விக்குறியாகும் உயர்கல்வியும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டமும்

இலங்கையில் கல்வித்துறை என்றுமில்லாத அளவிற்கு மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. உயர்கல்வித் துறையில் இருப்பவர்கள் உயர்கல்வித்துறையின் தராதரத்தினைப் பேணுவதில் பலத்த சவால்களைச் சந்தித்து வருகின்றனர்.



அ. ராசகுமாரன்
தலைவர் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

தற்போது உயர்கல்வித்துறை சந்தித்து வரும் நெருக்கடிகளில் சிலவற்றை கோடிட்டுக் காட்டுவது பொருத்தமானது. அரச தரப்பு உயர் கல்வித்துறையை தனியார் மயப்படுத்துவதில் அதிக முனைப்புக் காட்டி வருகிறது. பல தனியார் கல்வி நிறுவனங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி பல்கலைகழக அந்தஸ்திற்கான அனுமதியைப் பெற்று தரமில்லாத பட்டங்களை வழங்கிவருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் வலுத்துவருகின்றது. பல்கலைக்கழக சமூகத்தின் விருப்புக்களுக்கு மாறாக அரசியல் நலன்களை முன்நிலைப்படுத்தி அதிகாரத்திலுள்ளவர்களுக்கு விசுவாசமானவர்கள் சில பல்கலைக் கழகங்களில் துணைவேந்தராக நியமிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழக ஆளுனர் சபைக்கு (Council) அரசியல் வாதிகளினால் உயர்கல்வியுடன் மட்டுமல்ல கல்விப் புலத்துடன்கூட சம்பந்தமேயில்லாத நபர்கள் பலர் தமது தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக நியமிக்கப்பட்டுவருகின்றனர். இவ்வாறாக அரசியல் வாதிகளினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் அரசியல் வாதிகளின் நிகழ்ச்சிநிரலை மையப்படுத்தி பல்கலைக்கழக



கலாநிதி ரஞ்சத் தேவசிறி

தீர்மானம் எடுக்கும் செயன்முறைகளில் பெரும் இடையூறுகளை விளைவித்து வருகின்றனர். தற்போது பல்கலைக்கழகங்களில் காணப்படும் குழப்பங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் இத்தகைய அரசியல் தலையீடு அடிப்படையான காரணமாக இருந்து வருகின்றது.

அரசு கல்வித்துறைக்கு ஒதுக்குகின்ற மிகக் குறைவான நிதி ஒதுக்கீடு காரணமாக பல்கலைக்கழகங்களில் மிகமோசமான பௌதீக மற்றும் மனிதவளப் பற்றாக்குறை நிலவுகின்றது. பல்கலைக்கழகங்களில் பலதுறைகளுக்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லை. உதாரணமாக யாழ்பல்கலைக் கழகத்தில் சில துறைகள் ஒரு விரிவுரையாளருடன் இயங்கி வருகின்றது சில துறைகளுக்குப் போதியளவு செய்முறைக் கல்விக்கான ஆய்வுகூட வசதிகள் கிடையாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திலும் சட்ட பீடத்திலும் கடுமையான ஆளணிப்பற்றாக்குறை நிலவுகின்றது.

பல்கலைக்கழகங்களில் நிலவும் குறைவான ஊதியமுறைமை காரணமாக தேர்ச்சிமிக்க கல்வியலாளர்கள் பல்கலைக்கழகத்திற்குள் வரவிரும்புவதில்லை. பல்கலைக்கழகங்களில் தற்போது நடைமுறையில் உள்ள குறைவான ஊதிய நடைமுறையினால் நன்கு தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்கள் பலர் எமது நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் வேகமாக குடியேறிவருகின்றனர்.

உயர்கல்விக்காகச் சென்றவர்கள் திரும்பிவர மறுக்கின்றனர்.



பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா

பல்கலைக்கழக பட்டதாரிகள் தொழில்துறைகளுக்கு பொருத்தமுடையவர்காளாகவும், வினைத்திறன் மிக்கவர்களாகவும் உருவாக்குவதில் தற்போதய உயர்கல்வித்துறையில் காணப்படும் பல குறைபாடுகள் பெரும் தடையாக உள்ளன. பல சந்தர்ப்பங்களில் கணிசமானளவு பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வினைத்திறனற்றவர்களாக இருப்பதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களை மட்டும் குற்றம் சுமத்துவது ஒருதலைப்பட்சமானது. எனினும் பல்கலைக்கழக பட்டதாரிகளை வினைத்திறனாக உருவாக்குவதில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கு இருக்கின்ற பங்கு முக்கியமானது என்பது மறுப்பதற்கில்லை. இத்தகை குறை பாடுகளும் பிரச்சினைகளும் மலிந்து கிடக்கின்ற உயர்கல்வித்துறை சீரமைக்கப்பட வேண்டும்.

தற்போதய அனைத்துப் பல்கலைக்கழக விரிவுரை யாளர்களின் பகிஸ்கரிப்புப் போராட்டம் உயர்கல்வியை பாதுகாக்கின்ற பல கோரிக் கைகளை முன்வைத்து கடந்த யூலை மாதம் 4ம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருந்தும் அரசு சார்பு ஊடகங்களால் விரிவுரையாளர்களின் போராட்டத்தின் உண்மைத் தன்மைகள் திட்டமிட்டு மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்பள உயர்வுக்காக மட்டும் போராடி வருகின்றார்கள் என பொய்யான பரப்புரை செய்து வருகின்றன. சம்பள உயர்வு விடயத்தில் மாத்திரம் சில பத்திரிகைகள் அரசின் நிலைப்பாட்டுடன் கைகோர்த்து நிற்கின்றன. அரசுக்கு சார்பான கருத்துக்களை பரப்புரை செய்து வருகின்றன. உயர்கல்வித்துறையின் அனைத்து விரிவுரையாளர்களும் மேற்படி உயர்கல்வியைப் பாதுகாக்கின்ற முயற்சியில் களமிறங்கியுள்ளனர். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின்

(16ஆம் பக்கம் பார்க்க)

■ சூரியவேந்தன்

# தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படைகளை சிதைக்கும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல்




சர்வதேச அழுத்தங்கள் என்னதான் ஏற்பட்டாலும் மகிந்தர் அரசாங்கம் தனது சொந்த நிகழ்ச்சிநிரலின்படியே கருமங்களை நகர்த்துகின்றது. கிழக்குமாகாண சபைத்தேர்தலும் அதில் ஒன்று. இந்தத் தேர்தலில் அரசாங்கத்திற்கு மூன்று வெற்றிகள். இதில் முதலாவது முஸ்லீம் காங்கிரசுடன் இணைந்து மாகாண நிர்வாகத்தினைக் கைப்பற்றுவதன் மூலம் கிழக்குமாகாண மக்கள் அரசாங்கத்தோடு நிற்கின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவது. இரண்டாவது வடக்கு - கிழக்கு பிரிப்பினை தமிழர்கள் ஒத்துக் கொண்டுவிட்டார்கள் என்பதை வெளி உலகிற்கு தெரியப்படுத்துவது. மூன்றாவது மாகாண சபை மட்டத்திற்கு தமிழ்த்தேசிய அரசியலைக் கீழிறக்குவது. தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே அரசாங்கம் இந்த வெற்றிகளைப் பெற்றுவிட்டது. இனித்தேர்தல் என்பது வெறுமனே பெயருக்குத்தான்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்தவுடனேயே தமிழ்த்தேசிய சக்திகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் பங்குபற்றுவதன் மூலம் கோட்பாட்டு நெருக்கடிகளும், நடைமுறை நெருக்கடிகளும் ஏற்படும் என எச்சரித்திருந்தன. அதை எவற்றையும் கவனத்தில் எடுக்காது கூட்டமைப்புத் தேர்தலில் பங்குபற்றும் முடிவினை எடுத்தது. இதன் மூலம் முழுத் தமிழ்த்தேசிய அரசியலையும் கவிழ்த்துக் கொட்டியுள்ளது. சொந்த நிகழ்ச்சிநிரல் எதுவும் இல்லாது, இந்திய, அமெரிக்க எஜமான்களது கட்டளைப்படி செயற்படும் ஒரு கட்சியிடமிருந்து இதைத்தான் எதிர்பார்க்க முடியும்.

இங்கு ஏற்படும் கோட்பாட்டு நெருக்கடி. 13வது திருத்தத்தினையும், அதன் அடிப்படையிலான மாகாணசபை முறையினையும் ஏற்பதால் உருவாகுவதாகும். 13வது திருத்தமும், மாகாணசபைகளும் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளைத் தீர்க்க போதுமானதல்ல. தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம். தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்கின்ற தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளைப் புறக்கணித்தே மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

**இம்மாகாணசபை முறையில் மாகாணங் களுக்கு சுயாதீன அதிகாரம் ஏதும் கிடையாது, மத்திய அரசில் தங்கியிருக்கும் அதிகாரமே உண்டு. மத்திய அரசு தயவு பண் ணினால் ஒழிய மாகாணசபைகளினால் எதுவும் செய்ய முடியாது. வரதராஜப்பெருமாளின் வடக்கு - கிழக்கு மாகாணசபையும், பிள்ளையானின் கிழக்கு மாகாணசபையும் இதற்குப் பெரிய சாட்சி.**

*மாகாணசபை முறையினால் எதுவும் செய்யமுடியாது எனக் கூறி ஈழப் பிரகடனத்தை விடுத்துவிட்டு வரதராஜப்பெருமாள் இந்தியாவிற் குத் தப்பி ஓடினார். பிள்ளையான் ஒரு பியோனை நியமிக்கின்ற அதிகாரம் கூட தனக்கு இல்லை என ஓலமிட்டார். பல சிங்கள ஆய்வாளர்கள் கூட மாகாணசபை முறை இனப்பிரச்சினையை தீர்க்க ஏற்றதல்ல. என தெளிவாகக் கூறியிருக் கின்றனர். ஏன் சம்பந்தன் கூட தனது முன்னைய தலைவர்களுடன் இணைந்து இதன் போதாமைகளை இந்தியாவிடம் முறையிட்டிருக்கின்றார்.*

**சமகால அரசியல்**

இனப்பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும், தமிழ்மக்களின் இறைமையை அங்கீகரித்தாகவேண்டும். சிங்கள தேசத்திடம் இறைமையைக் கொடுத்துவிட்டு அதுதரும் பிச்சையினை ஏற்கவேண்டும் என்ற நிலை பொருத்தமானதல்ல. அதிகார அலகு. இறை மையுடன் கூடிய பகிர்வுஅதிகாரங்கள், கூட்டு இறைமையுடன் கூடிய கூட்டுஅதிகாரங்கள், பகிர்வு அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பன மிக மிக அவசியம். 13வது திருத்தத்தில் இவை எதுவும் இல்லை.

அடுத்தது வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரம். இவ்இணைப்பு விவகாரம் என்பது தமிழ்மக்களின் கூட்டிருப்பையும், கூட்டுரிமையையும் பேணுவதற்கு மிக மிக அவசியம். இந்த விடயம் சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட விடயம்.

**கூட்டமைப்பு இத்தேர்தலில் பங்குபற்றுவதன் மூலம் வடக்கு - கிழக்கு பிரிப்புக்கு நிரந்தர அங்கீகாரத்தை வழங்கிவிடுகின்றது.**

கூட்டமைப்பு என்னதான் வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு குரல்கொடுக்கின்றேன் எனக்கூறினாலும் அதன் நடைமுறைச் செயற்பாடு பிரிப்பினை அங்கீகரிப்பதில்தான் தமிழ்மக்களை கொண்டு சென்றுவிடுகின்றது. இங்கு என்ன சொல்கின்றார்கள் என்பது பிரச்சனையல்ல நடைமுறையில் என்ன செய்கின்றார்கள் என்பதே பிரச்சினை. அரசாங்கம் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வடக்கு - கிழக்கினைப் பிரித்தாலும், அரசியல் மட்டத்தில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்ற விடயமாக இவ் விவகாரம் இருந்தது. கூட்ட மைப்பு அதையும் இல்லாமல் செய்து விட்டது.


கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றுவதனால் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய கோட்பாட்டு அபாயம் தமிழ்த் தேசிய அரசியல் மாகாணசபை அரசியலாக கீழிறக்கப்பட்டமை தான். இனிமேல் தமிழ் அரசியல், மாகாணசபையின் விவகாரங்களை சுற்றியதாகவே அமையும். இனப்பிரச்சினை என்பது அரசியல் அரங்கிலிருந்து அகற்றப் பட்டுவிடும். இந்த வரலாற்றுச் சாதனை சம்பந்தனுக்கும் கூட்டமைப்புக்கும் உரியதாக இருக்கும். ஏனெனில் பேரினவாதச் சக்திகளினால் கூட அரங்கிலிருந்து அகற்றப்பட முடியாத தமிழ்த் தேசிய அரசியலை கூட்டமைப்பு அகற்றியிருக்கின்றது.

இந்த அபாயம் எதிர்காலத்தில் வரக்கூடாது என்பதற்காகவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி குறைந்தபட்சம் சுயேட்சைப் பட்டியலிலாவது போட்டியிடுங்கள் எனக் கூட்டமைப்பினைக் கெஞ்சிக் கேட்டது. ஆனால் கூட்டமைப்பு செவிசாய்க்கவில்லை. தீர்மானம் கூட்டமைப்பினுடையதாக இருந்தாலல்லவா? செவிசாய்ப்பது? அது இந்திய, அமெரிக்க எஜமான்களின் கட்டளை. அவர்களின் ஆட்டுவிப்பிற்கு ஒரு பொம்மை போல கூட்டமைப்பு ஆடுகின்றது.

கடைசியில் கூட்டமைப்பின் வேட்புமனுத் தாக்கல் எல்லாம் முடிந்த பின் அந்த அபாயத்தின் வீரியத்தைக் குறைப்பதற்காக தமிழ்ச் சிவில் சமூகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. தீர்வு விவகாரம் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம், சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டும், வடக்கு -

> தேர்தலில் பங்குபற்றுவதற்கு கூட்ட மைப்பு கூறுகின்ற காரணம் பிள்ளை யான்குழு, கருணாகுழு, ஈ.பி.டி.பி போன்ற தரப்புகள் வந்துவிடக்கூடா தென்பதாகும். அதுவே உண்மையென் றால் சுயேட்சைக் குழுவை தேர்தலில் நிறுத்தி அதனைத் தடுத்திருக்கலாம். அதன் மூலம் நேரடியாக போட்டி யிடுவதில் வரும் கோட்பாட்டுச் சிதை வையும் தடுத்திருக்கலாம். ஆனால் அதுவே உண்மையான காரணம் அல்ல. அத்தேர்தலில் தமிழ்மக்களின் பிரதான கட்சி பங்குபற்றியதால் தமிழ் தேசிய அரசியலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரைகால தியாகம் நிறைந்த அரசியலைக் கீழிறக்கிவிட்டுள்ளது.

கிழக்கு இணைப்பு விவகாரம் சமரசத்திற்கு அப்பாற்பட்டது, 13வது திருத்தத்தினை அரசியல்தீர்வின் அடிப்படையாகக் கொள்ளக்கூடாது என்பவற்றையாவது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்குமாறு மன்றாட்டமாக கேட்டது. சம்பந்தன் தலைமை



அவை எவற்றையும் ஒரு பொருட்டாகவே கணக்கெடுக்கவில்லை. அது ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள ஒன்றினை கெஞ்சிக் கேட்கின்ற நிலைக்கு தமிழ் அரசியலை கீழிறக்கிவிட்டது.

## நடைமுறை நெருக்கடி

கிழக்கு மாகாணத்தின் சமூக அமைப்பு, மாகாண நிர்வாகம் கூட்டமைப்பின் கைகளுக்கு கிடைப்பதை தடுத்துவிடுகின்றது. கூட்டமைப்பு என்னதான் முயற்சி செய்தாலும் 10 ஆசனங்கள் கூட்டமைப்பிற்கு கிடைப்பதே கடினம். தமிழ்மக்கள் உச்ச வகையில் வாக்களித்தாலும் மட்டக்களப்பு - 5, திருக்கோணமலை - 2, அம்பாறை - 2 என மொத்தம் 9 ஆசனங் களையே கூட்டமைப்பினால் பெறமுடியும். மாகாண நிர்வாகத்தைக் கைப்பற் றுவதற்கு 19 ஆசனங்கள் தேவை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2 ஆசனங்களுக்கு மேல் கிடைக்கக் கூடிய நிலை இல்லை. இதனால் ஐக்கியதேசியக் கட்சி ஆதரவளித்தாலும் கூட்டமைப்பினால் நிர்வாகத்தைக் கைப்பற்ற முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஒருபேரினவாதக் கட்சி அதனுடன் கூட்டுச்சேர்வது எதிர்காலத் தமிழ் அரசியலுக்கு நல்லதல்ல. இன்னோர் சிங்கக் கொடியேற்றத்திலேயே அது கொண்டுபோய்விடும்.

இங்கு மீதமாக இருப்பது முஸ்லிம் காங்கிர சின் ஆதரவினைப் பெறுவதுதான். முஸ்லீம் சமூகம் அரசுடன் இணைந்திருப்பதே பாதுகாப்பானது எனக் கருதுவதனால் ஒருபோதும் கூட்டமைப் புடன் இணையப் போவதில்லை. ஆனால் கூட்டமைப்புடன் இணையப்போவதாகக் காட்டிக் கொண்டே அரசாங்கத்திடம் சலுகை பெற முயற்சிக்கும். கூட்டமைப்பு தேர்தலில் பங்குபற்றியதன் மூலம் செய்ததெல்லாம் முஸ்லீம் காங்கிரசின் பேரம் பேசும் பலத்தினை அதிகரித்தமைதான்.

எனவே நடைமுறை யதார்த்தம் கூட்டமைப்புக்கு கிடைக்கப்போவது எதிர்க்கட்சி ஸ்தானம்தான். இந்த ஸ்தானத்திற்காக தமிழ்த் தேசிய அரசியலை பலி கொடுக்க வேண்டுமா? தற்போதைய நிலையில் அரசியல் தீர்வுகள் எதுவும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை. இந்நிலையில் தமிழ்த் தேசிய அரசியலைத் தொடர்ச்சியாக தக்கவைப்பது எப்படி? என்பதில் தான் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். இந்த தக்கவைப்புத்தான் எதிர்காலத்திலாவது தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு அடிப்படை பலமாக அமையும். ஆனால் கூட்டமைப்பு எல்லாவற்றையும் போட்டுடைத்துள்ளது. ஒரு சிதைந்த இனக்குழுவாக தமிழ்மக் களைக் கொண்டு செல்வதற்கு அது வழிவகுத் துள்ளது.

தேர்தலில் பங்குபற்றுவதற்கு கூட்டமைப்பு கூறுகின்ற காரணம் பிள்ளையான்குழு, கருணாகுழு, ஈ.பி.டி.பி போன்ற தரப்புகள் வந்துவிடக்கூடாதென்பதாகும். அதுவே உண்மையென்றால் சுயேட்சைக்குழுவை தேர்தலில் நிறுத்தி அதனைத் தடுத்திருக்கலாம். அதன் மூலம் நேரடியாக போட்டியிடுவதில் வரும் கோட்பாட்டுச் சிதைவையும் தடுத்திருக்கலாம். ஆனால் அதுவே உண்மையான காரணம் அல்ல. அத்தேர்தலில் தமிழ்மக்களின் பிரதான கட்சி பங்குபற்றியதால் தமிழ் தேசிய அரசியலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரைகால தியாகம் நிறைந்த அரசியலைக் கீழிறக்கிவிட்டுள்ளது.

மகிந்தரின் விருப்பமும் மாகாணசபை அரசியலுக்குள் தமிழ் அரசியலை கிழிறக்குவதுதான் அந்த இலக்கில் கூட்டமைப்பு வேட்புமனுக்களை தாக்கல் செய்தபோதே அவர் வெற்றி பெற்றுவிட்டார். யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபை தேர்தலைப் போல அமைச்சர் பட்டாளத்தினை அவர் இந்தத் தேர்தலில் இறக்கவில்லை. ஏனெனில் தமிழ் வாக்குகள் அதிகளவில் கூட்டமைப்புக்கு விழுவதுதான் அவருக்கு வெற்றி.

தமிழ் மக்களை சிறிலங்கா அரசாங்கம் மற்றும் ஈ.பி.டி.பி, த.ம.வி.பு கட்சி ஆகியவற் றிடமிருந்து இருந்து மட்டுமல்ல தமிழ் தேசிய கூட்டமைப்பிடமிருந்தும் காப்பாற்றுவது எப்படி என்றும் யோசிப்பது தற்போது அவசியமாகியுள்ளது.

விசேட அரசியல் ஆய்வு

# ரெசோ மாநாடும்

## சந்தர்ப்பங்களை தொடர்ந்து தவறவிடும் தமிழ் அரசியல் தரப்புகளும்



கலைஞர் மு. கருணாநிதி அவர்களது தலைமையிலான ரெசோ மாநாடு கடந்த ஆகஸ்ட் 12 அன்று நடைபெற்று முடிந்துள்ளது.

பல்வேறு சர்ச்சைகளையும் தாண்டி ரெசோ மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது. அம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் போதுமான தெளிவும் காத்திரமான உள்ளடக்கமும் இன்றி அமைந்திருந்ததாயினும் ஐ.நா சபையில் இந்திய அரசாங்கம் ஈழத் தமிழர்கள் தமது அரசியல் நிலைப்பாட்டைத் தாமே தீர்மானிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் என்று முன்மொழிந்திருந்தமை முக்கியமானதொன்றாகும்.

இக்கட்டுரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றிய ஆய்வாக அன்றி தமிழ்த் தேசிய அரசியல் பார்வையிலிருந்து இம்மாநாட்டின் முக்கியத்துவம் பற்றி ஆராய்கின்றது.

வன்னியுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், போரை நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சியைக் கட்டுப்படுத்தி, யுத்தத்தை இடையூறின்றி முன்னெடுப்பதற்கு கருணாநிதி முழுமையான ஒத்துழைப்பை இலங்கை இந்திய அரசுகளுக்கு வழாங்கியிருந்தார். அதற்காக அவர் உண்ணாவிரதம் என்ற நாடகத்தினையும் மிகச் சிறப்பாக அரங்கேற்றியிருந்தார். அதன் மூலம் விடுதலைப் புலிகள் அழிக்கப்படுவதற்கும், பல இலட்சம் தொப்புள்க்கொடி இரத்த உறவுகள் கொல்லப்படுவதற்கும் அல்லது காணாமல் போகச் செய்யப்படுவதற்கும் துணை நின்றார். கடந்த ஆறரை தசாப்த காலத்தில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத துன்பங்களையும், துயரங்களையும், சோகங்களையும், பின்னடைவுகளையும், அழிவுகளையும் தாண்டி முன்னேறி சர்வதேச அங்கீகாரம் பெறும் தறுவாயில் இருந்த தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை இருந்த இடம்தெரியாமல் அழித்தொழிப்பதற்கு துணை நின்றார் கருணாநிதி. அவரது இந்த வஞ்சகச் செயலை தமிழினம் உள்ளவரை மறக்க முடியாது. ரெசோ மாநாட்டைப் பற்றிய மதிப்பீட்டை நாம் செய்யும் போது இவ்விடயத்தை பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆனால் நாம் இக்கட்டுரையினூடாக எழுப்ப விரும்பும் கேள்வி யாதெனில் இந்த ஒற்றைப் பரிமாண அரசியல் நிலைப்பாட்டிலிருந்து மட்டும் தானா இம்மாநாட்டை எடை போட வேண்டுமென்பது. தொடர்பிலாகும் பின்வரும் அடிப்படைகளில் நாம் ரெசோ மாநாட்டை விளங்கிக் கொள்வது முக்கியமானதாகின்றது.

1. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டின் போட்டி அரசியலுக்குள் ஒரு பக்கம் சார்ந்து நாம் ஒரு போதும் சார்பு நிலைப்பாடு எடுக்கக் கூடாது. இதை நாம் கடந்த காலத்தில் சரியாகச் செய்திருக்கின்றோமா? என்ற கேள்வியை எம்மை நாமேகேட்க வேண்டும். எமது நிலைப்பாடு தி.மு.க, அதி.மு.க என்ற சார்பு நிலையை எடுக்காமல் ஈழத்தமிழர் விவகாரத்தில் மட்டுமாவது தமக்கிடையில் இருக்கக் கூடிய வேறுபாடுகளைக் களைந்து இக்கட்சிகள் பொது இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும் என்பதாகும். அந்த வகையில் தமிழ் அரசியல் நிலைப்பட்டை முன்னிறுத்தி தமிழகத்தில் எந்தத் தரப்பினரும் எடுக்கும் முயற்சிகளில் நாம் தயக்கமின்றி பங்குபற்ற வேண்டும். அத்தகைய முயற்சிகளில் தமிழ்த் தேசத்தின் நலன் சார்ந்த தீர்மானங்களை கொண்டுவருவதற்கேற்ற வகையில் உறுதியான கருத்துக்களை முன்வைக்கப்படல் வேண்டும். அதேவேளை தமிழ்த் தேச நலன்சார் நிலைப்பாட்டை தரப்பொன்று எடுக்கத் தவறும் போது அது தொடர்பில் வெளிப்படையாக விமர்சிக்கவும் தயாராகவிருக்க வேண்டும். கடந்த வருடம் புதுடில்லியில் காங்கிரஸ் கூட்டிய மாநாட்டில் த.தே.ம.மு அதனை சரியாக செய்திருந்தது.

2. ஈழத் தமிழர் தொடர்பிலான இந்திய வெளிநாட்டுக் கொள்கை என்பது மத்திய அரசாங்கத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அந்த வகையில் ஈழத் தமிழர் தொடர்பில் இந்திய வெளிவிவகாரக் கொள்ளையைத் தீர்மானிப்பதில் தமிழ் நாட்டு சக்திகள் ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுப்பது இந்தத் தனியுடைமையை உடைப்பதற்கும், இந்திய வெளிவிகாரக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தவும் உதவக் கூடும். அத்தகைய முயற்கிகளுக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும்.

3. தமிழகத்தில் அரசியற் கட்சிகளாயினும் சரி அரசியற் செயற்பாட்டாளர்களாயினும் சரி ஏன் பொது மக்களும் கூட ஓர் உணர்வு பூர்வ அடிப்படையில் ஈழத் தமிழர்களோடு அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்றார்களேயன்றி எமது அரசியல் அபிலாசைகள் பற்றி ஆழமான புரிதலின்றியே இருக்கின்றனர். ரெசோ போன்ற மாநாடுகளைப் பயன்படுத்தி எமது அரசியல் பற்றிய பரந்துபட்ட, ஆழமான கருத்துருவாக்கத்தினை நாம் செய்ய முடியும்.

4. இம்மாநாட்டில் கலந்துகொண்ட வடநாட்டுத் தலைவர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து கலந்து கொண்டிருந்த பிரமுகர்களுக்கும், போர் முடிந்தாலும்கூட தமிழ் மக்களது பிரச்சினையை ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குள் தீர்க்க முடியாது என்ற யதார்த்தத்தை தெளிவுபடுத்துவதற்கான சந்தற்பமாக பயன்படுத்தியிருக்க முடியும்.

5. தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டது என்ற தோற்றப்பாட்டினை சர்வதேச ரீதியில் ஏற்படுத்துவதற்கான இராஜதந்திர நகர்வுகளில் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மேலும் 13 ம் திருத்தச் சட்டத்தினடிப்படையிலான மாகாண சபைக்குள் தமிழ் அரசியலை முடக்கிவிடுவதற்கு, மக்களது ஏகோபித்த ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பின் உதவியுடன் முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றது. இந் நிலையில், 13 அடிப்படையிலான தீர்வை ஏற்றுக்கொள்ள முடியாது அது நிராகரிக்கப்படல் வேண்டும், தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற தீவ்.மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் போர் அழிவுகளுக்குப் பின்னரும் தமிழ் மக்கள் சுயநிணர்ய உரிமைக் கோரிக்கைகளை கைவிடத் தயார் இல்லை என்ற செய்தியையும், அதில் நியாயம் உள்ளது என்ற செய்தியையும் சர்வதேச சமூகத்திற்கு கூறியருக்க முடியும்.

கலைஞர் கருணாநிதி 2009 இறுதியில் முள்ளிவாய்காகல் யுத்தத்தில் நடந்து கொண்ட விதம் தொடர்பில் அவர் மீது மன்னிக்க முடியாத கோபம் ஒன்று தமிழ் மக்கள் மத்தியில் இருப்பது விளங்கிக் கொள்ளக் கூடியதும் நியாயமானதும். மேலும் இம்முறை ரெசோ மாநாடு கூட்டப்படுவதற்கும் தனிப்பட்ட, கட்சி சார்ந்த நலன்களே முக்கியமானதாக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. டெசோ மாநாட்டின்போது தி.மு.வினர் கலைஞர் புகழ் பாடுவதிலேயே அதிக நேரம் செலவிட்டிருந்தனர் என்பதும் கவலைக்குரியதே. இருப்பினும் மேற் கூறிய காரணங்களுக்காக மட்டும் ரெசோ மாநாட்டைப் புறக்கணிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. ஏனெனில் தமிழ்த் தேசத்தின் நலனை முன்னெடுப்பதற்கு இம் மாநாட்டில் பங்குபற்றுவது முக்கியத்துவமுடையது என்ற முடிவுக்கு வருவோமாயின் மேற்படி காரணங்களுக்காக நாம் ஓதுங்கிக் கொள்வது தவறானதாகும்.

*இந்நிலையில் தமிழ் மக்களது பிரதான அரசியல் கட்சியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த அடிப்படையில் மேற்படி மாநாட்டைப் புறக்க ணித்திருந்தது என்பதனை நோக்குவோம்.*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரெசோ மாநாட்டில் பங்குபற்றாமைக்கான காரணம் அவர்களுக்கு மேற்கூறிய ஐந்து விடயங்களிலும் நம்பிக்கையில்லாமலும், விருப்பமின்றியும் இருப்பதாகும். இந்திய மத்திய அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் எந்தவொரு விடயத்திலும் பங்குபற்றக்கூடாது என்பது த.தே.கூ வினரின் நிலைப்பாடு. தமிழ் நாட்டு அரசியல், தமக்குப் பலம் அன்றி ஓர் முட்டுக்கட்டையென்றே த.தே.கூ எண்ணுகின்றது. திரு எம்.ஏ.சுமந்திரன் அவர்களால் மார்ச் 2012 ல் சென்னை லொயலா கல்லூரியில் ஆற்றிய உரை இதற்கு நல்ல உதாரணம். 13 வது திருத்தத்துடன் தமிழ் மக்களது பிரச்சினையை முடக்க முயலும் தமிழ்க் கூட்டமைப்பினருக்கு, அவர்கள் எடுத்துள்ள அரசியல் நிலைப்பாட்டை விஞ்சும் வகையிலான அரசியல் நிலைப்பாட்டை எந்தவொரு தரப்பு எடுத்தாலும் அது தமக்கு ஆபத்தானதென்றே அவர்கள் கருதுகின்றனர். அது கருணாநிதி தனது அரசியல் செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்காக நடத்தும் மாநாட்டில் கூட அவ்வாறானதொரு நிலைப்பாடு எடுக்கப்படுவது அபாயகரமானதென்றே அவர்கள் கருதுகின்றனர்.

இவை தவிரவும் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா அவர்கள் மாநாடு நடைபெறுவதற்கு ஒரு வாரம் முன்னதாக சென்னைக்குச் சென்று கருணாநிதியைச் சந்தித்திருந்தார். அதன்போது மாநாட்டில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானங்கள் என்ன என்பது பற்றியும், இதற்குத் யார் யாருக்கு அழைப்பு வழங்கப்படுகின்றது என்ற தகவல்களையும் அறிந்து கொண்டுள்ளார்.

ரெசோ மாநாடு மூலமாக ஐ.நா சபையில் இந்திய அரசாங்கம் ஈழத் தமிழர்கள் தமது அரசியல் நிலைப்பாட்டைத் தாமே தீர்மானிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்றும், தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படல் வேண்டும், 13ம் திருத்தத் சட்டம் அரசியல்த் தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாக அமைய முடியாது, அது நிராகரிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகள் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்களாலும் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராலும் மாநாட்டில்க் கலந்து கொள்வதற்கான நிபந்தனைகளாக கருணாநிதிக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் அறிந்து கொண்டுள்ளார்.

இந்நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரோ அன்றி கொள்கையில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கக்கூடிய புலம்பெயர் தமிழ் அமைப்புக்களைச் சார்ந்தவர்களோ கலந்துகொள்ளும் நிலையில் தாமும் கலந்துகொண்டால் டெல்கி மாநாட்டில் தமக்கு ஏற்பட்ட நிலை மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காகவே இம்முறை கூட்டமைப்பு ரெசோ மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு*

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கான அழைப்பு கிடைத்திருந்தது. அந்த அழைப்பின் அடிப்படையில் கட்சி உறுப்பினர்கள் சிலர் நுழைவுச் சீட்டிற்காக விண்ணப்பித்திருந்தபோதும் ஒருவருக்கு மாத்திரம் கடைசி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய வீசா அலுவலகத்தினால் வீசா வழாங்கப்பட்டிருக்கின்றது. அதன் பின்னர் அவர்கூட யாழில் இருந்து கொழும்பு சென்று சென்னை செல்வதற்கான நேர அவகாசம் அவருக்கு கிடைக்கவில்லை. அவர்களுக்கு வீசா கிடைத்து மாநாட்டிற்குச் சென்றிருந்தால், 13ம் திருத்தச்சட்ட நிராகரிப்பு, சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசத்தின் இறைமை உட்பட முக்கிய சில தீர்மானங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நின் றிருப்பார்கள். அதற்குக் கருணாநிதி ஒத்துக் கொண்டிருந்தால் அவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேறியிருக்கும். அதற்கு கருணாநிதி உடன்பட மறுத்தால் எதிர்த்து வெளியேறிருப்பார்கள் என்பது டில்லிக்கும் கருணாநிதிக்கும் நன்றாகத் தெரியும். ஏனெனில் புதுடில்லி மாநாட்டில் அதனை அவர்கள் செய்தவர்கள். அவ்வாறான தீர்மானம் ஒன்று தற்போது வருவதனை இந்தியா உடனடியாக விரும்பவில்லை. அதேவேளை மாநாட்டில் கலந்து கொள்ளும் ஈழத்தமிழர்கள் இவ்வாறான தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்பதற்காக எதிர்த்து வெளியேறுவதனை கருணாநிதி விரும்பியிருக்கவில்லை. எனவே இரண்டு தரப்பினருக்கும் ஏற்படக்கூடிய சங்கட நிலையைத் தடுப்பதற்காகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்ருக்கு வீசா அனுமதி புதுடில்லியினால் வழங்கப்பட்டவில்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது.

*ரெசோ மாநாடும் இந்திய பூகோள நலன்பேணும் நகர்வுகளும்*

– முல்லையூர் கருவேலன்

தென்னாசியாவின் பூகோள அரசியலில் இந்தியாவின் செயற்பாடுகளும் வகிபாகமும் மிகப்பிரதானமானது. இந்தியா தென்னாசியாவின் கட்டுப்பாட்டைத் தனது பிடியில் வைத்திருப்பதற்கான போட்டியில் சீனாவுடனும் மேற்கு நாடுகளுடனும் கடுமையான சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது. இதற்கு இலங்கை ஓர் பூகோள அமைவிடம். இலங்கையை மையப்படுத்தியே தென்னாசிய அரசியல் தற்போது நகர்கின்றது. தென்னாசியாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பும் தரப்பு இலங்கையை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும். இலங்கையை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அதன் ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுத்து அவர்களை தமது கட்டளைகளுக்கு இணங்க வைக்கவேண்டும். அவ்வாறு ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுத்து இலங்கையை கையாளவதற்கு தமிழர்களின் அரசியலே இந்தியாவிற்கும் ஏனைய வல்லாதிக்க சக்திகளுக்கும் ஓர் கருவி.

இந்நிலையில் இந்தியாவின் ஆளுங்கட்சியான காங்கிரசில் முக்கிய பங்காளியாக அங்கம் வகிக்கும் தி.மு.க வினால் தமிழ் மக்களின் பெயரில் ஓர் மாநாடு நடத்தப்படுகின்றதென்றால் அது சீனாவுடன் நெருங்கிச் செயற்படும் இலங்கை அரசாங்கத்திற்கு புதுடில்லியினால் வழங்கப்பட்ட ஓர் தெளிவான் செய்தியாகும். அதாவது சீனாவுடன் சென்றால் நாம் எத்தகைய நிலைப்பாட்டையும் எடுப்போம் என்பதே அதுவாகும். தமிழர்களை கருவியாகப் பயன்படுத்தி இந்திய நலன்களைப் பதுகாப்பதற்காக கூட்டப்பட்ட, இத்தகைய மாநாட் டில் தமிழ்த் தேசியவாத சக்திகள் பங்குபற்றி ஓர் ஆக்க பூர்வமான தீர்மானம் ஒன்றினை எடுத்திருந்தால், அது வெறுமனே தமிழர்கள் ஓர் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு இந்திய நலன்கள் அடையப்படுவதோடு மட்டும் நிற்காமல் தமிழர்களது நலன்களும் அடைந்து கொள்ள எதிர்காலத்தில் வழியேற்படுவதுவதாக அமைந்திருக்கும்.

எனினும் இந்மாநாட்டில் தேசம் என்ற அடிப்படையில்

(11ஆம் பக்கம் பார்க்க)

வன்னிக்களம்

# இனிமேல் இரணைமடு யாருக்கு?

■ வன்னிமகன்

இரணைமடு யாருக்கு? ஏழை விவசாயிகளுக்கா? சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளுக்கா? இத்தகைய கேள்விகள்தான் தற்போது தமிழ் மக்கள் மனங்களெங்கும் எழுந்து கொண்டிருக்கின்றது. மக்களுடைய சொத்தில் யாரோ ஆதிக்கம் செலுத்துகிறார்கள். மக்களுடைய சொத்தை யார் யாரோ தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சொத்துக்குரியவர்கள் மட்டும் வயிற்றில் ஈரத்துண்டைக் கட்டிக்கொண்டு படுக்கும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதுதான் இரணைமடுக் குளத்தினதும், குளத்தை நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான அப்பாவி அமைத்திருக்கும் தங்குமிடங்களுக்கும் நீரினால் ஆபத்து ஏற்பட்டுவிடும் என இராணுவத்தலைமை அச்சங்கொண்டது. இதன் தொடர்ச்சியாகவே குளத்தின் நீர் மட்டத்தை 5அடி தொடக்கம் 6அடி வரை குறைக்க வேண்டும் என இராணுவத்தினர் உத்தரவிட்டிருந்தனர். ஏனெனில் குறித்த இரணைமடு தளமே தற்போது வன்னிக்கான கட்டளை மையமாகவும் இருந்து வருகின்றது. வன்னி முழுமையாக கைப்பற்றப்பட்டதும் ஜனாதிபதி தனது முதலாவது அமைச்சரவை கூட்டத்தை கூட்டியிருந்ததும் இதே இரணைமடு தளத்திலேயேயாகும்.

இங்கு தங்கியுள்ள இராணுவ அதிகாரிகளது உத்தரவுக்கு கீழ்ப்படிந்து பொறுப்புவாய்ந்த சிவில் அதிகாரிகள் பெருமளவு நீரைத்திறந்து விட்டனர். அந்த நீர் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் எடுக்கவில்லை. ஆளுந்தரப்பு அரசியல் வாதிகளதும், ஆளுந்தரப்புக்கு எடுபிடிகளாக இயங்கும் கட்சி அரசியல் வாதிகளதும் அழுத்தங்களே காரணமாகும். இதனைப் பயன்படுத்தி அதிகாரிகளும் உரிய நடவடிக்களை மேற்கொள்ளாது அனுமதியின்றி நெல் விதைத்தவர்களிடம் எதையாவது பெற்றுக்கொண்டு அவற்றைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டார்களா, கிளிநொச்சியில் முக்கியமான பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர் ஒன்றரை நீர்ப்பங்கை வைத்துக் கொண்டு அதிகளவு நிலத்தில் விவசாயம் செய்திருக்கின்றார். அதனை அறிந்து கொண்ட கமக்கார அமைப்பு மேலதிக விதைப்பிற்கான தண்ணீரை வழங்க மறுத்தபோது அந்த அதிகாரி ஒரு தொலைபேசி அழைப்புத்தான் கொடுத்தாராம், அடுத்த சில மணிநேரத்தில் நிலை என்ன? விவசாயக் கடனை அரசு தள்ளுபடி செய்யுமா? அல்லது பயிர் அழிவுக்கான நஸ்ட ஈட்டை வழங்குமா? எதுவுமே கிடையாது. எனவே வெறுமனே கண்ணை மூடிக்கொண்டு மக்களை குற்றம் சாட்டுவதை அதிகாரிகள் முதலில் கைவிடவேண்டும். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் அந்தப்பகுதி இருந்தபோதும், இவ்வாறான வறட்சியும், அளவுக்கதிகமான மழைவீழ்ச்சியும் இருந்தது. அப்போதும் அணைக்கட்டு உறுதியற்ற நிலையில்தானிருந்தது.



விவசாயக் குடும்பங்களினதும் பரிதாபகரமான நிதர்சனம்.

இரணைமடுக்குளம் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்குள்ளே அமைந்துள்ளபோதும் அதன் பயன்பாடும், நிர்வக நடவடிக்கைகளும் கிளிநொச்சி மாவட்டத்திற்குள்ளேயே மேற்கொள்ளப்படுகின்றது. குளத்தின் உருவாக்கம், அதற்கான காரணம் குறித்தெல்லாம் பேச நாம் விரும்பவில்லை. தற்போது குளத்தை அடிப்படையாக வைத்து நடாத்தப்படும் அரசியல் குறித்தும், காரசாரமாக பேசப்பட்டுக் கொண்டிருக்கும் பிரதேசவாதம் குறித்துமே நாம் பேச விளைகின்றோம். இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீரைக் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ள செய்திகள் பூதாகரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையே முன்னிறுத்திக்கொண்டே கிளிநொச்சி மக்களுக்கே போதாமலிருக்கும் நிலையில் யாழ்ப்பாண மக்களுக்கு எப்படி நீரைக்கொண்டு செல்லமுடியும் என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது. நியாயமான கேள்விதான். யாரும் மறுக்கமுடியாத கேள்வியும் கூட. ஆனால் அதை பிரதேசவாதமாக யாரும் முன்னெடுக்கவேண்டாம். அறிவியல் ரீதியாக நடைமுறைச்சாத்தியமான வழிகளுக்கூடாக அதனை அணுகலாம். அது பற்றி விரிவாகவும் பார்க்கலாம்.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 34 அடிகளாகும். இறுதியுத்தத்தின் போது எறிகணைத் தாக்குதலினால் நீர் வெளியேற்றுப் பாதையின் கதவு ஒன்று சேதமடைந்திருந்தது. மற்றொன்று அணைக்கட்டுகள் நீண்டகாலம் புனரமைக்கப்படாத நிலையில் தளர்வடைந்து காணப்பட்டது. இதனால் கடந்த முறை பருவமழையின் போது 32அடி தண்ணீரை சேமிக்ககூடியதான நிலையிருந்தது. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக நம்பத்தகுந்த உள் தரப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

அதற்குள் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்க, நீர்வரத்தும், நீர்மட்டத்தின் உயர்வும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இந்நிலையில் குளத்தின் ஒரு புறத்தில் தற்போது இராணுவ பயன்பாட்டிலுள்ள விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்ட விமான ஓடுபாதை மற்றும் இராணுவத்தினர் பல இடங்களில் தேங்கி நின்றிருந்தமை மக்கள் அனைவரும் அறிந்தவொரு விடயமே. இதனை அதிகாரத்திலுள்ள சிலர் பூசி மெழுக முற்பட்டாலும் அதுவே மாற்றமில்லாத உண்மையாகும். மேலும் இதற்கு மக்களிடம் சாட்சிகளும் நிறையவே இருப்பதை அந்த அதிகாரிகள் புரிந்து கொண்டால் சரி.

இன்று 4ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்செய்கை நிலம் எரிந்து கருகிப் போயுள்ளதற்கும் அதனை நம்பியிருந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் கடனாளிகளாக கண்ணீரோடு நிற்பதற்கும் குளத்துநீர் திறந்துவிடப்பட்டமையே காரணமாகும். நாங்கள் நாய்களைப் போல் எங்கு அடிவிழுந்தாலும் பின்காலை தூக்குவதில்லை. வீழ்கின்ற எச்சில் துண்டங்களுக்காக பொய்களை விற்பவர்களுமில்லை. துப்பாக்கி முனை ஆட்சியில் வேலிக்கு ஓணான் சாட்சியாக அதிகாரிகளை அழைத்து வந்து பொய்ச் சாட்சியமளிக்க அச்சுறுத்துபவர்களுமில்லை. நடந்தது இதுதான் இதற்கு நூற்றுக்கணக்கான மக்களின் கண்ணீர் சாட்சிகளும் இருக்கின்றது என்பதை அவர்கள் அனைவரும் புரிந்து கொண்டால் சரி.

இந்த விவகாரத்தின் மற்றொரு பக்கத்தையும் பார்க்கலாம் இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கைக்கென சுமார் 8ஆயிரம் ஏக்கர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் இரணைமடுக் குளத்திலிருந்த 28அடி நீரை வைத்துக் கொண்டுதான் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தீர்மானிக்கப்பட்ட 8ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமானளவு வயல்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதியின்றி கூடுதலாக விதைத்தவர்கள் ஓரளவு வசதி படைத்தவர்களும், பதவி நிலைகளில் உள்ளவர்களுமாவர். தற்போதுள்ள ஆட்சியாளர்களுக்கு வால்பிடிக்கும் கட்சியின் அரசியல் வாதிகளது துணையுடனேயே இவர்களால் இவ்வாறு பயிரிட முடிந்தது.

இவ்வாறு மேலதிகமாக விதைக்கப்பட்டுள்ளமை பற்றி தாங்கள் அறியவில்லை எனக்கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தப்பித்துக் கொள்ள முயல்கின்றனர். எனினும் விவசாய அமைப்புக்களது கடுமையான எதிர்ப்புக்கள் காரணமாக அதுபற்றி விசாரிப்பதற்கு குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்தக் குழு விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகள் எதனையும் போதுமானளவு தண்ணீர் மேலதிகமாக விதைக்கப்பட்ட நிலத்திற்கு வழங்கப்பட்டது. குறித்த அதிபர் தனக்கிருந்த அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அந்த நீரை வலுக்கட்டாயமாகப் பெற்றுக்கொண்டார் என்பதே மறுக்க முடியாத உண்மை.

இது ஒன்று மட்டுமல்ல இப்படி பல உதாரணங்கள் இருக்கின்றன. அதிகாரிகள் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அனுமதியின்றி நெற்செய்கையில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு கொள்வதுடன், அனுமதியுடன் நெற்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு குளத்துநீர் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். மாறாக அங்கு தங்கியிருந்து கட்டைப்பஞ்சாயத்து அரசியல் செய்யும் ஆளும் தரப்பு அரசியல்வாதிகளுக்குப் பயந்து அல்லது அவர்களது கைப்பொம்மையாக இருந்தவாறு அனுமதியின்றி நெல்விதைத்தவர்களுக்கு நீர் வழங்குவதுடன், அனுமதிபெற்று நெற் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு நீர் வழங்காது அவர்களது வயல்கள் அழிவடையவும் காரணமாக இருந்துள்ளனர்.

கடந்தசில தினங்களுக்கு முன்னர் நீர்பாசனத் திணைக்களத்தின் அதிகாரியொருவர் நிர்ணயிக்கப்பட்ட ஏக்கருக்கும் அதிகமானளவு நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதை ஊடகமொன்றிற்குத் தெரிவித்த கருத்தில் ஒத்துக் கொண்டுள்ளார். உண்மையை வெளிப்படுத்தாமல் வாயை மூடிக்கொண்டிருந்துவிட்டு, பிரச்சினையொன்று வருகின்றபோது மக்கள் மீது பழியைப் போட்டுவிட்டு தான் தப்பிக்க முயன்றிருக்கின்றார். மக்கள் பொறுப்பற்று நடந்திருக்கின்றார்கள் என கூறியிருக்கின்ற அந்த அதிகாரி அதற்காக தமது தரப்பிலிருந்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை கூற மறந்துவிட்டார் .

அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் குளறுபடிகள் காரணமாக ஒட்டுமொத்தமாக 4ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டிருந்த நெல் அழிந்து போயிருக் கின்றது. ஏற்கனவே 2010 ம் ஆண்டு சிறுபோக விதைப்பிற்காக வங்கிகளில் பெற்ற கடன்களை மக்கள் இன்னமும் மீளச் செலுத்தாத நிலையில் வங்கி அதிகாரிகள் பொலிஸாருடன் விவசாயிகளை தேடி அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.


இந்த நிலையில் இவ்வாண்டும் சிறுபோகம் எரிந்து நாசமாகிப் போனால் அந்த விவசாயிகளின் ஆனால் அப்போது குளத்துநீரை மக்கள் சுதந்திரமாகவும், சிறப்பாகவும் முகாமை செய்தார் கள்.

இப்போதுபோல் வயல் வரம்புவரை அரசியல் வந்து நிற்கவில்லை. எனவே ஒட்டுமொத்த அதிகாரிகளினது பாராமுகமும், அரசியல் அதிகார மமதையும் சேர்ந்து ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடித்திருப்பதே உண்மையான கதை.

இவ்வாறாக ஒரு புறத்தில் இரணைமடுக் குளத்திற்கு மேற்பகுதியில் சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் இரகசியமான இராணுவமயமாக்கல் திட்டங்களைப் பாதிக்காமல் இருப்பதற்காக குளத்தின் பெரும்பகுதி நீர் திறந்துவிடப்படுவதனாலும், மறுபுறத்தில் அரசியல் வாதிகளதும், அதிகாரிகளதும் பொறுப்பற்ற செயற்பாடுகளாலும் அப்பாவி விவசாயிகளது நெற்செய்கை பாதிக்கப்படும்போது அதனை மூடி மறைப்பதற்காக பிரதேச வாதத்தை தூண்டி தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் முயற்சியில் சில அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் ஈடுபட்டுவருகின்றனர். எங்கள் மக்களுக்கே நீரில்லை அதில் யாழ்ப்பாண மக்களுக்கு வேறு நீரைக் கொண்டு செல்ல வேண்டுமா? என சிலர் பிழைப்பு வாதத்திற்கு பிரதேசவாதத்தை கிளப்பிவிடுகின்றார்கள்.

மக்கள் ஒருவிடயத்தை தெளிவாகவும் ஆழமாகவும் புரிந்துகொள்ளவேண்டும், நாங்கள் இன்று இவ்வளவு தூரம் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டு, அழிந்து இழிந்துபோயிருப்பதற்கு காரணம் எங்கள் மத்தியிலுள்ள சாதி, பிரதேசவாதம் போன்ற காரணங்களே. இந்தப் பேய்களை நாங்கள் துரத்தும் வரையில் எங்களை அழிப்பதற்கு வேறுயாரும் தேவையில்லை. ஒரு கட்டத்தில் நாங்களாகவே அழிந்துபோவோம்.

நாம் பிரச்சினைகளை சரியாகவும், யதார்த்தபூர்வமாகவும் அணுகவேண்டும். பிரச்சினைகளுக்கான காரணம் வேறு எங்கோ இருக்கின்றது. அதை நாங்கள் சரியாக புரிந்து கொண்டாகவேண்டும், குறிப்பாக பருவமழையின் போது மேலதிக நீரைத் திறந்துவிடும்படி இராணுவத்தினர் கேட்டதுங்கூட இந்த இரண்டு பிரதேசங்களுக்குமிடையில் ஒரு பிரச்சினையினை தோற்றுவிப்பதற்காக கூட இருக்கலாம். உண்மையில் இரணைமடு தமிழருக்கானதே.



## இன்றைய சர்வதேச அரசியற் சூழ் நிலையில்

# தமிழ் மக்களின் அரசியற் பலம்

**- கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - தலைவர், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி**

*2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் தமிழ் மக்களை தோல்வி மனப்பான்மைக்குள் தள்ளி பிறசக்திகளது நலன்களுக்காக தமிழ் மக்களை தவறான அரசியல் பாதையில் அழைத்துச் சென்று அரசியல் எதிர்காலத்தினை இருண்ட யுகத்திற்குள்தள்ளிவிட சில தரப்புகள் முயல்கின்றன. இம் முயற்சிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி, தமிழ் மக்கள் தெரிவு செய்ய வேண்டிய சரியான அரசியல் பாதையை எது என்பது பற்றி தினக்குரல் பத்திரிகைக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பு இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.*

தமிழ் மக்களால் கட்டியெழுப்பப்பட்ட போராட்டம் மிகப் பலமான தளத்தில் இருந்து அழிக்கப்பட்டுள்ளது என்ற கவலை இலங்கைத்தீவிலும், புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் தொடர்கின்றது.

சர்வதேச சமூகம் தனது பூகோள அரசியல் நலன்களை பேணுவதற்காக புலிகளை அழிக்க வேண்டும் என்ற தேவை அதற்கு இருந்த நிலையில், இந்தப் போராட்டத்தினை சர்வதேசத்தின் துணைகொண்டு அழிப்பதற்கான சந்தர்ப்பமானது இலங்கை அரசாங்கத்துக்குக் கிட்டியது. இதனையே இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தினை அழிப்பதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டது.

இச் சம்பவங்களை ஏன் தற்போது நினைவு கொள்கின்றோமெனின் அன்று எவ்வாறு தமிழ் மக்களது போராட்டத்தை அழிப்பதற்கு அரசாங்கத்திற்கு சந்தர்ப்பங்கள் கனிந்திருந்ததோ, அதேபோன்று இன்றைய பூகோள அரசியல் சூழலானது ஒருவகையில் தமிழர்களுக்கு வாய்ப்பான அரசியல் சூழலாக கனிந்துள்ளது என்பதனை எமது மக்களுக்கு வெளிப்படுத்துவதும், அதன் முக்கியத்துவத்தினை தெரியப்படுத்துவதுமே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்த வகையில் நோக்கினால், சர்வதேசம் பயங்கரவாதத்தை அழிப்பதாக கூறிக் கொண்டாலும் அவர்களைப் பொறுத்தவரையில் உண்மையில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளித்தமைக்கான காரணம் பூகோள அரசியல் இலாப நட்டக்கணக்கில் அன்றைய சூழ்நிலையில் அதுவே தமது நலன்களுக்கு உகந்தது என அவர்கள் கணக்கிட்டமையே ஆகும். அதுவே போராட்டம் அழிக்கப்படக் காரணமாயிற்று.

புலிகள் அமைப்பானது தேர்தல் அரசியலில் ஈடுபடாததன் காரணமாகவும் வேறு தரப்புக்கள் தேர்தல் அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தமையினாலும் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டமானது ஜனநாயகத்திற்கு மாறானது என சர்வதேசம் வியாக்கியானப்படுத்திய அதே வேளை மக்கள் இப் போராட்டத்தின் பின்னால் நிற்கின்றனர் என்ற யதார்த்தத்தினையும் சர்வதேசம் நிராகரித்தே தனது முடிவுகளை எடுத்திருந்தது.

இதனை வேறுவிதமாக கூறுவதாயின் நாங்கள் தனித்தேசம் எனவும் எங்களுக்கு என்று தனித்துவமான இறைமை இருக்கின்றது எனவும் நாம் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் எனவும் முன்வைக்கப்பட்ட நியாயபூர்வமான விடயங்களுக்குப் பின் மக்கள் உள்ளனர் என்பதற்கான நியாயங்களை புலிகள் முன்வைத்தபோது, விடுதலைப் புலிகள் நேரடியாகத் தேர்தல்களில் பங்கெடுக்காத அமைப்பு என்பதனை சாட்டாகக் கூறி அவர்களது நியாயங்களை சர்வதேசம் நிராகரித்து விட்டது. இந்த இடத்தில் கவனிக்கத்தக்க விடயம் யாதெனில் போராட்டத்தின் கொள்கையினை சர்வதேசம் நிராகரிக்கவில்லை. எனினும் போராட்டத்தின் இலக்காக முன்வைக்கப்பட்ட கொள்கைகளுக்கு மக்கள் அங்கீகாரம் இல்லை என்று கூறியே போராட்டத்தினை நசுக்க சர்வதேசம் துணை நின்றது. அடிப்படையில் சர்வதேச நியமங்களின் படி கருத்துச் சுதந்திரம் சர்வதேச சட்டத்தின் ஒரு கூறாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந் நிலையில் ஓர் அமைப்பின் கொள்கையினை தவறென வெளியுலகு ஓரங்கட்டிவிட முடியாது. எனினும் ஒரு அமைப்பின் கொள்கைக்கு மக்கள் அங்கீகாரம் இல்லை என்று கூறி அமைப்பின் செயற்பாடுகளை சர்வதேசம் கொச்சைப்படுத்தலாம். இதுவே எங்களது போராட்டத்திற்கும் நடந்தது. இது இவ்வாறிருக்க இன்றைய நிலையில் பல கேள்விகள் எம்முன் உள்ளன. அதில் மிகப் பலமாக இருந்த போராட்டம் அழிக்கப்பட்ட நிலையில் இப் போராட்டம் தாங்கி நின்ற கொள்கையினை தற்போதைய ஜனநாயக அரசியலுக்குள்ளாக நாம் முன்கொண்டுசெல்ல முடியுமா? என்ற நம்பிக்கையீனம் பலதரப்புக்களிடத்தில் உள்ளது என்பது கவனிக்கத்தக்கது. ஆகவே இது பற்றி கவனத்தினைச் செலுத்தவேண்டியுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் நாம் தெளிவுறவேண்டிய விடயங்கள் உள்ளன. அதாவது ஆயுதப் போராட்டத்தின் பின்னர் தமிழ் அரசியலானது முழுக்க முழுக்க ஜனநாயக அரசியலாகவே இருக்கப் போகின்றது. எனவே தேர்தல் வாயிலாக கொள்கைக்கு மக்கள் அளிக்கும் தீர்ப்பொன்றை பயங்கரவாதம் எனக்கூறி சர்வதேசம் நிராகரிக்க முடியாது. எனவேதான் சொல்லிலும் செயலிலும் தமிழ்த்தேசியக் கொள்கையினை முன்வைக்கின்ற ஒரு தரப்பிற்கு மக்கள் முழுமையாக வாக்களித்தால் அந்தக் கொள்கை எதுவாக இருந்தாலும் எந்தவொரு தரப்பும் அதனை கொச்சைப்படுத்த முடியாது. காரணம் தேர்தல் வழியாக மக்கள் அங்கீகாரம் இருக்கின்றது குறிப்பிட்ட கொள்கைக்கு ஆதாரமாக இருக்கின்றது என்பதனாலாகும்.

போர் நடைபெற்ற போது நிலவிய அரசியல் சூழல்களைக் காட்டிலும் தமிழ்த் தரப்பு நிலைமைகளை சாதகமாகப் பயன்படுத்தத் தக்க சூழ்நிலை இன்று உலக அரங்கில் காணப்படுகின்றது. எனவே எம் முன் உள்ள சர்வதேச அரசியற் சூழலை என்னவென நாம் விளங்கிக்கொண்டு பார்ப்போமானால் போர் நடைபெற்ற காலப் பகுதியில் தமிழர் தரப்பினை பயங்கரவாதிகள் எனவும் சிங்களத் தரப்பினரை பயங்கரவாதத்தினால் பாதிக்கப்படுபவர்கள் எனவும் சர்வதேசம் காட்டிக்கொண்டது. ஆனால் இன்றைய சூழலில் நிலைமைகள் மாற்றமடைந்து தமிழ்த் தரப்பானது பாதிக்கப்பட்ட தரப்பாகவும் சிங்களத்தரப்பானது போர்க்குற்றங்களை இழைத்து தமிழர்களின் உரிமைகளை மறுத்துச் செயற்படுகின்ற தரப்பாகவும் சர்வதேசம் ஆராயத்தொடங்கியுள்ளது.

இப்படியாக சர்வதேசத்தில் ஓர் அரசியற் சூழல் மாற்றம் ஏற்பட்டது தமிழ்த் தரப்பிற்கு முதலாவது சாதகமான நிலைமையாகும். அடுத்து இலங்கை விவகாரங்களில் அக்கறை கொண்டுள்ள அமெரிக்கா தலைமையிலான மேற்கு பிராந்திய வல்லரசான இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளின் நகர்வுகளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது. இதேவேளை இந்த மூன்று தரப்பு நாடுகளினதும் நகர்வுகளையும் நாம் அவதானிக்கையில் அந்நாடுகள் அவர்கள் சார்ந்த அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவேயுள்ளன. இவ்வாறாக தமது நலன்களை சாதித்துக்கொள்வதில் மூன்று தரப்பு சர்வதேச நாடுகளிடையேயும் போட்டியுள்ள நிலையில் சில விடயங்களில் இம் மூன்று தரப்பினரிடையேயும் ஒருமித்த கருத்துக்களும் இருக்கத்தான் செய்கின்றன. எனினும் இவற்றை சீர்தூக்கிப் பார்க்கையில் போட்டித் தன்மைக்கு உரிய விடயங்களே அதிகமாகவுள்ளன. இப்போட்டியில் ஒவ்வொரு தரப்பும் தமது நலன்களை இலக்காகக் கொண்டே இலங்கை அரசினை வழிநடத்துவதில் கண்ணும் கருத்துமாகவுள்ளன.

அதேவேளை இம் மூன்று சர்வதேசத் தரப்புக்களும் இலங்கையை சரியாகக் கையாள்வதற்கு பல்வேறு உபாயங்களையும் கருவிகளையும் கையாள்கின்றனர் என்பதை நாம் அறிவோம். இதில் ஒவ்வொரு நாடும் கையாளும் கருவிகளை நோக்குகையில் அதில் வர்த்தகம் மற்றும் நிதி மற்றும் நிதி சாராத உதவிகளை உதாரணப்படுத்திக் கூறமுடியும். எனினும் இவ் இடத்தில் தமது நலன்களை சிறந்த முறையில் நிறைவேற்றிக்கொள்வதில் இலங்கை விவகாரத்தில் அக்கறை காட்டும் நாடுகள் மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சி ஊடகச் சுதந்திரம் ஊழல் அற்ற நிர்வாகம் என்பற்றை ஏற்படுத்துதல் என்ற நீண்ட பட்டியலுக்கு உரிய விடயங்களையே அடுக்கிவிடலாம். இதே போன்று இலங்கை விவகாரங்களில் அக்கறை செலுத்தும் நாடுகள் இனப்பிரச்சினை என்பதனையும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்காக தாம் முன்வைக்கும் முக்கியமான விடயமாக பயன்படுத்துகின்றன. மேற்கூறப்பட்ட பட்டியலில் இருக்கத்தக்க விடயங்களில் இலங்கை விவகாரத்தில் அக்கறை செலுத்தும் மேற்குலகானது இலங்கை மீது மிகுந்த அதிருப்தியுடனேயே தனது அரசியல் நகர்வினை முன்னெடுத்து வருகின்றது.

கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டது போன்று இனப்பிரச்சினைத் தீர்வை மிக முக்கிய விடயமாக இலங்கையில் தலையீட்டைக் கொண்டுள்ள நாடுகள் முன்வைக்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி சகல தரப்புக்களும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வு என்று வரும்போது தமிழ்த் தரப்புக்களுக்கு இதில் ஓர் முக்கிய வகிபாகம் கிடைக்கின்றது. மேலும் இனப்பிரச்சினைத் தீர்வு என்பது தலையீடுகளுக்கு உரிய நாடுகளின் விடயத்தில் நின்று பார்க்கையில் எவ்வாறாகப் பெறுமானம் உடையது என்பது கூட மதிப்பிடத்தக்கது.

இலங்கை விவகாரத்தில் தலையிடும் ஒரு சர்வதேசதரப்பு நாடுகள் எதாவது ஒருவகையில் தமது நலன்களை நோக்காகக் கொண்டேனும் சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றினை பயன்படுத்தி இலங்கையை கட்டுப்படுத்த விளைவதை சர்வதேச அரங்கில் நாம் காணமுடிகின்றது. இப்படியாக சர்வதேச சமூகத்தின் ஒரு தரப்பானது இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து நெருக்கடிகளை ஏற்படுத்த முயல்கையில், அந்த சர்வதேச தரப்புக்குப் போட்டியாக இலங்கையில் தலையிட விரும்பும் சர்வதேச சமூகத்தின் மறு தரப்பொன்று, நெருக்கடியினால் இலங்கைக்கு ஏற்பட்ட அல்லது ஏற்படப்போகும் பாதிப்புக்களை இலகுவாக்கி நெருக்கடிக்குள் தள்ளிய விடயத்தினை தாம் நிவர்த்தி செய்துவிடலாம்.

குறிப்பாக பொருளாதார ரீதியாக ஒரு தரப்பு நாடுகள் கட்டுப்பாட்டை இலங்கை மீது விதிக்க முற்பட்டால், அதிலிருந்து மற்றொரு நாடு (சர்வதேசதரப்பு) தனது இலங்கை மீதான தலையீட்டுப் போட்டிக்காக பொருளாதார உதவிகளை வழங்கி காப்பாற்றி விடமுடியும்.

ஆனால் இலங்கை விவகாரங்கள் மீது அக்கறை கொண்டுள்ள சர்வதேச சமூகத்தின் ஏதாவதொரு தரப்பு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக இனப்பிரச்சினை என்ற விடயத்தினை முன்வைக்கின்ற நிலை ஏற்பட்டால் போட்டியடிப்படையில் தலையிடுகின்ற நாடுகள் இவ்விடயத்தை பதில் செயற்பாடு ஒன்றின் மூலம் நிவர்த்திக்கமுடியாத விடயமாகவே அமையும். ஒரு தரப்பினால் இனப்பிரச்சினை தீர்வு விடயம் அங்கீகரிக்கப்படுமாயின் மற்றத்தரப்பினால் அதனைத் தமது உதவிகளை வழங்கித் தகர்க்க முடியாது.

எனவே தான் இனப்பிரச்சினை சார்ந்த விடயம் இலங்கையில் விவகாரத்தில் அக்கறை செலுத்தும் நாடுகள், அதனை தமக்குரிய சிறந்த வாய்ப்பாக பயன்படுத்த முயல்கின்ற செயற்பாடானது தமிழ் மக்களுக்கு தமது உரிமைகளை அடைந்து கொள்ளுவதற்கான மிகச் சிறந்த சந்தர்ப்பமாக உருவாகி வருகின்றது. எனினும் தமிழ்த்தரப்பு தமக்கென உறுதியான அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருக்காவிடின் இனப்பிரச்சினை என்கின்ற விடயத்தை கையில் எடுக்க விரும்பும் ஒரு சர்வதேசத்தரப்பு தமது தேவைக்கு ஏற்ப குறைந்தபட்ச தீர்வை வலியுறுத்த முற்பட்டால் அதனை ஆதரிக்க வேண்டிய நிலை இன்னுமொரு சர்வதேச தரப்புக்கு ஏற்படுமாயின் தமிழ்த்தரப்பு பாதிக்கப்படும் நிலை உருவாகும். அதனால் தான் தமிழ் மக்கள் சார்பாக பேச்சுக்களில் ஈடுபடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்னும் விடயங்களில் விட்டுக் கொடுப்புக்கள் இன்றி உறுதியாக இருக்க வேண்டும் என நாம் வற்புறுத்துவதற்கான காரணமாகும்.

தமிழ் மக்கள் சர்வதேசத்துக்கும் முக்கியத்துவமுடைய தரப்பினராக இன்று உள்ளனர். இவ்வாறான முக்கியத்துவத்திற்குரிய தமிழ் மக்களால் வாக்களித்து தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு முக்கியத்துவம் கிட்டியுள்ளது. இவற்றின் அடிப்படையிலேயே கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் கூட அமைந்திருந்தது.

*தமிழர்களுக்கு எவ்வகையில் சர்வதேச அங்கீகாரம் முக்கியத்துவமுடையதாக உள்ளதோ அதற்குச் சமமான அளவு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சர்வதேசத் தரப்புக்களுக்கும் தமிழர் தரப்பு தவிர்க்க முடியாத* தேவையாகவுள்ளது. இவ்வாறான மதிப்பீடுகளை சீர்தூக்கிப் பார்க்கையில் தமிழ் மக்கள் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் அரசியல் ரீதியாக மிகப் பலமான நிலையில் உள்ளோம் என்பதனை நாம் அனைவரும் மனதில் கொண்டு தாயகம், தேசம், சுயநிர்ணயம் என்ற அடிப்படை விடயங்களில் விட்டுக் கொடுப்புக்கள் இன்றி எமது அரசியல் நிலைப்பாட்டை வலியுறுத்த வேண்டும். எமது மக்கள் நம்பிக்கையிழந்து துவண்டுவிட வேண்டியதில்லை.

**நன்றி : தினக்குரல் நாளிதழ்**

## கிழக்கு மாகாண தேர்தலில் கூட்டமைப்பு

# இந்திய - சிறிலங்கா அரசுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏதுவாக செயற்பட முடிவெடுத்தால் அது ஒரு வரலாற்று தவறாக மாறிவிடும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடுவதால் தமிழ்த்தேசிய அரசியலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை தவிர்க்க வேண்டும் என்ற நோக்கில் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாக கூட்டமைப்பை நோக்கி பரணி கிருஸ்ணரஜனி, யாழினி ரவிச்சந்திரன் ஆகியோரால் உளவியலாளர் குழு சார்பாக முன்வைக்கப்பட்ட அறிக்கை.

கடந்த 3 மாத காலமாக "போருக்குப் பின் பெண்கள் சிறார்கள் உளவியலும் அதை ஆற்றுப்படுத்தலும்" என்ற கருப் பொருளில் தாயகத்தில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நாம் மேற்கொண்ட ஒரு சுயாதீன ஆய்வின் முடிவிலிருந்து சில முடிவுகளை தமிழ்த் தேசியத்தின் பால் அக்கறையுள்ள அனைவருக்கும் தெரியப்படுத்த விரும்புகிறோம். இங்கு எமது ஆய்வின் பிரதான நோக்கமான பெண்கள், சிறார்களின் உளவியல் குறித்து நாம் பேச முன் வரவில்லை. எமது பல்கலைக்கழக ஆய்விற்காகவும் அனைத்துலக தொண்டு நிறுவனங்களுக்கும் மனித உரிமை அமைப்புக்களிற்கும் சமர்ப்பிப்பதற்காகவுமே நாம் அந்த ஆய்வை மேற்கொண்டோம். அதை நாம் சம்பந்தபட்டவர்களிடம் சமர்ப்பிப்போம். நாம் இங்கு பேச விரும்புவதும் சுட்டிக்காட்ட விரும்புவதும் வேறு சில முடிவுகள் தொடர்பானது. எமக்கு அந்த கடமையும் அதற்கான உரிமையும் இருக்கிறது என்று நம்புகிறோம்.

அதாவது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டை நீர்த்து போகச்செய்யும் வகையில் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கை பிரித்து தனித்தனியாக மாகாணசபைத்தேர்தலை சிறீலங்கா அரசு நடாத்த இருக்கிறது. அதில் கூட்டமைப்பும் போட்டியிட இருப்பதை நாம் அறிவோம். இப்போது எமது ஆய்வின் முடிவுகளையும் கூட்டமைப்பின் முடிவையும் ஒப்பிட்டு இதன் சாதக பாதக நிலமைகளை நாம் பேச விரும்புகிறோம்.

அண்மையில் தமிழ் சிவில் சமூகம் கிழக்கு மகாணசபை தேர்தலில் கூட்டமைப்பு பங்கு கொள்வது தொடர்பாக கூட்டமைப்பை விளித்து விடுத்த அறிக்கை ஒரு காத்திரமான நடவடிக்கையும் வரலாற்றின் போக்கில் மிக முக்கியமான பதிவு என்றும் கருதுகிறோம். எனவே அதில் பேசப்பட்ட விடயங்களை முழுமையாக உள் வாங்கிக்கொண்டு எமது கருத்துக்களை பேச விரும்புகிறோம். இது தொடர்பான ஆழமான அறிக்கை ஒன்றை நாம் வெளியிட உத்தேசித்திருந்த போதிலும் கிழக்கு மகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு பங்கெடுக்க இருப்பதால் அதற்கு முன்பாக சுருக்கமாக இந்த விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நாங்கள் அரசியல் விவகாரங்களின் பின்னுள்ள உளவியலை ஆராய்பவர்கள். ஆகவே நேரடி அரசியல் தரவுகளை புள்ளிவிபரங்களை தவிர்த்து அந்த கிழக்கு மாகாண மக்களின் உளவியலின் பின்னணியில் சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

### கிழக்கு மாகாணம்

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கிய முழுமையான தமிழர் தாயகப் பகுதி இது. கிழக்கு மகாண மக்களின் அரசியல் சார்ந்த உளவியலை 3 பகுதிகளாக நாம் இங்கு பிரித்து பார்க்க வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

01. அதாவது தமிழீழ விடுதலையோடு தம்மை முழுமையாக இணைத்திருந்த ஒரு காலகட்டம் (2004 எப்ரல் வரையானது இது)

02. அடுத்து 2004 இலிருந்து 2009 மே முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடந்து முடிந்த காலப்பகுதியும் அதற்கு சற்று பின்னரும்.. (2010 நடுப்பகுதிவரை இதைக் குறிப்பிடலாம்)

03. தற்போதைய காலப்பகுதி முழுமையான தேசிய சிந்தனையோடு இருந்த கிழக்கு மக்களின் உளவியல் எதிரிகளினதும் சில அந்நிய சக்திகளினதும் நிகழ்ச்சி நிரலின் விளைவாக ஒரு வரலாற்றுத் துரோகத்தினூடாக 2004 ஏப்ரலில் முழுமையாக துண்டாடப்பட்டது.

மிகவும் தந்திரோபாயமான வகையில் மிகவும் நுட்பமாக தமிழ்த்தேசிய சிந்தனையில் இருந்த அவர்களது உளவியல் பகுதி பகுதியாக சிதைக்கப்பட்டது. 2009 வரை அவர்களில் பெரும்பாலோனோர் அந்த சிதைக்கப்பட்ட உளவியலுக்குள்ளேயே இருந்தார்கள் என்பதை நாம் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. நடந்த இனப்படுகொலையும் அதன் பின்னான ஆக்கிரமிப்பு அடக்குமுறை நிகழ்வுகளும் அவர்களின் தேசிய சிந்தனை உளவியலை மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறது. மெதுவாக ஆனால் உறுதியாக கிளர்ந்தெழத் தொடங்கியுள்ளார்கள் கிழக்கு மக்கள். நாம் எமது ஆய்வில் கண்டடைந்திருக்கும் பேருண்மை இது.

வடக்கு தமிழர்களிடம்கூட இல்லாத தேசிய சிந்தனையை நாம் எமது ஆய்வினூடாக அவதானித்தோம். இது ஒன்றும் பூடகமான விடயமும் அல்ல. ஏனெனில் வடக்கு மக்களை விட கிழக்கு மக்கள் மும்முனை நெருக்கடியை சந்தித்துள்ளார்கள். அதாவது சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் நெருக்கடி ஒருபுறமும் முஸ்லிம் தலைமைகளின் அரச நிகழ்ச்சி நிரலின் விளைவான அழுத்தங்கள் ஒரு புறமும் தம்மை தேசிய சிந்தனையில் இருந்து துண்டாடி தம்மை நடுத்தெருவில் விட்டு விட்டு சிங்களத்துடன் கூடிக்குலாவும் துரோகிகளின் நிலைப்பாடுகளும் அவர்களை மீண்டும் தேசியத்தின் பால் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.



வடக்கைப்போல் ஆக்கிரமிப்பு அடக்குமுறை நிகழ்வுகள் பெருமளவில் வெளியாக தெரியாத நிலையில் (தெரியாத படி உட்புறமாகத் தாளிடப் பட்ட சூழல்) கிழக்கு மக்கள் ஒவ்வொருவரினதும் தமக்கான நீதியை தாமே பெற வேண்டும் என்ற தனிமனித உளவியல் ஒரு கூட்டு உளவியல் பரிமாணத்தை பெற்றிருக்கிறது. இதை கூட்டமைப்பு கவனத்தில் கொள்ள வேண்டும். எமக்கான அரசியல் இந்த உளவியல் பின்னணியிலேயே கட்டமைக்கப்பட வேண்டும்.

### கூட்டமைப்பு ஏன் போட்டியிடுகிறது?

கூட்டமைப்பு பிரிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு பல்வேறு நியாயங்களை முன்வைத்து வருகிறது. அனைத்துமே தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய வாதங்களாக அன்றி மக்களின் உடனடி சிக்கல்களை தீர்க்கக்கூடிய ஆக்கிரமிப்புக்களை தற்காலிகமாக தடுக்கக்கூடியது என்பதனை மக்களை முன்னிறுத்திய வாதங்களாகவே உள்ளன. ஆனால் மக்களின் உளவியல் நிரந்தர அரசியல் தீர்வை நோக்கியதான தேசிய சிந்தனையோடு ஒட்டிய உளவியலாக உருவெடுத்திருப்பதை கூட்டமைப்பு புரிந்து கொள்ளவில்லை அல்லது புரிந்து கொள்ள மறுக்கிறது என்று சொல்லலாம். இந்த நிலையிலேயே மாற்று அரசியல் போக்கும் சிவில் சமூகத்தின் பங்களிப்பும் தலையீடும் அவசியமாகிறது.

கொஞ்சம் பின்னோக்கி போவோம். 2004 பின் புலிகளின் நிர்வாகத்திற்கு எதிராக வெளிப்படையாகத் தூண்டப்பட்ட பிரதேசவாதத்தினால் அங்கு குழப்பங்கள் ஏற்பட்டியருந்தது உண்மையே. அவாறான தொரு புறச்சூழல் உருவாக்கப்பட்டிருந்ததை நாம் மறக்ககூடாது. ஆனால் தற்போது நிலைமை தமிழ்த்தேசியத்திற்கு சார்பாக திரும்பியிருக்கிறது.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்தாயகத்திற்காக 100 விழுக்காடு வாக்குகள் கிழக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்படும். எமது ஆய்வில் மக்கள் இதை தெளிவாகவே பதிவு செய்திருக்கிறார்கள்.

கூட்டமைப்பை தற்போது தமது அரசியல் சக்திகள் என்று கிழக்கு மக்கள் நம்புவதை கூட்டமைப்பு தேர்தல் வாக்குகளுக்காக பயன் படுத்தக்கூடாது. மாறாக வடக்கு கிழக்கு இணைப்பிற்கு அதை பயன்படுத்த வேண்டும். இதுதான் சாதுரியமான அரசியல் மட்டுமல்ல சாணக்கியத் தனமானதும்கூட..

ஒரு முதியவர் கூறினார்" கூட்டமைப்பு சார்பாக ஒரு நாயை கொண்டு வந்து நிறுத்துங்கள். அதை வெற்றிபெறச் செய்து காட்டுகிறோம்" என்று.. இது அந்த ஒட்டுமொத்த ம்க்களின் குரல் என்பதை நாம் எமது ஆய் வினூடாக அவதானித்தோம். ஒன்றை பதிவு செய்ய விரும்புகி றோம். எந்தவிதமான அச்சுறுத்தல் களும் இன்றி சுதந்திரமாக தேர்தல் நடைபெறும் பட்சத்தில் கூட்டமைப்பு வெற்றி பெறுவது மட்டுமல்ல அரசு வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தையும் இழப்பார்கள்.

மக்கள் அவ்வளவு தெளிவாக இருக்கிறார்கள். ஆனால் தேர்தல் நேர்மையாக நடைபெறும் என்று கூட்டமைப்பு நம்புகிறதா?

இந்தக்கணம் வரை பல வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டிருப்பதாகவும் ஆயுதக்குழுக்கள் நடமாட்டம் இருப்பதாகவும் கூட்டமைப்பே முறைப்பாட்டை வெளியிட்டிருக்கிறது. ஏன் இந்த முரண்பாடு? சுதந்திரமாக - ஜனநாயக முறைப்படி நடக்கபோவதில்லை என்று தெரிந் தும் தாயக கோட்பாட்டை சிதைக்கும் இந்த தேர்தலில் ஏன் கூட்டமைப்பு பங்கு பற்றுகிறது?

### தேர்தலில் பங்கு கொள்வதற்கான முன் நிபந்தனைகள்.

01. இணைந்திருந்த மகாணங்களை சட்ட திருத்தங்களினூடாக பிரித்த அரசின் தேர்தலில் கலந்து கொள்வதற்கு முன்பாக தமிழ் மக்களின் பிரதிநிதி என்று கூறிக்கொள்ளும் கூட்டமைப்பு ஏன் சில நிபந்தனைகளை அரசுக்கு முன்வைக்கவில்லை?

02. அனைத்துலக சமூகத்தின் நேரடி கண்காணிப்பை அழுத்தமாக கோர வேண்டும். இல்லையேல் தேர்தலில் கலந்து கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

03. முழுமையான தமிழர் தாயகமாக இருந்த கிழக்கு மாகாணம் படிப்படியாக ஆக்கிரமிக் கப்பட்டு தமிழர்கள் விகிதாசாரம் குறைக்கப்பட் டிருக்கிறது. மூவின மக்களும் செறிந்து வாழும் பகுதியாக கிழக்கு மாகாணம் தற்போது மாற்றப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் தேர்தல் அடிப்படையில் எப்படி தமிழர் தாயக கோட்பாட் டிற்கு வலுச்சேர்க்கும் என்று கூட்டமைப்பு நம்புகிறது.

04. முஸ்லிம் தலைவர்கள் சிறீலங்கா அரசின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே தொடாந்து செயற்பட்டு வருகிறார்கள். முஸ்லிம்களுடன் சமரசம் செய்து அவர்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்படாமல் தமிழர் தாயகக் கோட்போடு பூர்த்தியடையாது. இது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அதற்கு இந்தத் தேர்தல் உதவப்போவதில்லை என்பதை கூட்டமைப்பு உணரவேண்டும். அதற்கு வேறு மாற்று வழிகளை இரு தரப்பு சிவில் சமூக பிரதிநிதிகளே முன்வைக்க வேண்டும்.

05. இந்தியா பிராந்தியத்தில் ஒரு மறுக்க முடியாத சக்தி என்றும் அதன் அறிவுரைகளை தொடர்ந்து செவி மடுக்கும் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் பங்கு கொள்வதற்கு முன்பாக ஏன் இலங்கை இந்திய ஒப்பந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைப்பு குறித்து இந்திய அரசிற்கு எந்த முன்நிபந்தனையையும் வைக்கவில்லை. எதற்குமே பெறுமதியில்லாத 13 வது திருத்த சட்டத்தை முன்மொழிவதற்கு ஒரு மக்கள் கட்சியோ ஏன் தேர்தல்கூட தேவையில்லை என்பதை கூட்டமைப்பு உணராதது துரதிஸ்டவசமானது.

### எமது முடிவும் கருதுகோளும்

எமது ஆய்வின்போது மட்டக்களப்பில் ஒரு பாடசாலை அதிபர் கூறினார்" கருணா என்ற ஒரு தனிமனிதனை வைத்து ஒட்டுமொத்த கிழக்கு மக்களையும் மதிப்பிடாதீர்கள். நாம் என்றும் தேசியத்தின் பக்கமே. இடையில் நடந்தது துரதிஸ்டமே " என்று.. இந்தக் குரலை ஒட்டுமொத்த கிழக்கு மக்களுமே ஏதோ ஒரு வகையில் வெளிப்படுத்தினார்கள்.

எனவே இந்த எழுச்சியை -- மக்களின் தேசிய சிந்தனையை தேர்தல் அரசியலுக்குள் புதைக்காமல் தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்ற தாயகக் கோட்பாட்டை நோக்கி வளர்த்துச் செல்ல வேண்டியது கூட்டமைப்பின் கடமை.

நடந்த இனப்படுகொலையும், போர்க்குற்றங்களும் அதன் விளைவாக ஒட்டு மொத்த தமிழ் மக்களின் தற்போதைய எழுச்சியும் ஒரு அனைத் துலக பொறிமுறையை உருவாக்குவதற்கான துருப்புச் சீட்டாக மாறியிருக்கிறது. இதை சாத் தியப்படுத்தியவர்கள் அந்த மண்ணில் வீழ்ந்த மக்களும் இளைஞர் யுவதிகளுமே என்பதை கூட்டமைப்பு மறந்து விடக்கூடாது.

சிறீலங்காவின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கி கையிலிருக்கும் ஒரே ஒரு துருப்பு சீட்டையும் கொடுத்துவிட்டு கூட்டமைப்பு எப்படி ஆட்டத்தை தொடரப்போகிறது என்பது நமக்கு புரியவில்லை. தேர்தலில் பங்கு கொள்வது என்ற கடுமையான யதார்த்தத்தை தமிழ் சிவில் சமூகம் போல் நாமும் புரிந்து கொள்கிறோம். எனவே சிவில் சமூகத் தின் அறிக்கையிலும் எமது ஆய்விலும் இருக்கும் மக்கள் சார் உளவியலையும் கவனத்தில் கொண்டு அடுத்த கட்டத்திற்கு நகருமாறு கூட்ட மைப்பை தாழ்மையுடன் கேட்டு கொள்கிறோம்.

மாறாக இந்திய - சிறீலங்கா நிகழ்ச்சி நிரலுக்கு ஏதுவாக செயற்பட முடிவடுத்தால் அது ஒரு வரலாற்றுத் தவறாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது. விளைவாக நிலப்பறிப்புக்களும் ஆக்கிரமிப்புக்களும் அடக்குமுறைகளும் தொடரும்போது "தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்ற வரலாற்று வசனத்தை உதிர்த்துவிட்டு நீங்கள் கையை விரிக்கும்போது எழுச்சி கொண்டு கிளர்ந்தெழத்தயாராக நிற்கும் அந்த மக்கள் மீண்டும் ஒரு வன்முறை நோக்கி தள்ளப்படுவதற்கான எல்லா புறநிலைகளும் உளவியலும் அந்த கிழக்கு மண்ணில் கருக் கொண்டுள்ளது. உங்கள் தவறான நடைமுறையின் வழி இன்னொரு வன்முறைச் சூழலுக்கு அத்திவாரமிட்ட பழியை கூட்டமைப்பு பெறும் என்பதில் எந்த மாற்றமுமில்லை.

எழுச்சியும் கொண்டு தேசிய சிந்தனையில் ஒருமுகப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மக்களை ஒருங்கிணைத்து அனைத்துலக பொறிமுறை யினூடாக தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றப்போகிறதா? அல்லது.... நாம் கூட்டமைப்பிடம் பதிலை எதிர்பார்க்க வில்லை... செயலைத்தான் எதிர்பார்க்கிறோம்..

# “நாங்கள் ராணுவத்தால் சூழ

## யாழ்.ஆயர் மேதகு தோமஸ் செ

தமிழ் மக்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டபோதும் முகாம்களில் அடைக்கப்பட்டுப் பல்வேறு இன்னல்களுக்குள்ளானபோதும் யாழ் ஆயர் இல்லம் ஏதாவது அறிக்கை விடாதா வத்திக்கான் எங்களுக்கு ஏதாவது உதவாதா என்று தமிழ் மக்கள் ஏங்கிக் கொண்டிருந்தனர்.

யாழ் ஆயர் இல்லம் தமிழ் மக்கள் நிலை குறித்துத் தொடர்ந்து பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டது.

*யுத்தத்திற்குப் பிறகு, இப்போது அம்மக்களின் நிலை குறித்து நீங்கள் அக்கறை காட்டி வருகிறீர்களா? வடக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் தற்போதைய நிலை என்ன?*

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் முடிந்துவிட்டன. இத்தறுவாயில் இன்னும் அங்கு வாழும் மக்கள் அமைதியான சூழலில் வாழ்வதுபோலத் தோன்றவில்லை. முக்கியமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் வைக்கப்பட்டிருந்த கிட்டத்தட்ட இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அவரவர் இடங்களுக்குப் போக வேண்டும். ஆனால் அதற்குப் பல தடைகள் இருந்தன. ஆனால் இப்போது கிட்டத்தட்ட எண்பது சதவீத மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஆனால் அங்கே அவர்கள் அமைதியாக வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது. பலவிதமான கட்டுப்பாடுகளுக்கும் நெருக்கடிகளுக்குமிடையேதான் அவர்கள் வாழ வேண்டியிருக்கிறது. மீள்குடியேற்றம் என்பது முழுமையானதாக இருக்க வேண்டும்.

*யுத்தத்தின் விளைவாகத் தமிழ் மக்கள் துன்பப்பட்ட போதெல்லாம் உங்களைப் போன்ற கத்தோலிக்க மத குருமார்கள் தொடர்ந்து குரல் கொடுத்துவந்துள்ளார்கள். இது பலனளித்திருக்கிறதா?*

நிச்சயமாகப் பயனுள்ளதாக இருந்திருக்கிறது. ஏனெனில் யுத்த காலத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று ஒருவரும் இருந்திருக்கவில்லை. அண்மையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் அவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு முன்பு தமிழ் மக்களுக்காகப் பேசுவதற்கு யாரும் இருந்திருக்கவில்லை. ஆகையால் கத்தோலிக்கத் திருச்சபைக்குத் தன் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டிய தேவை இருந்தது. அரசியல் என்பது சமயத்துக்கு அப்பாற்பட்டது என்றாலும் அரசியல்வாதிகள் யாரும் இல்லாத நேரத்தில் யாழ்ப்பாணத் திருச்சபை மக்களுக்காகக் குரல்கொடுத்து அவர்களின் அவல நிலையை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. மக்கள் சார்பாக நாம் நின்றோம்.

*யாழ்ப்பாணம் வரும் உலகப் பிரதிநிதிகள் உங்களைச் சந்திக்கிறார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக எத்தகைய மனநிலையைக் கொண்டிருக்கிறார்கள்?*

அவர்கள் இங்கு வரும்போது ஆயரைச் சந்திக்க விரும்புவதற்குக் காரணம் நாங்கள் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் கட்சி சார்பு இல்லாமல் உண்மை நிலையைச் சொல்லுவோம் என்பதுதான். இங்கு வரும் பிரதிநிதிகளுக்கு எப்போதும் மக்களின் நிலைமைகளை விளக்குகிறோம். எங்களை வந்து சந்தித்துப் பேசும்போது அவர்களுக்கு முழுமையான தோற்றம் கிடைப்பதாக நம்புகிறார்கள். திருச்சபையிடமிருந்து அவர்கள் உண்மையான நிலவரங்களை அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். தமது அறிக்கைகளில் எங்கள் கருத்துகளை அவதானிக்கிறார்கள்.

*சுஸ்மா சுவராஜ் தலைமையிலான இந்தியத் தூதுக் குழுவினர் வந்து உங்களைச் சந்தித்தார்களா?*

இந்தியத் தூதுக் குழுவினர் எங்களைச் சந்திக்கவில்லை. கருத்து எதுவும் கேட்கவுமில்லை.

> **எங்களின் சனங்கள் செத்து மடிந்துவிட்டார்கள். ஆகையால் இந்த நிலையில் இந்தியாவை நாங்கள் நம்பத் தயாராக இல்லை. இந்தியா நினைத்தால் இலங் கைத் தமிழர்களுக்கு ஏதாவது செய்யலாம். ஆனால் அவர்களும் அரசியல் சித்து விளையாட்டை விளையாடிக்கொண் டிருக்கிறார்கள்.**

*அவர்கள் வேண்டுமென்றே உங்களைச் சந்திப்பதைத் தவிர்த்தார்கள் என்று நினைக்கிறீர்களா?*

இல்லை இல்லை. அப்படி நினைக்கவில்லை.

*இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிடமிருந்து பெரிதாக எதிர்பார்த்தார்கள். அந்த நம்பிக்கை அவர்களுக்கு இன்னும் இருக்கிறதா?*

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியாவின் மீதான நம்பிக்கை போய்விட்டது. ஏனென்றால் கடந்த காலப் போரின்போது இந்தியா எங்களை முற்றாகக் கைவிட்டது. நானும் மற்ற ஆயர்களும் யுத்த காலத்தில் நேரடியாக இந்தியத் தூதராலயத்துக்குப் போய் ‘சனங்கள் ஒவ்வொரு நாளும் செத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். என்னசெய்யப் போகிறீர்கள்?’ என்று கேட்டபோது ‘ஒரு கட்டம் வரும். அப்போது நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம்’ என்று சொன்னார்கள். ஆனால் எங்களின் சனங்கள் செத்து மடிந்துவிட்டார்கள். ஆகையால் இந்த நிலையில் இந்தியாவை நாங்கள் நம்பத் தயாராக இல்லை. இந்தியா நினைத்தால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏதாவது செய்யலாம். ஆனால் அவர்களும் அரசியல் சித்து விளையாட்டை விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். ராஜபக்ஷ அரசாங்கம் இப்போது சீனாவைச் சார்ந்து போய்க் கொண்டிருக்கிறது. சீனாவுக்குப் பின்னால் இலங்கை போய் விடும் என்னும் பயம் இந்தியாவுக்கு இருக்கிறது. ஆனால் தமிழருக்கு இந்தியாவால் எந்தப் பயனும் இப்போது இல்லை என்றுதான் நான் சொல்வேன்.

*முக்கியமான இரண்டு நிறுவனங்கள் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை செலுத்துகின்றன. ஒன்று உங்களுடைய கத்தோலிக்கத் திருச்சபை. மற்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகம். நீங்கள் யாழ் பல்கலைக்கழகத்தோடு இணைந்து தமிழ் மக்களுக்கான வேலைத்திட்டங்கள் எதையாவது செய்துவருகிறீர்களா?*

இல்லை. இல்லை. பல்கலைக்கழகத்தோடு இணைந்து வேலைசெய்வதில்லை. ஆனால் அவர்களின் கருத்துகளைக் கவனித்து அவற்றுக்கு மதிப்பளித்துவருகிறோம்.

*யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதிக்கு அண்மையில் எப்போதாவது சென்றீர்களா? அங்கு அழிக்கப்பட்ட தேவாலயங்களின் தற்போதைய நிலைமை என்னவாக இருக்கிறது?*

அண்மையில் வன்னிக்குப் போய் வந்தேன். அங்கு தேவாலயங்கள் திருத்த வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. வன்னியில் 12 பங்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு பங்குக்கும் ஆறு அல்லது ஏழு தேவாலயங்கள் இருக்கின்றன. அங்கு தேவாலயங்களைத் திருத்தி வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. அங்குக் குருமாரை அனுப்ப வேண்டியிருக்கிறது. புதுக்குடியிருப்பில் புனித சூசையப்பர் ஆலயம் முற்றாகக் குண்டுவீச்சில் பழுதடைந்துவிட்டது.

*வன்னிக்குப் போயிருந்தபோது மக்கள் உங்களிடம் என்ன முறையிட்டார்கள்?*

அங்கே போனவுடன் மக்கள் எங்களிடம் கேட்ட முதல் வேண்டுகோள், ஒரு பாதரைத் தாருங்கள் என்பதுதான். ஏனெனில் ராணுவத்தால் சூழப்பட்ட இடத்தில் பாதர் இருந்தால் தாங்கள் பாதுகாப்பாக இருப்போம் என்று மக்கள் நினைக்கிறார்கள். தலைமைத்துவமாக நின்று அவர் பேசுவார் என்று மக்கள் நினைக்கிறார்கள். எல்லாத் தேவாலயங்களிலும் எங்களால் பாதரை நியமிக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு பங்குக்கும் ஒவ்வொரு பாதரை நியமித்து நாங்கள் அந்த மக்களைப் பாதுகாத்துவருகிறோம்.

*ஆலயங்களைத் திருத்துவதற்கு இலங்கை அரசாங்கம் உங்களுக்கு உதவுகிறதா?*

(சிரித்துக்கொண்டே சொல்கிறார்) இலங்கை அரசாங்கம் மக்களுக்குத் தேவையான வீட்டுத் திட்டத்தையே நிறைவேற்ற முடியாமல் இருக்கும்போது எப்படி ஆலயங்களுக்கு உதவுவார்கள்?

*வன்னி மக்களின் வீடுகள் எல்லாமே அழிந்துபோய் இருக்கின்றனவா? நீங்கள் போய்ப் பார்த்தபோது எப்படி இருந்தன?*

கிட்டத்தட்ட எண்பது சதவீதமான வீடுகள் அழிந்துபோய்விட்டன. அங்கு மக்கள் வசிக்க முடியாது. வீடுகளைக் கட்டுவது அரசாங்கத்தின் முக்கியமான பணிகளில் ஒன்று. ஆனால் அதைச் செய்வதற்கு அவர்கள் முயலவில்லை. தொண்டு நிறுவனங்களையும் உள்ளே அனுமதிப்பதில்லை. இப்போது ஓரிரு தொண்டு நிறுவனத்தினர் வேலைசெய்கிறார்கள். அது போதவே போதாது. திருச்சபையைப் பொறுத்தவரை நாங்களும் சில வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருகிறோம். பெரிய அளவிலான உதவி அந்த மக்களுக்குத் தேவைப் படுகிறது. இந்திய அரசாங்கம் மக்களுக்கு வீடுகளைக் கட்டித்தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் செயலில் ஒன்றுமே இல்லை. மக்களுக்குச் சொந்த இடம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் வீடு கட்டித்தருவார்கள். மக்களுக்குச் சொந்த இடம் இல்லை. அது அவர்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.



*மக்கள் வன்னியில் அவர்களின் சொந்த இடத்தில்தானே இருந்தார்கள்? அங்கிருந்துதானே துரத்தப்பட்டார்கள்?*

தங்கள் சொந்த இடத்தை உறுதிப்படுத்த அவர்களிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை. யுத்தத்தில் அகதிகளாக ஓடிக்கொண்டிருந்தபோது அழிந்துவிட்டன. அவலப்பட்ட மக்களாகத் தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.


*இந்தியா பெரிய அளவில் முன்னெடுத்த தமிழ் மக்களுக்காக ஐம்பதாயிரம் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

இந்தியா பெரிய அளவில் அதைப் பிரச்சாரம் செய்தது. இப்போதும் அதைப் பற்றி இந்தியா சொல்லிவருகிறது. தமிழ் மக்களுக்கு எல்லாவற்றையும் செய்துதருவதாக இந்தியா வாக்களிக்கிறது.

அந்த நேரத்தில் அதைக் கேட்ட உடனேயே தமிழ் மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இப்போது வெறுமனே ஆயிரம் வீடுகள் மட்டுமே கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். இந்தியா ஏமாற்றிவிட்டதோ என்று தமிழ் மக்கள் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

*மக்களின் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நீங்கள் அரசுடன் ஏதாவது பேசியிருக்கிறீர்களா?*

ஒருமுறை அல்ல பலமுறை பேசியிருக்கிறோம். அவர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. விவசாயம் மீன்பிடி முதலான தமிழ் மக்களின் வாழ்வாதாரம் சார்ந்த தொழில்களுக்கு உதவ வேண்டும். ஆனால் அரசு முழுமையாக எதையும் செய்யவில்லை. சிங்கள மக்கள் வாழும் பகுதிகளின் வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவமளிக்கும் அரசாங்கம் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள எந்த முயற்சியும் மேற்கோள்ள முன்வராதது கவலை அளிக்கிறது. பாதைகள் போடப்படுகின்றன. பாலங்கள்



# சூழப்பட்டிருக்கிறோம்”

## ஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை



கட்டப்படுகின்றன ஆனால் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை.

*இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கம் இழுத்தடிப்பதற்கு என்ன காரணம்?*

தமிழர்களுக்கு இப்போது ஒன்றும் செய்யத் தேவையில்லை என்று இலங்கை அரசாங்கம் நினைக்கிறது. சாலை அமைத்தல் மின்சாரம் கொண்டுவருதல் போன்று சில பணிகளைச் செய்வதன் மூலம் சர்வதேசச் சமுதாயத்தை



ஏமாற்ற நினைக்கிறது. இது வண்டிக்கு முன்னால் கட்ட வேண்டிய மாட்டைப் பின்னால் கட்டுவது போன்றதாகும். அரசாங்கம் எத்தகைய வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டாலும் அவற்றில் தமிழருக்கும் சமபங்கு அளிக்க வேண்டும். எங்களுக்கும் அதில் உரிமை இருக்கிறது. தமிழர்கள் இந்த நாட்டு மக்கள். சிங்களவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் அனைத்தையும் அவர்களும் அனுபவிக்க வேண்டும். எல்லோரும் சமமானவர்கள் என்னும் உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அந்த மனநிலை ஆட்சியாளர்களுக்கு வர வேண்டும்.

*யாழ்ப்பாணத்தில் ராணுவத்தின் நெருக்கடிகள் அதிகரித்திருப்பதாக நாங்கள் அறிகிறோம். நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறீர்கள் அங்கு நிலைமை எப்படி இருக்கிறது?*

போருக்குப் பிறகு வடக்கு - கிழக்குத் தமிழர் பகுதிகளில் இருந்துவரும் ராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்னும் எதிர்பார்ப்பு எங்களுக்கு இருந்தது. ராணுவத்தினர் மீண்டும் தத்தம் இடங்களுக்குத் திரும்பிவிடுவார்கள் என்று நினைத்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை. ராணுவம் மேலும் அதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கிறது. அது மக்களின் இயல்பு வாழ்க்கையை முழுமையாகப் பாதிக்கிறது என்பது உண்மைதான். ராணுவக் குறைப்பு மிகவும் அவசியம் என்பதை நாங்கள் அரசாங்கத்துக்குச் சொல்லியுமிருக்கிறோம். இப்படிச் சொல்லும்போது இன்னும் பயங்கரவாத ஆபத்து இருப்பதால் ராணுவத்தைக் குறைக்க முடியாது என்று அரசாங்கம் சொல்கிறது. நாங்கள் ராணுவத்தால் சூழப்பட்டிருக்கிறோம் எனபதுதான் உண்மை. யாழ்ப்பாணத்தை மட்டும் கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் ராணுவத்தினர் சூழ்ந்திருக்கிறார்கள். சில இடங்களில் ராணுவம் மட்டும் தான் இருக்கிறது. நாங்கள் அச்சத்தோடு வாழ்கிறோம். சில இடங்களில் திடீர்ச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. வன்னிப் பிரதேசங்களில் இந்த நிலைமை கடுமையாக இருக்கிறது. புலிகள் மீண்டும் வந்துவிடுவார்களோ என்ற அச்சம் ராணுவத்தினர் மத்தியில் இருக்கிறது. சில இடங்களில் மீன்பிடிக்கக்கூடத் தமிழர்களை ராணுவம் அனுமதிப்பதில்லை. ஆனால் சிங்கள மீனவர்கள் ராணுவத்தின் உதவியோடு மீன்பிடிக்கிறார்கள். அது தமிழ் மக்கள் மத்தியில் கசப்பான விடயமாகும். எப்படி வாழ்வது என்ற கவலை எங்களுக்கு இருக்கிறது. ராணுவத்தினருடன் நாம் போய்க் கதைப்போம். ஆனால் சில விடயங்களைத் தங்களால் எதுவும் செய்ய முடியாது ஏனெனில் அது மேலிட உத்தரவு என்று சொல்வார்கள். பிரச்சினை என்னவெனில் அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சகம் ஆகியவை என்ன சொல்கிறதோ அதன்படி அவர்கள் நடப்பதாகத் தெரிகிறது.

*யாழ்ப்பாணத்தில் பொதுநிகழ்ச்சிகளில் ராணுவம் பங்கேற்பதாகத் தெரிகிறது. இதன் பின்னணி என்ன?*

பொதுமக்களோடு தங்களை இணைத்துக்கொண்டு பணியாற்ற ராணுவம் நினைக்கிறது. ஆனால் ராணுவம் என்றால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அச்சுறுத்தக் கூடிய ஒரு அமைப்புதான். அதைத் தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்புவதில்லை.

*யுத்தம் முடிவடைந்த பிறகு தமிழ்க் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்படுகிறது என்ற அச்சம் தெரிவிக்கப்படுகிறது. அது சரியா?*

ஒரு பக்கத்தில் அரசாங்கம் புத்த சமயத்தைப் பரப்புவதற்கு முயல்வது தெளிவாகத் தெரிகிறது. ஏனென்றால் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் புத்தருடைய சிலைகள் வைக்கப்பட்டு விகாரைகளும் கட்டப்படுகின்றன. இதுவும் தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித அச்ச நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. அங்கு வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் இந்துமக்கள். அவர்கள் வாழும் இடங்களில் புத்த விகாரைகளோ புத்தர் சிலைகளோ எதற்கு? முன்பு மக்கள் கட்டுப்பாடுகளோடு இருந்தார்கள். போர் அவர்களை வேறு விடயங்கள் எதையும் யோசிக்க விடாது தடுத்திருந்தது. போர் முடிந்தவுடன் மக்கள் ஒருவிதச் சுதந்திர மனநிலையை உணருகிறார்கள். எல்லாவகையான போதைப் பொருட்களும் யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைக்கின்றன. இது இளைஞர்களைத் திசைதிருப்பிவிடுகிறது. சீரழிவுக்கு இதெல்லாம் காரணம் என்று நினைக்கிறேன்.

அங்கு இருக்கும் இன்னுமொரு பிரச்சினையைப் பற்றியும் இங்கே சொல்ல வேண்டும். ராணுவம் விவசாய நிலங்களையும் மற்ற நிலப்பகுதிகளையும் அபகரித்திருப்பதால் விவசாயம் கைத்தொழில் போன்றவை முடங்கிப் போயிருக்கின்றன. தமிழ் மக்களுடைய வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பது பெருந்துயரம். நாற்பதாயிரம் ராணுவத்தினர் பெரும்பாலான நிலங்களை அபகரித்திருக்கிறார்கள். அது விவசாயிகளுக்குப் பாரியதொரு பிரச்சினை. பாதுகாப்பு என்னும் பெயரில் அவர்களின் நிலங்களைக் கேள்வியில்லாமல் ராணுவத்தால் பிடுங்கிக்கொள்ள முடியும்.

*வன்னியிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணத்துக்கு வந்த மக்களுடைய நிலவரம் எவ்வாறு இருக்கிறது?*

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குப் போய் யுத்தகளத்தில் அகப்பட்டவர்களில் அகதிகளாக மெனிக்பாம் முகாமில் இருந்தவர்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகக் குடியமர்த்தப்பட்டுவிட்டார்கள். ஆனால் வீடுவாசல்கள் இல்லாமல் எப்படித்தான் குடியமர்த்துதல் என்ற சொல்லைப் பிரயோகிப்பது? அவர்களுக்குத் தொழில்செய்ய உதவ வேண்டும். ஆனால் அவர்களுக்கு மகிழ்ச்சியளித்தது ஒரேயொரு விடயம்தான். தமது சொந்த இடத்துக்குப் போய்த் தங்கள் காணியில் இருக்கும் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடித்ததுதான் அது. ஆனால் ஒரு சிறிய குடிசை போட்டு அதில் வாழ்வதற்குக்கூட வழியில்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்கள் யுத்தத்தில் எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள். அவர்களிடம் பணம் இல்லை. வேறு எதுவுமே இல்லை.

*யுத்தத்தால் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள், யுத்தத்தால் கணவனை இழந்த விதவைகள் ஆகியோர் பெரும் நெருக்கடியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே?*

யுத்தக் கைதிகளாக இருந்து இப்போது விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுடைய நிலைமை பெருந்துன்பமானது. அவர்கள் எப்போதும் கண் காணிக்கப்படுகிறார்கள். விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் சுதந்திரமானவர்களாக இல்லை. அவர்கள் மாதம் ஒருமுறையோ இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையோ ராணுவ முகாம்களுக்குப் போய்க் கையெழுத்திட வேண்டும். இது அச்சமூட்டும் நிலைமை. அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படாவிட்டால் தவறான வழிகளுக்குப் போய்விடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுக்குள் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் அவர்களது மன ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதற்கும் தொழில் வாய்ப்புகள் அவசியம். இதைச் செய்வதில் இலங்கை அரசு அதிக அக்கறைகாட்ட வேண்டும்.

*முன்னாள் பெண் போராளிகளின் நிலைமை எப்படி இருக்கிறது? ஏனெனில் அவர்களைத் திருமணம் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் யாரும் முன்வராத நிலைமை காணப்படுவதாகக் கேள்விப்படுகிறோம்?*

பொதுவாக அப்படி நான் கேள்விப்படவில்லை. சில இடங்களில் அப்படி இருக்கலாம். இங்கு ஒரு விடயத்தைச் சொல்ல வேண்டும். கிட்டத்தட்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாற்பதினாயிரம் விதவைகள் இருக்கிறார்கள் அவர்களின் நிலைமைதான் மோசம். அவர்கள் மறுவாழ்வு பெற வேண்டும். குடும்ப பாரம் முழுக்க அவர்களின் தலையில் இருக்கிறது அதைச் சுமப்பது அவர்களுக்குப் பெரும் சிக்கலாக இருக்கிறது. இவர்களுக்கு வங்கிகள் மூலமாகச் சில உதவிகள் செய்யப்படுகின்றன. ஆனால் அது யானைப் பசிக்குச் சோளப்பொரி போட்ட மாதிரித்தான் இருக்கிறது.

*யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கடத்தல்களை யார் செய்வது? தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினை இருக்கிறது அல்லவா?*

ஆள் கடத்தல்கள் வெள்ளை வேன் கடத்தல்கள் கொழும்பில் அதிகமாக நடக்கின்றன. யாழ்ப்பாணத்திலும் நடக்கின்றன. சிலர் அச்சத்தின் காரணமாக வெளியில் சொல்லாமல் இருக்கிறார்கள். கடத்தல்களுக்கு யார் காரணம்? ராணுவத்துக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறதா? வேறு கட்சிகளுக்குத் தொடர்பு இருக்கிறதா என்னும் குழப்பமான நிலையே நிலவுகிறது. எங்களுடைய பாதிரிமார் இரண்டுபேரைக்கூட மக்களின் கண் முன்னால் கடத்திக்கொண்டு போனார்கள். அவர்கள் இன்னும்கூட விடுவிக்கப்படவில்லை. ஆள் கடத்தல் என்பது பெரிய பிரச்சினை.

*எல்: எல். ஆர். சி. என அழைக்கப்படும் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் நீங்கள் சாட்சியமளித்தீர்கள். அவர்களிடம் என்ன சொன்னீர்கள்?*

ஆம். சாட்சியமளித்தேன். அதில் ‘கடத்தப்பட்ட மக்களை விடுவியுங்கள். காணாமல்போன ஆட்களைப் பற்றிய தகவல்களைத் தாருங்கள்’ என்று கேட்டேன் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் அல்ல என்ற விடயத்தையும் அவர்களுக்குச் சொன்னேன். தமிழர்களுக்குச் சம உரிமை வேண்டும், அவர்களது மொழி, கலாசாரத்தைப் பின்பற்றுவதற்கான சூழல் ஒன்றுபட்ட இலங்கைக்குள் உருவாக்கப்பட வேண்டும்.

*எல். எல். ஆர். சி. அறிக்கையைப் படித்தீர்களா? அது தமிழர்களுக்கு ஏதாவது பயனள்ள விடயத்தைச் சொல்லியிருக்கிறதா?*

அது முழுமையான அறிக்கை என்று சொல்வதற்கில்லை. அந்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டதே சர்வதேசச் சமுதாயத்திடமிருந்து வந்த அழுத்தங்களைச் சமாளிப்பதற்காகத்தான். அதில் உள்ள சில அம்சங்கள் ஓரளவு பயனுள்ளவை. அவற்றையாவது அமுல்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும். ஆனால் அரசாங்கம் அதை அலட்சியப்படுத்துகிறது. இலங்கை அரசாங்கத்துக்குத் தமிழ் மக்கள்மீது எந்தவிதமான அக்கறையும் இல்லைப்போலத்தான் தோன்றுகிறது.

சர்வதேசச் சமுதாயத்தின் அழுத்தங்கள் இல்லாவிடில் எதுவும் நடக்காது எனச் சந்தேகிக்கத் தோன்றுகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்திற்குப் பிறகு இலங்கை அரசு கொஞ்சம் பயந்ததுபோல் காணப்படுகிறது. இலங்கை அரசை மனித உரிமைகளுக்கு எதிரான அரசாக சர்வதேசச் சமுதாயம் நோக்குகிறது என்னும் விடயம் இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விஷயம்.

நாங்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக எங்களுடைய கத்தோலிக்க ஆயர் சங்கத்தினூடாக வத்திக்கானுக்கு அறிக்கை சமர்ப்பித்துக்கொண்டிருக்கிறோம். ஆயர்களாகிய நாங்கள் வருடத்துக்கு மூன்றுமுறை சந்திப்போம். அங்கு வத்திக்கானின் பிரதிநிதியும் எங்களோடு இருப்பார்.

அங்கு பேசும்போது எங்களுடைய நாட்டின் நிலைமைகள், அரசியல் நிலைமை, மக்களின் நிலைமை தொடர்பாகப் பேசுவோம் அறிக்கையிடுவோம். எனக்குச் சொல்ல முடிந்ததெல்லாம் இவைதாம்: நாங்கள் தமிழர்கள். சிங்களவர்களுக்குச் சமமான உரிமை எங்களுக்கும் இருக்கிறது. அதை முழுமையாக நாங்களும் அனுபவிக்க வேண்டும். தமிழ் மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இவற்றைத்தான் நான் மீண்டும் அழுத்திச் சொல்வேன்.

நன்றி - காலச்சுவடு



# அரசியற் தலைவர்கள், மக்களது இறுதி மரியாதையுடன் டெல்றொக்சனின் இறுதிப் பயணம்

அந்தக்கிராமத்தை பொறுத்தவரையில் டெல்றொக்சனின் மறைவு ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாகவே மனதளவினில் இருந்தது. மரணங்கள் மலிந்து விட்ட பூமியினில் இத்தகைய இழப்புக்களொன்றும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் புதியதல்ல.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுவது போன்று தமிழினத்திற்கு எதிராக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுவரும், வன்செயல்களின் ஒரு பாகமாகவே நிமலரூபனதும், டெல்றொக்சனினதும் படுகொலைகளை நாங்கள் பார்க்க வேண்டும். இந்த படுகொலைகள் வெறுமனே ஒரு அரசாங்கத்தின் இனவாதப்போக்கை காண்பிக்கவில்லை. ஒட்டுமொத்த சிங்கள அரசாங்கங்களினதும் இனாவாதப்போக்கையே காண்பிக்கின்றது. இதை நாங்கள் சரியாக புரிந்து கொண்டு, இந்தப் பிரச்சினைகளை சரியான பின்னணியில் அணுகவேண்டும். அல்லாதுபோனால் நிச்சயமாக இந்தப் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாதென்பதே உண்மையாகும்.

தன்னுடைய இனத்திற்காக சேவை செய்யும் நோக்கத்தில் செயற்பட்டதற்காக அவர் கைது செய்யப்பட்டிருந்தார். கைதுசெய்யப்பட்டிருந்தும்



தன்னுடைய இனத்திற்கான விடுதலை நோக்கிச் செல்லவேண்டும் என்ற உறுதியான கொள்கையோடு நின்றிருந்தார். தன்னுடைய மக்கள் எந்த தரப்பினரால் பாதிக்கப்படுகின்றார்களோ அந்தத் தரப்பின் சட்ட ஒழுங்குகளுக்கும் அமைவாக தனது பக்க நிலைப்பாட்டை கூறி தன்னுடைய தனிப்பட்ட விடுதலைக்காக காத்துக் கொண்டிருந்தவர். ஆனால் அந்தத் தரப்பு தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டு நீதியைக் கொடுக்காமல் கொலை செய்திருக்கின்றது. ஆகவே டெல் றொக்சனின் கொலையின் உண்மையான, ஆழமான நிலையினை சரியாக அறிந்துகொள்ள வேண்டும். இன்று இலங்கை தன்னையொரு ஜனநாயக நாடு என கூறிக் கொள்கின்றது. ஜனநாயகத்தின் முக்கியமான அம்சம் சட்டத்தின் ஆட்சி, அதாவது அந்த நாட்டின் சட்டத்திற்கு அமைவாகவே அனைத்து விடயங்களும் இடம்பெறவேண்டும்.

அந்த வகையில்தான் தன்னுடைய விடுதலையினை வாதாடி எடுக்கத்தயாராக இருந்தபோது அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். இதன் அர்த்தம் உண்மையில் இலங்கையில் ஜனநாயகம் என்பது இல்லை என்பதே. இதேபோல் இன்றுள்ள இந்த அரசு மட்டும்தான் இவ்வாறு செயற்படுகின்றது என்றில்லை. காலத்திற்குக் காலம் இருந்த அத்தனை அரசாங்கங்களும் இதையேதான் செய்திருந்தன. வெலிக்கடையில் நடந்தபோது வேறு அரசாங்கம், வேறு கட்சி ஆட்சியிலிருந்தது, அது போலத்தான் காலத்திற்குக் காலம் தமிழினப் படுகொலைகளின் போது வேறு வேறு அர சாங்கங்களும், கட்சிகளுமே ஆட்சியிலிருந்தன.

எனவே இக்கொலைச் சம்பவங்கள் இன்றுள்ள இந்த அரசாங்கத்தின் இனவாதப் போக்கை மட்டும் காட்டவில்லை. மாறாக ஒட்டுமொத்த சிங்கள அரசாங்கங்களினதும் இனவாதப் போக்கையே காட்டிக் கொண்டிருக்கின்றது. இன்று நாம் டெல்றொக்சனின் படுகொலையை கண்டித்து ஒரு கூட்டத்தை நடத்துவதால் மட்டும் பயனில்லை.


அவற்றின் மூலம் இவ்வாறான படுகொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியினை எம்மால் நிச்சயமாக வைக்க முடியாது. படுகொலைக்கான நோக்கங்களை சரியான பின்னணியில் அணுகாவிட்டால் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காணமாட்டோம். இதனை தமிழினத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்செயல்களின் அங்கமாகவே நாம் பார்க்கவேண்டுமெனவும் அவர் டெல்றொக்சனது இறுதி அஞ்சலியின் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

சிறைச்சாலை படுகொலைகள் குட்டிமணி, தங்கத்துரை காலம் தொடக்கம் இடம்பெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. ஆனால் இந்தப் படுகொலைகள் எவற்றிற்கும் நீதியான விசாரணைகள் இடம்பெறவில்லை. இதற்குக் காரணம் படுகொலை செய்யப்படுகிறவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதே.

இறந்தவரின் உடலுக்கு சுதந்திரமாக இறுதியஞ்சலி செலுத்த அனுமதிக்காத, சுயநினைவிழந்து கிடப்பவருக்கு காலில் விலங்கு பூட்டியிருக்கின்ற இந்த மோசமான அரசாங்கத்தின் கீழேதான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனினும் இதனை தொடர்ந்தும் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்கிறார் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஸ் பிறேமச்சந்திரன்.

இது அரசாங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு கொலை. வவுனியா சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைத்திகள் எல்லோரும் அடித்து துன்புறுத்தப்பட்டு இதன் பின்னர் அனுராதபுரம் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்தும் மிகமோசமான துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இதில் டெல்றொக்சனுக்கு முன்னதாக நிமலரூபன் கொலை செய்யப்பட்டார். அவரது உடல் 23 நாட்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னதாகவே வவுனியாவில் அவரது சொந்த ஊருக்கு எடுத்துவரப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவ்வாறு உடலை கொண்டு வருவதற்கும் கூட அரசாங்கம் அனுமதிக்கவில்லை. பின்னர் நீதிமன்றத்தை நாடி உயர் நீதிமன்றில் அனுமதி பெற்றே உடலை சொந்த ஊரில் நல்லடக்கம் செய்ய முடிந்தது. டெல்றொக்சனின் இறுதிச் சடங்கும் கூட பல கஸ்டங்களுக்கு மத்தியில் தான் இடம்பெற்றிருக்கின்றது.கறுப்பு கொடிகள் கட்டக் கூடாது, வாத்தியங்கள் இசைக்க கூடாது, என பல அழுத்தங்கள் போடப்படுகின்றன. எனவே இந்த நாடு எப்போதும் ஜனநாயக சூழலில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒன்றில் இராணுவ நெருக்குவாரங்கள் இருக்கின்றன. அல்லது பொலிஸ் நெருக்குவாரங்கள் இருக்கின்றன. சாதாரணமாக வீட்டில் நடக்கின்ற நிகழ்வுகளுக்கும் கூட அனுமதி பெறவேண்டிய நிலையில் இன்று தமிழர்கள் இருந்து கொண்டிருக்கின்றோம்.



டெல்றொக்சனுடனிருந்த சக கைதிகளும் கடுமையாக தாக்கப்பட்டிருக்கின்றனர். பல கைதிகள் கைமுறிந்தும், கால் முறிந்தும் இன்னமும் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருக்கின்றார்கள். அவர்களை நாம் சிறைச்சாலைக்குச் சென்று பார்த்திருக்கின்றோம். அந்த நேரத்தில் டெல்றொக்சனை பார்க்க முடியவில்லை. பின்னர் ராகம வைத்திய சாலைக்குச் சென்றபோது பார்வையிட எமக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் நாம் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக்கொண்டு சென்று பார்த்தபோது அவர் நினைவற்ற நிலையிலிருந்தார். அவரால் சாப்பிட முடியாது. எதையும் அவதானிக்க முடியாது. ஆனால் அவருடைய கால்களில் விலங்குகள் மாட்டப்பட்டிருந்தது.

இவ்வாறான மோசமான அரசின் கீழேதான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் இனி இடம்பெறக்கூடாது. ஒருவேளை சரியான மருத்துவ வசதி கிடைத்திருந் தால் டெல்றொக்சன் உயிர் பிழைத்திருப்பார். நாம் அதற்கும் அனுமதி கேட்டிருந்தோம். வெளியிலிருந்து பலர் அந்த உதவியினை செய்ய முன்வந்தனர். ஆனால் அரசு அதையும் அனுமதிக்காமல் சாகும் வரை வைத்து வேடிக்கை பார்த்தது. இதேபோல் கைமுறிந்து, கால் முறிந்தவர்களுக்கும் சரியான வைத்திய வசதிகிடையாது, அவர்களுடைய அவயங்கள் கழற்றப்படலாம்.



பாராளுமன்றில் சிறைச்சாலை அமைச்சின் அதிகாரிகளுடன் பேசி கொலை தொடர்பாக என்ன விசாரணை இடம்பெற்றது? எனக்கேட்டிருந்தோம். இது திட்டமிட்ட கொலை, மிருகத்தனமாக கைதிகள் தாக்கப்பட்டுள்ளார்கள். தாக்குதலாளிகள் மீது என்ன விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்று கேட்டபோது அந்த இடத்தில் 25மேற்பட்ட அதிகாரிகளிருந்தனர். அவர்கள் எவரிடமும் பதில் கிடையாது.

பொலிஸார் விசாரணை செய்வதாகவும், ஒரு வாரகாலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிப்பதாக கூறுகின்றார்கள். பல்வேறுபட்ட அமைப்புக்கள் இணைந்து பல்வேறு விதத்தில் ஆர்பாட்டங்களை நடத்தியிருக்கின்றோம். சர்வதேச மன்னிப்புச் சபை தொடக்கம் இந்த விடயத்தை கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என அரசை கேட்டுள்ளோம். இவ்வாறான சம்பவங்கள் சிறைச்சாலையில் குட்டிமணி, தங்கத்துரை தொடக்கம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கொல்லப்படுபவர்கள் தமிழர்கள் என்பதால் எந்த விசாரணையும் கிடையாது. இதற்கொரு நியாயம் தேடுவோம் என்கின்றார் சுரேஸ்பிறேமச்சந்திரன். மேலும்,

இந்த தேசத்தினில் ஆட்டிற்கும் மாட்டிற்கும் ஏன் நாயக்கும் கூட இருக்கும் பாதுகாப்பு வடகிழக்கினில் தமிழர்களுக்கு இல்லையென்கிறார் மனோ கணேசன். தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கான மரணங்களை கண்டவர்கள். யுத்தம் முடிந்துவிட்டதாக கூறிய பின்னரும் இன்றும் மரணங்கள் தொடர்கின்றன. இன்னுமாயிரமாயிரம் தமிழர்களை கொல்ல அவர்கள் சிந்தித்து வருகின்றனர். நான் உண்மையினில் இலங்கையனென சொல்ல வெட்கப்படுகின்றேன். வடகிழக்கினில் ஏன் தெற்கினில் காணாமல் போன படுகொலை செய்யப்பட்டவர்கள் பற்றி தனக்கு தெரியாதென அரசு கூறலாம்.ஆனால் தனது சொந்த சிறைகளினில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு என்ன கூறப்போகின்றார்களென அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

டெல்றொக்சன் போன்றோருக்கு அஞ்சலி செலுத்திவிட்டு நாம் வெறுமனே போகப்போகின்றோமாவென கேள்வி எழுப்பியுள்ளார் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன். அவர் போராளியாகவே மரணித்துள்ளார். நாங்கள் போராடாவிட்டால் எதுவுமே நடந்துவிடாதென்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். நாம் பேசாதிருக்கும் வரையும் இந்த அரசும் எம்மை அடக்கவே முற்படும். உலகம் நாங்கள் பலமாக இருக்கும் போது எமக்காகப்பேசியது. நாம் பலவீனமுற்றுள்ளபோது இந்த உலகம் எங்களை தவறாக வழிநடத்தி செல்ல முற்படுகின்றது. நாங்கள் வீதிக்கு இறங்கி போராடாவிட்டால் எதையுமே செய்ய முடியாதெ னவும் அவர் தெரிவித்தார்.

படுகொலைகளில் முதன்மையான நாடாக இலங்கை இருக்கின்றதென குற்றஞ்சாட்டியிருந்தார் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற அங்கத்தவர் செல்வம் அடைககலநாதன். நாங்கள் மௌனிகளாக இருந்தொமென்றால் ஒரு கட்டத்தில் முள்ளிவாய்க்கால் போல் அழிக்கப்பட்டு விடுவோம்.காலம் வரும் இந்த நாட்டின் ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களும் பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர். நீதி என்பது எங்களது மக்களது அவலங் களுக்கு பதில் தருவதாக அமைய வேண்டுமென அவர் கேட்டிருந்தார்.

இத்தகைய மரணங்களுக்கு முதலில் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். இது தனிப்பட்ட சிலரால் மட்டும் முடியாது. கட்சிகள் இனங்கள் அனைவரும் ஒனறிணைய வேண்டும். ஆனாலும் தெற்கிலுள்ளவர்களுக்கு நான் பகிரங்க எச்சரிக்கையொன்றை விடுக்கின்றேன். இன்று தமிழ் மக்களுக்கு நடப்பது நாளை சிங்கள மக்களுக்கும் நடக்கும். சிங்கள மக்கள் முதலில் விழித்தெழ வேண்டும். இன்று எங்களுக்கு நாளை உங்களுக்கென நினைவூட்டினார் வீ.ஆனந்தசங்கரி.

சிறிதுங்கா ஜெயசூரிய இந்நாட்டின் ஜனாதிபதி முதலில் இப்படுகொலைக்கு தமிழ்மக்களிடம் மன்னிப்புக்கோரவேண்டுமென கேட்டுக்கொண்டார். எதுஎதற்கோ தொலைகாட்சி யினில் தோன்ற ஜனாதிபதியினால் முடியுமானால் ஏன் இதற்கு முடியாதெனவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

கொஞ்சேஞ்சி மாதா கல்லறையினில் அவனுக்கு மண் தூவிய நண்பர்களது மூடப்பட்டவாய்களை தாண்டி எடடிப்பார்த்தது கண்ணீர்த்துளிகளே. வழைமை போலவே காணக்கிடைக்காத நாம் வாக்களித்து அனுப்பிய பல மூத்த தலைகளுள் டெல் றுக்சனிற்காக கெடுபிடிகளையும் தாண்டி திரண்ட மக்கள் கூட்டம் தெளிவாக சொன்னது தியாகங்கள் என்றுமே மதிப்பிழந்து போவதில்லையென்பதேயாகும்.

# உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானம்

■ கே.எஸ்.இளங்கோ

**மாணவ மணிகளே! "இது நம்தேசம்" இதழ் மூலமாக எமது தேசத்து மாணவச் செல்வங்களது அறிவு மேம்பாட்டை எட்டிக்கொள்ளும் நோக்கோடு தலைசிறந்த கல்விமான்களது பாடவழி காட்டி குறிப்புகளும விளக்கங்களும் இப்பகுதியில் பிரசுரமாகின்றன இந்த வகையில் இவ் இதழ் மூலம் அரசியல் விஞ்ஞான மாணவர்களுக்கான வழிகாட்டல் குறிப்புக்கள் இடம்பெறுகின்றன. பாடத்திட்டத்திற்கு அமைவான முறையிலே தயாரிக்கப்பட்டிருக்கும் இக் குறிப்புக்கள் அடுத்த இதழ்களில் தொடர்ச்சியாக வெளிவரும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

**– ஆசிரியர்**

**அலகு 01**

**அரசியல் விஞ்ஞானத்தின் இயல்பினை விளக்கி அதன் அனுகுமுறைகளை பரிசீலனை செய்க.**

அரசியல் என்ற பாடம் கிரேக்க யுகத்தில் ஆரம்பமாகி இன்று பல்வேறு பரப்புகளில் விருத்தியுற்று முன்னிலைக்கு வந்திருக்கும் ஒரு கற்கைக் துறையாகும். மனிதனின் சமூக நடத்தையுடன் தொடர்புபட்ட ஆய்வாகிய அரசியல், மனிதனின் சமூக நடத்தைகளை ஆய்வு செய்வதற்கு விஞ்ஞான பூர்வமான ஆய்வு நுட்பங்களை பயன்படுத்தியதோடு மனிதர்கள் அரசியல் தீர்மா னங்களுக்கு எவ்வாறு வருகின்றார்கள என்பது பற்றியும் அரசியல் தீர்மானங்கள் வெற்றி பெறுவதற்கு மனிதர்கள் அரசியல் ரீதியாக எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்; எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது பற்றியும் விபரிக்கும் துறையாக அரசியல் விளங்குகின்றது அத்துடன் நின்றுவிடாது மனிதர்கள் தமது அரசியல் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக எவ்வாறான அமைப்புக்களை உருவாக்கிக்கொண்டார்கள் என்பது பற்றியும் அந்த நிறுவனங்களும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதுபற்றியும் தொடர்ச்சியாக ஆய்வு செய்யும் துறையாக அரசியல் விளங்குவதால் அது அரசியல் விஞ் ஞானம் அல்லது அரசறிவியல் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது அறிவியல் துறைகளில் மிகவும் பழமை வாய்ந்த இக் கற்கைநெறியின் இயல்புகளாக அமைகின்ற அம்சங்கள் எவை என்பதைனை இங்குவிரிவாக நோக்கலாம்.

அரசியல் விஞ்ஞானம் சமூக விஞ்ஞானம் என்ற இயல்பைக் கொண்டிருக்கின்றது. சமூகத்தினை பிரதான ஆய்வுத்தளமாகக் கொண்டு அதன் அரசியல் செயற்பாடுகள் அவற்றின் மாற்றல்கள் பற்றியும் ஆய்வு செய்து விபரிப்பதனால் அது சமூக விஞ்ஞான இயல்பைக் கொண்ட ஆய்வுத் துறையாக விபரிக்கப்படுகிறது.

கிரேக்க காலத்தில் இருந்து தொடங்கி இன்று வரை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்ற பாடநெறி என்ற இயல்பினை அரசியல் விஞ்ஞானம் கொண்டிருக்கின்றமையால் கிரேக்க காலம் உரோமானிய காலம் மத்திய காலம் நவீன காலம் பின் நவீனத்துவக் காலம் என்ற அடிப்படையில் ஒவ்வோரு காலப் பகுதிக்குரிய அரசியல் போக்குகளை விபரிக்கும் பாடத்துறையாக விளங்குவதனால் அது தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்ற இயல்பைக் கொண்டது என்று கருதப்படுகின்றது.

வரலாற்றுக் காலங்கள் ஒவ்வென்றிலும் அரசியலை ஆய்வு செய்த அறிஞர்களையும் அவர்களால் முன்வைக்கப்பட்ட விளக்கங்களையும் ஆய்வு செய்து விபரிக்கின்ற இயல்பும் அரசியல் விஞ்ஞானத்திடம் காணப்படுகின்றது குறிப்பாக கிரேக்க காலத்தில் சோக்கிரட்டிஸ் பினாட்டோ. அரிஸ்ரோட்டல் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட அரசியல் ஆய்வு முடிவுகளைப் பற்றியும் உரோமானிய காலத்தில் பொலிவியஸ் செனேக்கா சிசரோ ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் மத்திய காலத்தில் புனித தோமஸ் அக்கவானஸ் புனித அகஸ்ரீன் ஆகிய அறிஞர்கள் மற்றும் இறையியல் வாதிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் ஆய்வு செய்யம் பாடமாக விளங்கிய அரசியல் நவீன காலத்தில் தோன்றிய ஆய்வாளர்களான மாக்கிய வில்லி தொடங்கி பேராசிரியர் காணர் வரையான அறிஞர்களால் ஆராயப்பட்ட ஆய்வு விடயங்களை விபரிக்கும் இயல்பைக் கொண்டதாக விளங்கியது.

அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய ஆய்வு என்ற இயல்பை அரசியல் விஞ்ஞானம் கொண்டிருந்தது அதாவது கிரேக்க காலத்தில் தொடர்ச்சி. நவீன காலத்தின் ஆரம்பம் வரை அரசியல் விஞ்ஞானத்தின் இயல்பானது அரசையும் அரசாங்கத்தையும் விபரிப்பதாகவே அமைந்தது.

15 ஆம் நூற்றாண்டுகளிலே அரசியல் அதிகாரம் பற்றிய ஆய்வாக அமைந்தமையால் அதன் இயல்பு அதிகாரம் பற்றிய ஆய்வென வரையறை செய்யப்பட்டது அதாவது நவீன அரசியலின் தந்தையான மாக்கிய பகுத்தறிவு வாதத்தின் காரணமாக அரசியல் அதிகாரம் பற்றிய ஆய்வாக ஏற்றுக்கொள்ளப்பட்டது இது தான் இயல்பாக விபரிக்கப்பட்டது.

19 ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் அரசு நலன்புரி விடயங்களுடன் தொடர்புபட்டு பணியாற்றத் தொடங்கியபோது அரசியல் ஆய்வில் பொதுக் கொள்கை வகுத்தல் அதனை நடைமுறைப்படுத்தல் பற்றிய ஆய்வு முதன்மை பெற்றது இதனால் பொதுக் கொள்கைவகுத்தல் அதனை நடைமுறைப்படுத்தல் பற்றிய ஆய்வு என்ற இயல்பை பெற்றுக்கொண்டது.

20ம் நூற்றாண்டில் நவீன அரசுகளின் எழுச்சி காரணமாகவும் அவற்றின் பொதுவான இயல்பு காரணமாகவும் அரசியலில் மோதல் மற்றும் முரண்பாடு என்ற விடயமும் முரண்பாட்டுத் தீர்வு என்ற விடயமும் முதன்மை பெற்றது அதாவது நவீன அரசுகள் பொதுப் பண்புகளான பல்லின சமூக அமைப்பு குறைவிருத்தி பொருளாதாரம் அரசியல் அபிவிருத்தியின்மை போன்ற காரணங்களால் உள்வாரியான முரண்பாடுகளை எதிர்கொண்டன அதே போன்று அவை வெளிவாரியான தொடர்புகளின் போதும் பல சவால்களை எதிர்கொண்டன இதன் காரணமாக அரசியல் முரண்பாடும் முரண்பாட்டுத் தீர்வும் என்ற விடயம் முதன்மை பெற்றது இதன் காரணமாக அரசியல் அதனை ஆய்வு செய்யும் இயல்பைக் கொண்ட பாடநெறியாகமாறியது.

20 ம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில்

## கல்விக்களம்

ஜனநாயக சோசலிச பாஸிஸ அரச முறைமைகள் அபிவிருத்தியடைந்தபோது அரசியல் அதனை ஆய்வு செய்து விபரிக்கும் துறையாக அபிவிருத்தியடைந்தது சனநாயக அரச முறைமைகள் மேலும் அபிவிருத்தியடைந்த பொழுது கபினட் அரசாங்கம் சனாதிபதித்துவ அரசாங்கம் என்ற இரண்டு வேறுபட்ட அரசாங்க முறைமைகள் அபிவிருத்தியடைந்தன இவற்றையும் அரசியல் ஆய்வு செய்து விபரிக்கத் தொடங்கியது இதனால் வேறுபட்ட அரசாங்க முறைமையை விபரிக்கும் இயல்பைக் கொண்ட பாடநெறியாக அரசியல் அபிவிருத்தியடைந்தது.

இதே காலப்பகுதியில் பிரதிநிதித்துவ முறை வளர்ச்சியடைந்த போது அரசியல் கட்சிகள் அழுக்கக் குழுக்கள் என்ற அரசியலுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் வளர்ச்சியடையத் தொடங்கின அத்துடன் பொதுசன அபிப்பிராயம் என்ற விடையமும் முதன்மை பெறத் தொடங்கியது இதனால் அரசியல் இவற்றின் மீதும் கவனம் செலுத்தும் நிலை உருவாகியது இதனால் அவற்றை விபரிக்கும் இயல்பை அரசியல் பெற்றுக்கொண்டது.

இன்று அரசியல் விஞ்ஞானம் நடத்தைவாதத்தின் விளைவாக அரசியல் முக்கியம் பெறும் விடயங்களாக மாறுபட்ட அரசியல் கலாசாரம் அரசியல் சமுதாயமயப்படத்தல் அரசியல் உயர்குழாம் அரசியல் அபிவிருத்தி அரசியல் நவீனத்துவம் பிராந்திய அரசியல் போன்ற விடயங்களை ஆய்வு செய்து விபரிக்கும் இயல்பைக் கொண்டதுறையாக மாறியது. மேலும் சர்வதேச நிறுவனங்கள் பொது நிர்வாகம் சர்வதேச அரசியல் போக்குகள் என்பவற்றை கவனத்தில் கொள்ளும் இயல்புடைய துறையாகவும் அரசியல் மாறியுள்ளது.

இந்த வகையில் அரசியல் விஞ்ஞானம் காலத்திற்கு காலம் பல்வேறு இயல்புகளை கொண்டதுறையாக வளர்ச்சியடைகின்ற போதிலும் அவ்வியல்புகள் அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது அது சமூக விஞ்ஞானம் என்ற இயல்புடைய பாடநெறி எனக் கூறுவதே பொருத்தமானதாகும்.

*அரசியல் விஞ்ஞானம் அணுகு முறைகள்*

அரசியல் விஞ்ஞான அணுகு முறைகள் பல காணப்படுகின்ற போதி லும் பின்வரும் அணுகு முறைகள் முக்கியமானவையாக அமைகின்றன அவையாவன -

01. தத்துவார்த்த அணுகு முறை
02. ஒப்பீட்டு அணுகு முறை
03. வரலாற்று அணுகு முறை
04. சமூகவியல் அணுகு முறை
05. நடத்தைவாத அணுகு முறை
06. முறைமைப் பகுப்பாய்வு அணுகு முறை
07. புள்ளி விபரவியல் அணுகு முறை

01. தத்துவார்த்த அணுகு முறை

மனதால் உருவாக்கிக் கொண்ட ஓர் உன்னதமான அரசியல் விஞ்ஞான பின்னணியை விபரிக்கின்றது.

பிரதான இயல்பு முதலில் இலக்கை தீர்மானிப்பது பின்னர் அடையும் வழி முறைகளை விபரிப்பது.

கற்பனை வாதம் இதன் கருவாகும்.

நடைமுறைபற்றி சிந்திப்பதில்லை.

பிளேட்டோவின் - இலட்சிய அரசு

தோமஸ் வோவின் - யுடோப்பிய அரசு

ரூசோவின் - பொதுசித்த அரசு என்பன இந்த அணுகு முறையில் விளைவுகளாகும்.

02. ஒப்பீட்டு அணுகு முறை

மிகப் பழமையான ஆய்வு

பல்வேறு அரசியல் முறைமைகளையும் நிறுவனங்களையும் ஒன்றாக எடுத்து நன்மை, தீமை ஒற்றுமை, வேற்றுமை என்பவற்றை ஒப்பிட்டுப் பார்த்தல்.

உயர்ந்த அரசியல் முறைமை, நிறுவனங்களை கட்டியெழுப்புதல் இவ்வாய்வு முறையின் நோக்கம்.

பண்புசார் பகுப்பாய்வு முறை

ஒப்பீட்டு அரசியல் என்ற துறை வளர்ச்சியடைய உதவியது

03. வரலாற்று அணுகு முறை

அரசியல் நிறுவனங்களினதும் அரசியல் முறைகளினதும் வரலாற்று ரீதியான வளர்ச்சியையும் இன்றைய நிலையையும் ஆராய்ந்து பெறப்படும் பேறுபேறுகள் அடிப்படையில் எதிர்கால போக்கை வரைவிலக்கணப்படுத்தும் ஆய்வு முறை இதுவாகும்

04. சமூகவியல் அணுகு முறை.

சமூகவியல் மானுடவியல் என்பன இதன் அடையாளமாகும்.

சமூகப் பொறிமுறை மற்றும் தனியாட்களின் அரசியல் நடத்தையை விளங்கிக் கொள்வதற்கு இது பயன்படுத்தப்படுகிறது.

பின்வரும் ஆய்வு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- பங்குபற்றல் சோதனை
- நேரடி அவதானிப்பு
- நேர்முகம்
- கேள்விக் கொத்து
- விவகார ஆய்வு

05. நடத்தைவாத அணுகு முறை.

மனிதர்களின் உண்மையான அரசியல் நடத்தையை அடிப்படையாக கொண்ட ஆய்வு முறைமை

முக்கிய அம்சங்கள்

- உண்மை நிலையை மட்டும் கவனத்தில் கொள்ளல்.
- பண்பாட்டு விடயங்கள் கணிக்கப்படுவதில்லை.
- தேவையற்ற மதிப்பீட்டுகளில் இருந்து விடுபடுதல்.
- விஞ்ஞான ரீதியான ஆய்வுமுறை.

*தொடரும்...*

---

## ரெசோ மாநாடு...

(4ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஈழத் தமிழ் மக்களது நலன் பேணப்படக்கூடிய ஆக்கபூர்வமான நிலைப்பாடு தீர்மானமாக எடுக்கப்படுவதனை, வெறுமனே இலங்கை அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கை செய்தியை வழங்க விரும்பிய புதுடில்லி விரும்பவில்லை. ஏனெனில் இத்தகைய வலுவான தீர்மானங்கள் பூகோள அரசியலில் இந்தியா விரும்பாத தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனாலாகும். இதனாலேயே தமிழ்த் தேசியவாத சக்திகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டு ஓர் ஆக்கபூர்வமான நிலைப்பாடு தீர்மானமாக நிறைவேற்றப்படுவதனைத் தடுப்பதற்காகவே அரசியல் கட்சிகளையும், பொது அமைப்புக்களையும் சார்ந்த தமிழ்த் தேசியவாத சக்திகள் பெருமளவானவர்களுக்கு அதில் கலந்துகொள்ள வீசா அனுமதி வழங்கவில்லை.

*ரெசோ மாநாடு தொடர்பான ஊடகங்கள் கையாண்ட அணுகுமுறை*

ரெசோ மாநாடு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டதிலிருந்து அநேகமான தமிழ் ஊடகங்களும், பல பத்தி எழுத்தாளர்களும் கருணாநிதி செய்த துரோகங்களை கூறி அதன் காரணமாக ரெசோ மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கோணத்தில் மட்டும் விமர்சனங்களை முன்வைத்திருந்தன. இந்நிலையில் தமிழ்நெற் இணையத்தளம் இம்மாநாட்டை தமிழ்த் தேசிய அரசியலை முன்னகர்த்திச் செல்வதற்கு ஏற்ப எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற கோணத்தில் தனது ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளியிட்டிருந்தது.

இம்மாநாடு பற்றி அறிவிக்கப்பட்டதில் இருந்து தமிழ்த்தேசிய ஊடகங்களும், பத்தி எழுத்தாளர்களும், தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் கருணாநிதியின் தவறுகளை சுட்டிக்காட்டுவதுடன், தமிழ்மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும், தமிழ்த் தேசம் தனித்துவமான இறைமை கொண்டதேசம் என்பது அங்கீகரிக்கப்படல் வேண்டும், தமிழ் மக்களது விருப்பத்திற்கு மாறாகத் திணிக்கப்பட்ட 13ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை தீர்வுக்கான அடிப்படை என்ற நிலை நிராகரிக்கப்படல் வேண்டும் என்ற விடயங்கள் உட்பட முக்கிய விடயங்களை உள்ளடக்கிய தீர்மானம் ஒன்றினை கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்திருக்க வேண்டும். அனைத்துத் தரப்புக்களும் இணைந்து மேற்படி கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாக வேண்டுமென கருணாநிதி மீதும் தி.மு.க மீதும் அழுத்தங்களைப் பிரயோகித்திருக்க வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையைக்கூட தக்கவைக்க முடியாதளவுக்குத் தேர்தலில் படுதோல்வியடைந்து மிகவும் பலவீனமான நிலையிலிருந்த கருணாநிதியும் அவரது தி.மு.க வும், சரிந்துபோயுள்ள தமது கட்சியின் செல்வாக்கை உயர்த்த, தமிழ்த் தேசிய அரசியலைக் கையில்லெடுக்க வேண்டியிருந்தது.

இந்நிலையில் இந்த மாநாட்டைத் தமிழ்த் தரப்புக்கள் பயனுள்ள தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கான களமாகப் பயன்படுத்த முயன்றிருக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய அரசிலை சரியான பாதையில் முன்னகர்த்துவதற்கு எமக்கு கிடைக்கும் வாய்ப்புக்களை அறிவு பூர்வமாகப் பயன்படுத்த இனியாவது முயல்வதே விடிவுக்கு வழி.

# த.தே.ம.முன்னணியினால் யாழ் மேல் நீதிமன்றில் 18.06.2012 நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்தை தடைசெய்த யாழ்.நீதவானின் கட்டளையை மீளாய்வு செய்யுமாறு சமர்ப்பித்த மனு

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில்
இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(P) (3) (b) ஆம் உறுப்புரை மற்றும் 1990ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க மாகாண மேல் நீதிமன்றங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் செய்யப்படும் மீளாய்வு விண்ணப்பம் ஒன்றின் விடயம் தொடர்பில்

*செல்வராஜா கஜேந்திரன்,*
*பொதுச் செயலாளர்,*
*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி,*
*இல 43, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*

எதிர்மனுதாரர் - மனுதாரர்

வழ.இல : எதிர்

*1. சமன் சிகேரா,*
*தலைமையகப் பொறுப்பதிகாரி,*
*யாழ்ப்பாணப் பொலிஸ் தலைமையகம்,*
*யாழ்ப்பாணம்.*

மனுதாரர் - எதிர்மனுதாரர்

*2. கௌரவ சட்டமா அதிபர்,*
*சட்டமா அதிபர் திணைக்களம்,*
*கொழும்பு - 12*

எதிர் - மனுதாரர்

மாண்புமிகு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கு,
மேலே பெயர் குறிப்பிட்ட மனுதாரர் தனது சட்டத்தரணி விசுவலிங்கம் மணிவண்ணன் மூலம் சமர்ப்பிக்கும் மீளாய்வு விண்ணப்பமாவது:

1) இவ்விண்ணப்பத்தின் எதிர்மனுதாரர் - மனுதாரர் (இனி வரும் இடங்களில் 'மனுதாரர்' எனக் குறிப்பிடப்படுவார்) தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எனும் அரசியற் கட்சியின் பொதுச் செயலாளரும், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாவார் (2004 – 2010).

2) கடந்த 14.06.2012 அன்று 'நில அபகரிப்பிற்கு எதிரான ஜனநாயக ரீதியான எதிர்ப்புப் போராட்டம்' என்ற தலைப்பில் 18.06.2012 அன்று இடம்பெறும் வகையில் கவனயீர்ப்பு ஒன்றுகூடல் ஒன்றிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் (முன்னாள் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட பராளுமன்ற உறுப்பினர் 2001 - 2010) மனுதாரரும் அழைப்பு விடுத்திருந்தனர். இது தொடர்பிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னனணி விடுத்த செய்திக் குறிப்பின் உண்மைப் பிரதியொன்று 'A1' என அடையாளமிடப்பட்டு இத்துடன் அணைக்கப்படுகிறது. இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), சனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, புதிய இடது சாரி முன்னணி உட்படப் பல அரசியற் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் சிவில் சமூகக் குழுக்களும் இவ்வொன்றுகூடலுக்கு ஆதரவு தெரிவித்திருந்தன.

3) 17.06.2012 அன்று மாலை 5.00 மணியளவில் முதலாம் எதிர்மனுதாரரது அலுவலகத்தில் முதலாம் எதிர்மனுதாரரைச் சந்தித்த மனுதாரர் இவ்வொன்றுகூடல் தொடர்பிலான கடிதமொன்றை முதலாம் எதிர்மனுதாரருக்கு நேரடியாகக் கையளித்தார். இக்கடிதத்தின் உண்மைப் பிரதியொன்று 'A2' என அடையாளமிடப்பட்டு இத்துடன் அணைக்கப்படுகின்றது.

4) மேற்படி கடிதத்தைப் பெற்றுக் கொண்ட முதலாம் எதிர்மனுதாரர் கடிதத்தின் உள்ளடக்கங்களை வாசித்தறியாமலே எவ்வித ஒன்றுகூடலுக்கும் தன்னால் அனுமதி வழங்க முடியாது என உடனடியாகத் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த மனுதாரர் அனுமதி பெற வேண்டிய அவசியம் சட்டத்தின் கீழ் இல்லை (அவசரகால நிலைப் பிரகடனம் அமுலில் இல்லாத காரணத்தினால்) எனத் தெரிவித்து வெறுமனே ஓர் முன்னறிவித்தல் ஒன்றை வழங்கும் முகமாகவே இக்கடிதத்தை முதலாம் எதிர்மனுதாரருக்குச் சேர்ப்பிப்பதாகத் தெரிவித்தார். இதனடிப்படையில் முதலாம் எதிர்மனுதாரர் 'A2' என்ற கடிதத்தைப் பெற்றுக் கொண்டதோடு அச் சந்திப்பு நிறைவுற்றது.

5) 18.06.2012 அன்று காலை மனுதாரரிற்கு எவ்வித அறிவித்தலுமின்றி விண்ணப்பமெனக் கூறப்படும் கடிதமொன்றை முதலாம் எதிர் - மனுதாரர் யாழ் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்தார். மேற்படி விண்ணப்பம் எனப்படுவது குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் எப்பிரிவின் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றல்ல என மனுதாரர் கூறுகிறார். மேற்படி விண்ணப்பம் எனப்படும் பத்திரம் வழக்கிலக்கம் 26227இன் நடவடிக்கைக் குறிப்புக்களும் ஏனைய ஆவணங்களும் கூட்டாக 'X' என அடையாளமிடப்பட்டு இத்துடன் அணைக்கப்படுகின்றது. மேற்படி விண்ணப்பம் எனப்படும் பத்திரம் 'X1' என அடையாளமிடப்பட்டு இத்துடன் அணைக்கப் படுகின்றது. கௌரவ நீதிமன்று அவ் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு அன்றைய தினமே ஒரு முகத் தடைக்கட்டளை (Ex parte order) ஒன்றை வழங்கியது. இக் கட்டளையின் உண்மைப் பிரதியொன்று 'X2' என அடையாளமிடப்பட்டு இத்துடன் அணைக்கப்படுகிறது.

6) மேற்படி 'X2' என அடையாளமிடப்பட்ட தடைக் கட்டளை 18.06.2012 அன்று 12.45 மணியளவில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு அண்மையில் ஆர்ப்பாட்டத்திற்கு திரண்டு கொண்டிருந்த மக்கள் மத்தியில் நின்று கொண்டிருந்த மனுதாரரிற்கு முதலாம் எதிர்மனுதாரரால் கையளிக்கப்பட்டது.

7) 22.06.2012 அன்று மனுதாரர் சார்பில் நகர்த்தல் பத்திரம் அணைத்து கௌரவ நீதவான் நீதிமன்றில் தோன்றிய சட்டத்தரணிகள் பிரிவு 106(4) இன் கீழ் 18.06.2012 கௌரவ மன்று வழங்கிய கட்டளையை இல்லாமல் செய்யுமாறு (rescind) அல்லது திருத்தம் செய்யுமாறு (vary) சமர்ப்பணம் செய்தார். அன்றைய வழக்கு நடவடிக்கையின் நிறைவில் கட்டளை 27.06.2012 வழங்கப்படும் என கௌரவ நீதவான் நிர்ணயித்தார்.

8) 27.06.2012 அன்றைய கட்டளையின் உண்மைப் பிரதியொன்று 'X3' என அடையாளமிடப்பட்டு இத்துடன் அணைக்கப்படுகிறது. 27.06.2012 அன்று கௌரவ யாழ்ப்பாணம் நீதவான் வழங்கிய கட்டளையின் சாராம்சம் பின்வருமாறு

a) பிரிவு 98(1) இன் கீழ் செய்யப்பட்ட கட்டளையொன்றை மாற்றியமைக்க வேண்டுமாயின் பிரிவு 101இன் கீழ் அணுகியிருக்க வேண்டும்,

b) பிரிவு 106(1) இன் கீழ் உயிராபத்து, காயம், மற்றும் கலவரங்களைத் தடுக்கும் நோக்கில், கட்டளை ஒன்று வழங்கப்படலாம் என்றும் இக் கட்டளையானது பிரிவு 106 (2) இன் கீழ் ஒருமுகக் கட்டளைத் தீர்ப்பாக (Exparte Order) வழங்கப்படலாம். (பக்கம் 7)

c) நீதிமன்றக் கட்டளையை அவமதிக்கும் வகையில் இக் கட்டளையை கிழித்தெறிந்தமையானது இவ்வார்ப்பட்டத்தின் மூலம் என்ன வகையான விளைவுகள் ஏற்படும் என்பதனைக் கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தது என்றும் (பக்கம் 7) நீதிமன்றக் கட்டளையைக் கிழித்தெறிந்த நிகழ்வு ஒன்றே இவ்வழக்கில் தடையுத்தரவு பிறப்பிப்பதற்கு சரியான காரணம் என்று மன்று கருதுகின்றது.

d) ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தமைக்கான நோக்கங்களாகப் பின்வருவனவற்றை கௌரவ நீதவான் கருதுகிறார்:
- தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுதல்
- இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தல்
- அவலங்கள் மீது அரசியல் நடத்தி மீண்டும் இருண்ட யுகத்திற்கு மக்களை இட்டுச் செல்வதற்கு முயற்சித்தல்
- சனநாயக மறுப்பையும் ஆயுதக் கலாச்சாரத்தையும் மீண்டும் முனைப்புடன் அரங்கேற்றுவதற்கு முயற்சித்தல்,
- மக்களை அரசியல் பகடைக்காய்கள் ஆக்கி அவலங்களின் மீது அரியணை ஏற முயற்சித்தல்,

e) இவ்வழக்கிலுள்ள பிரச்சனையை (நில ஆக்கிரமிப்பு) ஆரோக்கியமான, புத்திசாலித்தனமான, சட்ட முறையான நடவடிக்கைகள் மூலம் உரிய நீதிமன்றத்தின் முன் சென்று தமது உரித்தை நிலைநாட்டியிருக்க முடியும் இன்னும் பிறவற்றுடன் மேற்படி விடயங்களைக் கூறி 18.06.2012 அன்று தான் வழங்கிய கட்டளையை மாற்றியமைக்கும் அல்லது இல்லாதாக்கும் தேவை இல்லை என கௌரவ நீதவான் தீர்மானித்தார்.

9). கற்றறிந்த யாழ்ப்பாணம் நீதவானது 18.06.2012 மற்றும் 27.06.2012 அன்று வழங்கிய கட்டளைகளால் பாதிப்படைந்த மனுதாரர் இவ்விண்ணப்பம் மூலமாக இக் கௌரவ மேல் நீதிமன்றை, மேற்படி வழக்கின் பதிவேட்டை அனுப்புமாறு கட்டளையிட்டும் சட்டக் கேள்விகள் தொடர்பில் நீதிக்குப் பங்கம் ஏற்படக் கூடிய வகையில் வழங்கப்பட்ட கட்டளையை மீளாய்வு செய்து மீளாய்வுக் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்குமாறும் தாழ்மையோடு வேண்டி நிற்கின்றனர்.

10). பின்வரும் காரணங்களுக்காக கௌரவ நீதவானின் கட்டளை சட்டத்திற்கு முரணானது என்றும் இக் கட்டளையை கௌரவ மேல் நீதிமன்றம் மீளாய்வு செய்து தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் தாழ்மையுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

10.1. பந்தி 8(a) (b) மற்றும் 8(c) யில் சொல்லப்பட்டுள்ளவை தொடர்பில் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றது. குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 98 'Conditional Order for Removal of Nuisance' என்று தனது ஓரக் குறிப்பில் (Marginal Note) குறிப்பிடுகின்றது. பிரிவு 106 இற்குரிய ஓரக் குறிப்பு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "Power to issue absolute order at once in urgent cases of nuisance".

10.2. இவ்விரண்டு பிரிவுகளும் வெவ்வேறு நடைமுறைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. பிரிவு 98இன் கீழாக வழங்கப்படும் கட்டளைகள் "Conditional orders" என்றும் பிரிவு 106இன் கீழ் வழங்கப்படும் கட்டளைகள் "Absolute Orders" என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

10.3. பிரிவு 98(1)இன் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டளையை இல்லாமல் செய்வது அல்லது மாற்றம் செய்வது தொடர்பில் பிரிவு 98(2) குறிப்பிடுகின்றது. பிரிவு 106(1) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டளையை இல்லாததாக்குவது / மாற்றம் செய்வது தொடர்பில் பிரிவு 106(4) குறிப்பிடுகின்றது. பிரிவு 101, பிரிவு 98இன் தொடர்ச்சியாக வருவது. பிரிவு 106இற்கு பிரிவு 101 பொருத்தமுடையதன்று.

10.4. எது எவ்வாறாக இருப்பினும் கௌரவ நீதவான் மேற்படி கட்டளையை பிரிவு 98 இன் கீழ் செய்தாரா அல்லது பிரிவு 106 இன் கீழ் செய்தாரா என்பது தொடர்பில் தனது 18.06.2012 திகதிய கட்டளையிலோ 27.06.2012 திகதியிலான கட்டளையோ குறிப்பிடத் தவறியுள்ளார். 18.06.2012 அன்று கௌரவ நீதவான் ஆக்கிய கட்டளையில் வழக்கிலக்கமோ, எச்சட்டத்தின் கீழ், எவ்வளவு காலத்திற்கு இத்தடைக்கட்டளை வழங்கப்படுகின்றது என்பது தொடர்பிலோ குறிப்பிடத்தவறியுள்ளார். இவை இக்கட்ட ளையை சட்டத்தின் கீழ் வலிதற்றதான கட்டளையாக ஆக்கின்றன எனத் தாழ்மையுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

10.5. பிரிவு 98இன் கீழ் இக்கட்டளை ஆக்கப்பட்டிருக்க முடியாது. பிரிவு 98(1) ஆனது ஏற்கனவே நிலவுகையிலிருக்கும் ஓர் தொந்தரவை நீக்குவதனைப் (already existing nuisance) பற்றியே குறிப்பிடுகின்றது. பிரிவு 106 அவசரமான தொந்தரவுகளை (Urgent cases of nuisance) நீக்குவதற்கு நீதவானுக்கு அதிகாரத்தை வழங்குகின்றது. இப்பிரிவின் கீழ் கலவரம், கலகம் (affray) ஆகியன ஏற்படுவதனைத் தடுப்பதற்கு நீதவானுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளமையை நீதவான் சுட்டிக்காட்டியிருப்பினும் அவ்வாறாக கலவரம் அல்லது குழப்பம் ஒன்று ஏற்படக்கூடும் என்று தான் கருதியமைக்கான காரணமாக கட்டளை வழங்கப்பட்டதன் பின்னராக நடைபெற்றதாகப் பொலிஸாரால் எவ்வித ஆதாரமுமின்றி கூறப்பட்டுள்ள நிகழ்வொன்றையே (subsequent fact) காரணம் காட்டுகின்றார். தாம் கட்டளையை வழங்கும் போது 'கலவரம்' அல்லது 'கலகம்' ஒன்று ஏற்படும் என நீதவான் கருதியமைக்கான முக்கியமான தரவுகள் (Material Facts) எவை என்பது பற்றி நீதவான் குறிப்பிடத் தவறுகின்றார்.

11. பந்தி 8 (d) மற்றும் (e) யினுாடாக கௌரவ நீதவானால் சொல்லப்பட்ட விடயங்களாகத் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளவை தொடர்பில் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றது. *'அவலங்கள் மீது அரசியல் நடத்தி மீண்டும் இருண்ட யுகத்திற்கு மக்களை இட்டுச் செல்வதற்கு முயற்சித்தல்', 'சனநாயக மறுப்பையும் ஆயுதக் கலாச்சாரத்தையும் மீண்டும் முனைப்புடன் அரங்கேற்றுவதற்கு முயற்சித்தல்', 'மக்களை அரசியல் பகடைக்காய்கள் ஆக்கி அவலங்களின் மீது அரியணை ஏற முயற்சித்தல்' போன்ற கௌரவ நீதவானது சமகால அரசியல் மற்றும் மனுதாரரது கட்சி தொடர்பிலான கருத்துக்கள் எவ்வித சட்ட அடிப்படைகளுமற்றவை. இக்கருத் துக்களுக்கு எவ்வித சட்ட ஆதாரங்களும் இல்லை.* இக்கருத்துக்களின் அடிப்படையிலேயே கௌரவ நீதவானது 18.06.2012 மற்றும் 27.06.2012 அன்றைய கட்டளைகள் வழங்கப் பட்டுள்ளன. மேற்படி கட்டளையை ஆக்குவது தொடர்பில் நீதவானது இந்தக் கருத்துக்கள் தொடர்பற்ற புரிதல்களாக (irrelevant considerations) கருதப்பட வேண்டும் என்று மனுதாரர் தெரிவிக்கின்றார். மேற்படி புரிதல்கள் இவ்வழக்கு தொடர்பில் வழங்கிய கட்டளையை சட்டத்திற்கப்பாற்பட்டதாக்குகின்றன.

12.) மேற்சொன்ன காரணங்களுக்காக கௌரவ மேல் நீதிமன்றம் கௌரவ யாழப்பாணம் நீதவானின் 18.06.2012 மற்றும் 27.06.2012 கட்டளைகளில் தலையிட வேண்டிய விதிவிலக்கான சூழல் (exceptional reasons) தோன்றியுள்ளதென மனுதாரர் கருதுகின்றார்.

13.) காலங்கடந்து இம்மீளாய்வு விண்ணப்பம் செய்யப்படவில்லை என மனுதாரர் உறுதி கூறுகிறார். இவ்வழக்கு விடயம் தொடர்பில் இம்மனுதாரர் இம்மன்றை இதற்கு முன்பதாக நாடியதில்லை என மனுதாரர் உறுதி கூறுகிறார். நிகழ்வுகளை உறுதிப்படுத்தும் மனுதாரரது உறுதிமொழிக் கூற்று இத்துடன் அணைக்கப்படுகின்றது.

14.) எனவே மனுதாரர் இந் நீதிமன்றத்தை வேண்டுவதாவது:
அ) எதிர்மனுதாரர்களுக்கு முதற்கண் அறிவித்தலொன்றை சேவிக்கக் கட்டளையிடுமாறும் மேற்படி வழக்கின் பதிவேட்டை அனுப்புமாறு கட்டளையிடுமாறும்
ஆ) 18.06.2012, 27.06.2012 அன்று யாழ்ப்பாணம் நீதவானின் கட்டளையை மீளாய்வு செய்து தள்ளுபடி செய்யுமாறும்
இ) மன்று பொருத்தமெனக் கருதும் இன்னோரன்ன பிற நிவாரணங்களும்

10 ஜுலை 2012 ஆகிய இன்று

மனுதாரரின் சட்டத்தரணி

**- வரைவு: சட்டத்தரணி கு. குருபரன்**

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

வணக்கம் வணக்கம் நான் கனகசிங்கம். எப்படி உங்கட பாடு. நாடு போற போக்கை பார்த்தால் தங்கமே தங்கம் அவுஸ்திரேலியா விற்கு வள்ளமேறு தங்கமே தங்கம் கதை தான். எல்லாப்பக்கமும் சரியான குழப்பமாத்தான் இருக்கு.சரி சரி பார்ப்பம் எல்லாத்துக்கும் படைச்சவன் படியளக்காமலோ விடப்போறான்

எங்கட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக் காரர் வெற்றிகரமாக ஒரு பேப்பரை வெளிக் கொண்டுவந்து பெயரை பொறிக்க வச்சிட்டினம். "இது நம் தேசம்" மாதமிரு இதழாக இப்போ வெளிவருகுது. பிறகு வார இதழாக வந்து நாளிதழா பரிணமிக்குமெண்டு தம்பி கஜேந்திரகுமார் சொல்லியிருக்குது. அவையளின்ர கனவு மெய்ப்பட வேணும். நகரில இருக்கின்ற கட்சி அலுவலகத்தில நடந்த வெளியீட்டு விழாவிற்கு பொறுக்காமல் நானும் ஒரு முறை எட்டிப்பார்த்தன். அங்கை கட்சியின்ர செயலாளர் கஜேந்திரன் பேசின பேச்சுத் தான் மனசை தொட்டமாதிரி இருந்தது.

நாங்கள் கூட்டமைப்பில இருந்து வெளியேற்றப்பட்டம். ஆனால் நாங்க வெளியேற்றப்பட்டம் என்ற உண்மையை மூடி மறைச்சு ஏதோ நாங்க கூட்டமைப்பை உடைத்து வெளியேறினமாதிரி அப்பட்டமா பொய்ப் பிரசாரம் செஞ்சினம். எவ்வளவோ கதைகளை அவிழ்த்துவிட்டினம். மகிந்த விட்ட காசு வேண்டிப்போட்டாங்கள் எண்டிச்சினம். கடத்திக் கொண்டுபோன என்னுடைய தம்பியை விடுவிக்க சோரம்போட்டுதெண்டினம். 90 சதவீதமான ஊடகங்களும் எங்கடை கருத்துக்களை மூடி மறைச்சு அவை சென்ன பொய்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தினம் நிராகரிச்சினம். எங்கட கருத்துக்களை காது குடுத்து கேக்க கூட அவை முன்வரையில்லை. எதைச்சொன்னாலும் பிழை பிடிச்சினம். எங்களுக்கு வாக்களிச்ச அந்த ஏழாயிரம் சனமும் மட்டும் தான் நாங்கள் சொன்னதை கேட்டு வாக்களிச்சினம் இன்னும் பலர் நாங்கள் சொன்னதைக் கேட்டு புரிஞ்சு கொண்டாலும் வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்து போட்டினம்.

காலம் இப்ப எப்படி மாறியிருக்குப்பாருங்கோ. எந்த ஊடகக்காரர் இருட்டடிப்பு செய்தினமோ அவை இப்ப உண்மைகளைப்புரிஞ்சு தோள் கொடுக்க தொடங்கியிருக்கினம். புதுடில்லியில எங்கட ஆக்களின்ர தலையில கட்டிவிடிக்க நாச்சிப்பன் கோஷ்டி போட்ட நாடகத்தை அம்பலப்படுத்த இந்த ஊடகங்களே ஆதரவையும் வழங்கின. அந்த ஆதரவை மறக்க இயலாது. நாங்கள் தொடர்ந்தும் நியாயத்தின்ர பக்கம் தான் நிற்பம். அதனால பேப்பர் காரரும் எங்களோட தான் நிற்பினம் எண்ட போது ஒரே கைதட்டல் மயம் தான்.

உதைப்பற்றி பேசக்க தான் தேசியப்பத்திரிகையின்ர பிரதம ஆசிரியர் ஒரு மாதிரி தமிழரசுகாரர் தூக்கியடிச்ச கதை வெளியில வந்திருக்குது. மனுசன் கடைசி வரை சோரம் போகாமல் நிண்டுபிடிச்சதுக்கு ஒரு பெரிய மாலை போடோணும். அவங்கள் இருக்கிற வரையிலயும் தங்கடை தலையில தான் எல்லாமும் எண்டு திரிஞ்சவங்கள் எவங்களோ அவங்கள் தான் இப்ப இந்த ஆப்பு வைக்கிற வேலைகளிலயும் திரியிறாங்கள். எடுத்ததுக்கெல்லாம் ரீவி அலுவலகத்திற்கும் பேப்பர் அலுவலகத்துக்கும் ஓடி திரியிறது தான் இவங்கடை வேலை.போட்டுக்கொடுக்கிறது தான் இப்ப முக்கியமான வேலை.அதுவும் பக்கத்து நாட்டோட தான் வியாபாரம்.எவன் பொண்டாட்டி




எவனோட போனால் என்ன எனக்கு லெப்பை காசு கிடைச்சா போதும் கதைதான்.சனத்தை பற்றியோ செத்ததுகள் பற்றியோ மூச்சு பேச்சில்லை.

அதுக்குள்ள கிழக்கு மாகாண சபையில மீண்டும் பிரதேச வாதத்தை தேர்தல் களத்தை மையமாக வைத்து சிலர் குழப்ப முற்படினம் எல்லாரும் விழிப்பாக இருக்க வேணும். தமிழீழத்தை பெற்றுத்தரப்போறோம் எண்ட கணக்கில் கூட்டமைப்புக்காரர் பேசுகின்ற பேச்சுக்களை பேப்பர்களில் வாசிக்கிற போது சிலவேளைகளில் தலைவெடிக்கிற மாதிரித்தான் இருக்குது. ஆனாலும் தொலைக்காட்சியில் போகின்ற வடிவேலு காமெடி என்று நினைச்சு சனம் சிரித்துப்போட்டு போகுது. இல்லை என்றால் பழைய படி பிரசர் கூடியோ மனநிலை பாதிச்சோ ஆஸ்பத்திரியில் தான் இருக்கவேண்டி வரும்.

அதிலும் எங்களின் சிங்கக்கொடி காத்த வீரன் சம்பந்தனாற்றை பேச்சுக்களை கேட்டால் செத்துப்போன சனம் கூட பழைய படி எழுந்திடும். முள்ளிவாய்க்காலோட எங்கட போராட்டம் முடியவில்லை எண்டுறாங்கள். (அப்ப ஒப்வ் பண்ணின ரெலிபோனை இப்ப தான் திறக்கினம்). வடக்கு கிழக்கை இணைக்கிறதிற்கான முதல் படி அது இது என்று காது கொடுத்து பொறுமையாக கேட்கமுடியாத படி ஒரே இரைச்சல் .

தன்ர காருக்கு றைவரைப்போடக்கூட வக்கில்லாத பதவி என்று முன்னாள் முதல் அமைச்சர் பிள்ளையான் ஐயாவே சொல்லிக் கொண்டு திரிஞ்சவர் (இப்ப அவரும் பழையபடி போட்டி போர்றுது பழைய கதை). அந்தளவு அதிகாரம் கொண்ட மாகாணசபையை வெல்லுறதுக்காக தமிழீழத்தை வெல்லப்போற மெண்ட அளவிற்கு அவிட்டு விட்டுக்கொண்டு இவங்கள் திரியிறாங்கள். கேட்கிறவன் கேனையன் என்றால் எருமை மாடும் ஏரோப்பிளேன் ஓடினான் என்று சொல்லுற கதையாக கிடக்குது இவங்களின்ர கதை. சனத்திற்கும் கொஞ்சம் றிலாக்ஸ் வேணும். அதனால தான் இந்த பகிடிகளையும் கேட்டு சிரித்து கவலைகளை மறக்கப் பார்க்குதுகள். சிலருக்கு கதிரையோட சம்பளமும் பதவி

கிடைக்கப் போகின்றதை தவிர வேறு எதுவும் அங்கை கிடைக்கப்போறதில்லை.

ஏற்கனவே ஈழம் பெற்றுக்கொள்வதற்கு ஒரே வழி என்று சொல்லி போட்டியிட்ட உள்ளூராட்சி சபைகள் ஒன்றையும் செய்து கிழித்ததாக இல்லை. ஆளாளுக்கு கோஷ்டி பிரித்து வோட்டுப் பிரிச்சதை தவிர சாதித்ததாக வேறு ஒன்றும் இல்லை. சரியாக ஒரு வருடத்தை கடக்கின்ற நிலையில் பல இளம் பொடியள் மனம் சலித்து அரசியலே வேண்டாம் என்ற மனோ நிலைக்கு வந்து விட்டாங்கள். ஒரு பக்கம் கொஞ்சம் பிழைத்துக் கொள்ள மற்றப் பக்கம் சனத்திட்ட இருந்து நம்பிக்கை இழப்புக்களும் ஏற்படத் தொடங்கிவிட்டது

பிரதேசவாதம் என்று கதைகேட்கத்தான் ஞாபகம் வருகுது பழையபடி வன்னியான் - யாழ்ப்பாணத்தான் மேட்டரை சிலதுகள் தூக்கிப்பிடிக்க தொடங்கி இருக்குதுகள்.

ஏற்கனவே கிழக்கான் - வடக்கான் பிரிச்சு வைச்சு ஆடின சதிராட்டத்தில் குஞ்சு குருமன் எல்லாத்தையும் பலி கொடுத்தாச்சு. இப்ப பழைய படி ஈ.பி.டி.பி தோழர்மார் புறப்பட்டிருக்கினம். அவையோட பிழைப்புக்கெண்டு ஓட்டிக்கொண்டு இலையான் மாதிரி திரிகிறதுகள் தான் ஆக ரொம்ப கெம்புதுகள். இரணைமடுக் குளத்தண் ணீரை யாழ்ப்பாணத்திற்கு விடக்கூடாது என்று இவங்கள் தான் கூட கத்தி திரியிறாங்கள்.

ஒரு திட்டத்தை வகுக்கேக்கை சாதக பாதகங்களை பரீட்சித்து விட்டுவெளிக் கிடோணும். இப்ப அங்கை சிறுபோகம் செய்த விவசாயிகளுக்கு தண்ணீர் இல்லாமல் பயிர் எல்லாம் வாடுதாம். 34 அடி தண்ணீரை தேக்கக் கூடிய வலுவுள்ள குளத்தில் 28அடி நீரைச் சேமிச்ச பரகசியம் ஒருத்தருக்கும் தெரியாமல் கிடக்குது. ஒரு பக்கம் ஆமிகாம் மூழ்கிப்போகுமென்று தண்ணீரை உயர்த்த விடவில்லை என்கிறாங்கள். விமான ஓடுபாதை மூழ்கிப்போகுமென்றுதான் உயர்த்த விடவில்லை என்று மற்றொருபகுதி சொல்லுது. இல்லை இல்லை வன்னிச் சனத்திற்கே தண்ணீர்போதாது பிறகு எப்படி யாழ்ப்பாணத் திற்கு என்று காட்டத்தான் உந்த நாடகமென்று என்னொரு பகுதி சொல்லுது. இது எப்படி இருப்பினும் விவசாயிகளின் வாழ்க்கையோடு எவரும் விளையாடக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

இதுகளுக்க எங்கட கலைஞர் ஜயா ரெசோ மாநாடு என்ற ஒரு நாடகத்தை பழைய படி அரங்கேற்றி ஒரு மாதிரி ஆடி முடிச்சுப்போட்டார். முள்ளிவாய்க்காலில் சனம் கொத்துக்கொத்தாக சாகேக்க மனிசன் மகளுக்கும், மகனுக்கும் அமைச்சு பதவி வேண்ட டெல்லிக்கு ஒழித் திரிந்த கதை எல்லோரும் அறிந்ததே. இடையிடையே உண்ணாவிரதப்போராட்டம், மனிதசங்கிலி அது இது என்று மனிசன் போட்ட நாடகம் கொஞ்சநெஞ்சமே.

அவர் சரிஞ்சுபோன தன்ரையும் கட்சியின்ரையும் செல்வாக்க உயர்த்துறதுக்கு கூட்டின மாநாடு எண்டாலும் பரவாயில்லை இந்த மாநாட்டில உருப்படியான தீர்மானம் ஒன்றை கொண்டு வாறத்துக்கு இஞ்ச இருக்கிற சிவில் அமைப்புக்காரர் கூட்டமைப்புக்காரர் மக்கள் முன்னணிக்காரர் இந்த மனோகணே சின்ர ஆக்கள் விக்கிரமபாகுவின்ர ஆக்கள் மற்ற இந்த ஊடகக்காரர் எல்லாம் சேர்ந்து கருணாநிதிக்கு நெருக்கடியைக் கொடுத்து ஒரு உருப்படியான தீர்மானத்தை கொண்டுவர முயற்சிசெய்திருக்கவேண்டும். இதைச் சொல்ல உங்களுக்குச் சட்டென்று கோபம் வருதென்று தெரியுது அதில நியாயமும் இல்லாமல் இல்லை. ஆனால் சந்தர்ப்பத்தை விடக்கூடாது பாருங்கோ. பிறகென்ன பேந்து சந்திப்பம் அப்ப வரட்டோ.

---

## அவுஸ்திரேலியா....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தக்கவைத்துக்கொள்ளவே இத்தகைய வெளியேற்றங்களுக்கு நியாயம் கற்பிக்கப்படுகி றது.

இதுவோர் மிக மோசமான பயணம் ஏன் புறப்பட்டோமென இடைநடுவில் எல்லோரும் அழுதனர். அதிக நீரிழப்பினால் உயிரிழந்த இளைஞர்கள் ஒருவனது சடலத்தை கடலில் தூக்கி வீசிவிட்டே பயணிக்க வேண்டியிருந்தது. இந்தோனேசிய கடலை கடக்கையில் சுனாமி அலைகளை கண்டோமென்கிறார் அதிர்ச்சி மாறாமல் அந்தப்பெண்மணி. அவுஸ்ரேலியாவை ஒரு வாறாக சென்றடைந்துள்ள குறித்த பெண்மணி தம்மைபோன்று படகில் புறப்பட்ட பல படகுகள் கடலில் மூழ்கிவிட்டதாக பரவலாகப் பேசப்படுவதாக கூறினார்.

திருகோணமலையில் செல்வாக்கு மிகக் அரசியல்வாதிகள் சிலர் தமிழர்களது காணிகளை இலக்குவைத்து நல்ல விலை கொடுத்து வாங்குகின்றனராம். நம்மவர்களும் விற்று விடுகிறார்களாம். பிறகு அதே அரசியல்வாதிகள் அவுஸ்திரேலியா செல்வதற்கான ஆசையையும் ஊட்டுகின்றார்களாம். காணிக்கென வழங்கிய பணத்தை திரும்பப்பெற்றுக்கொண்டு படகேற்றி விடுகின்றார்களாம். பலர் கடலில் இப்போது பிடிபட்டுவிடுகிறார்கள். ஒருவாறாக தப்பிச் சென்றவர்கள் கூட சில வேளைகளில் திருப்பி அனுப்பப்படலாம். எவ்வாறு திரும்பினாலும் எம்மவர்களிடம் எதுவும் எஞ் சியிருக்கப்போவதில்லை என்கிறார் தமிழ் பாரா ளுமன்ற உறுப்பினரொருவர்.

அவுஸ்ரேலிய அரசின் அழுத்தங்களை அடுத்து சில படகுகளை துரத்திப் பிடிப்பதாக அரசு காட்சிகளை அரங்கேற்ற தொடங்கியுள்ளது. இது வரைகாலமும் கடற்படையினர் கண்காணிப்பை தாண்டி எவ்வாறு படகுகளால் வெளியேற முடிந்தது என்பது பற்றி அவர்களிடம் தகவல்கள் இருக்கப்போவதில்லை. அரச உயர் மட்டத்தை சேர்ந்த ஜவர் இதன் பின்னணியிலிருப்பதாக தெற்கு ஊடகங்கள் தகவல் வெளியிட்டன. நீர் கொழும்பிலிருந்தும் வள்ளங்கள் பல புறப்பட்டபோதிருந்தன ஆனால் அனைத்து இடங்களிலும் படகுகளில் ஏறித் தப்பிக்க முற்பட்டவர்கள் தமிழர்களாகவே உள்ளனர்.

## வன்னியில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடியேற்றங்களே முன்னெடுக்கப்பட்டி ருந்தன ஐ.நா உதவி அமைப்புக்களும் மீள்குடியமர்வு எனும் பெயரில் தொடரும் இத்தகைய குடியேற்ற நாடகங்கள் தொடரில் மௌனம் காத்தே வருகின்றன.

வன்னியில் தொடர்ந்தும் பெருமளவி லான நிலப்பரப்பு பாதுகாப்பு தரப்பு வசம் வெவ்வேறு தேவைகளுக்காக ஆக்கிரமிக்கப்பட்டேயுள்ளது. உத்தியோகப் பற்றற்ற உயர் பாதுகாப்பு வலயங்களாக இவை இருந்து வருகின்றன. குறிப்பாக இறுதியுத்தப் பிரதேசங்களான முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், புதுமாத்தளன், போன்ற கிராமங்களில் மீள்குடியமர்வு பற்றி மூச்சு விடக்கூட அரசு மறுத்தே வருகின்றது. அதற்கு கண்ணிவெடி அபாயம் பற்றி அரசு கதை கூறுகின்றது.

எனினும் பெரும்பிரச்சாரங்களுடன் அண்மையில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட புதுக்குடியிருப்பு மல்லிகைத் தீவில் அடுத்த ஓரிரு நாட்களினுள்ளாகவே அம் மக்கள் மீளவும் விரட்டப்பட்டு விட்டனர். கண்ணிவெடி அபாயமிருப்பதாக கூறியே இவ்வெளியேற்றல் நடந்துள்ளது. படைத்தரப்பு அதிகாரிகள் சகிதம் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. ஆனால் மனிதநேயக் கண்ணிவெடியகற்றல் அமைப்புக்களோ இன்னும் கண்ணிவெடி அபாயமிருப்பதாக எச்சரிக்கின்றன.

எவ்வாறுறேனும் வன்னியில் மீள்குடியமர்வு பூரணப்படுத்தப்பட்டுவிட்டதென காண்பிக்கமுயலும் அரசின்முயற்சியே இதன் மூலம் அம்பலமாகியுள்ளது.

# மலையகம்

## தோட்டத்தொழிலாளர்களின் வீடில்லா பிரச்சினைக்கு எப்போது தீர்வு

தோட்டப்பகுதிகளில் வாழுகின்ற தொழிலாளர் குடும்பங்களின் பெரும்பாலானோருக்குப் புதிய வீடுகளின் தேவை தற்போது அதிகரித்துள்ளது. இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட லயன் குடியிருப்புக்களில் தோட்டத்தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்திலிருந்து வந்தேறு குடிகளாக வந்தவர்கள் இன்று இந்த நாட்டில் நிரந்தரமாக வாழவேண்டிய சூழலிலுள்ளனர். இந்த நாட்டில் பெருந்தோட்டத்தொழிற்துறையை அறிமுகப்படுத்திய ஆங்கிலேயர்கள் தோட்டப்பகுதிகளில் தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட லயன் குடியிருப்புக்கள் இன்று இந்தத்தொழிலாளர்களின் நிரந்திர இருப்பிடங்களாக மாறிவிட்டன. பத்தடி விஸ்திரமான அறைக்குள் முடங்கி வாழும் அவர்களின் வாழ்க்கை இரண்டு சகாப்தத்தை நெருங்கி கொண்டிருக்கின்றது. எந்த விதமான வீட்டுரிமையோ காணியுரிமையோ இன்றி தோட்டத்தொழிலாளர் குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ வேண்டி நிலைமை தொடர்கின்றது.




தோட்டப்பகுதிகளில் லயன் குடியிருப்பு ,இரட்டை வீடுகள் , தொடர் மாடி குடியிருப்புக்கள் என்ற ரீதியில் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் காலத்தைத் தொடர்ந்து தோட்டத்தொழிலாளர்களுக்குக் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய வகையில் இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. அமரர் பெ.சந்திரசேகரன் பிரதியமைச்சராக இருந்த காலத்தில் 7 பேர்ச்சர்ஸ் நிலத்தில் வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக தனிவீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சும் வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக மீள கடன் செலுத்தும் திட்டத்திற்கேற்ப தொடர்மாடிகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. அதே வேளை தோட்டத்தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து கடன் பெற்று பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாகவும் தோட்டப்பகுதிகளில் தனி வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இவ்வாறானதொரு நிலையில் பெருந்தோட்டக்கம்பனிகள் தோட்டத்தொழிலாளர்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக்கொடுப்பதில்லை ,மாறாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக லயன் குடியிருப்புகளுக்குக் கூரைத்தகரங்களை மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

தோட்டங்களில் தற்போது தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற இந்த வேளையில் ஒரே வீட்டில் குறைந்தது மூன்று குடும்பங்கள் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதே வேளை தோட்டங்களிலுள்ள ஒதுக்குப்புறங்களில் எவ்விதமான அடிப்படை வசதிகளுமின்றி தற்காலிக குடில்களை அமைத்துக்கொண்டு வாழ வேண்டிய நிலைமை தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் 5000 தற்காலிக குடில்களில் வாழந்தவர்களுக்கு வீடமைத்துக்கொள்வதற்காக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் மக்கள் வங்கியின் ஊடாக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கப்பட்ட 30 ஆயிரம் ரூபா இதுவரை உரியவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமது நாடடிலுள்ள ஒவ்வொரு தோட்டப்பிரிவிலும் லயன் குடியிருப்புக்களில் வாழுகின்றவர்களைத்தவிர சுமார் 50 க்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் எவ்வித குடியிருப்பு வசதிகளுமின்றி வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். இவ்வாறு பார்க்கின்ற போது சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்குப் புதிய வீடுகள் தேவைப்படுகின்றது.



இவ்வாறானதொரு நிலையில் இந்திய அரசாங்கம் 4000 வீடுகளைத் தோட்டப்பகுதிகளில் அமைத்துக் கொடுக்கவுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே காந்தா அடிக்கடி அறிவித்து வருகின்றார்.

எனினும் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பான இதுவரை எந்தவிதமான ஆக்கப்பூர்வமான நடடிக்கைகளும் பெருந்தோட்டப்பகுதி மக்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

இந்த வீடமைப்புத்திட்டத்தினை இந்திய அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இந்த நிலையில் தோட்டத்தொழிலாளர்களுக்கு தனிவீட்டுத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– சோமஸ்ரீதரன்

# கேள்வி பதில்

**சி.தேவராணி, மானிப்பாய்,யாழ்ப்பாணம்**

**கேள்வி:** ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட பரிந்துரைகளால் எங்களுக்கு என்ன கிடைத்திருக்கின்றது?

**பதில்:** வெறுமனே பிரச்சாரங்களை செய்து தமிழ் மக்களை சும்மா இருக்க வைத்ததை தவிர ஒன்றுமில்லை. 47 நாடுகளுக்கு கடிதமனுப்பி அரசியல் வியாபாரம் செய்த கூட்டமைப்பினர் கூட இப்போது மூச்சு விடுவதேயில்லை.

**ம.சிவரூபன், நானாட்டான்,மன்னார்**

**கேள்வி:** நீதித்துறையை கேலிக்குரிய தாக்கியிருக்கும் றிசாத் விவகாரத்தினில் அரசு மூச்சுக்கூட விட மறுக்கின்றதே?

**பதில்:** அவர் வெறுமனே றிசாத் அல்ல. ஆளும் உயர்மட்டத்தின் செல்லப்பிள்ளை அந்த அங்கீகாரமே அவரது எல்லாவித அடாவடிகளுக்கும் காரணமாகியும் விடுகின்றது அவரையாவது கண்டிப்பதாவது குற்றப்புலனாய்வு பிரிவே சொல்லி விட்டதே. அமைச்சரல்ல அவரது சகோதரர் தான் மிரட்டினாரென்று.

**கோ.சோபனா, கொக்கட்டிச்சோலை,மட்டக்களப்பு**

**கேள்வி:** கிழக்குத் தேர்தலில் கூட்டமைப்பு வென்றால் வடக்கு கிழக்கை மீண்டும் இணைக்கலாமென்கின்றனரே? சாத்தியமானதா?

**பதில்:** வடக்கு கிழக்கை இணைப்பதென்பது பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும பான்மையான ஆதரவுடனேயே சாத்தியம். கூட்டமைப்புக்காரர் உப்புடி சொல்லுறது மக்களை ஏமாற்றி வாக்குப்பெறத்தான்.

**த.அருள்ராஜ், கச்சாய்,கொடிகாமம்**

**கேள்வி:** நில அபகரிப்பு சிறைப்படுகொலை போன்றவற்றிற்கு எதிரான மக்கள் போராட்டங்களில் தமிழரசுத் தலைகள் பலவற்றை காணவேயில்லையே?

**பதில்:** மரம் பழுத்தால் தேடிவரும் வெளவால்கள் கதைதான். வேணுமானால் வடக்கு மாகாண சபைக்கு தேர்தலை அறிவித்துப்பாருங்கள். அதன் பிறகு எல்லோரும் போராட்டங்களினில் முன்னிற்கு நிற்பார்கள். ஏன் கட்சியின் தலைவரது சொந்த தொகுதியிலேயே கட்டியிருக்கும் கோவணமும் உருவப்படுகின்றது.எவராவது மூச்சுக்கூட விட மறுக்கின்றார்கள்.

**ச.சடகோபன், அம்மன்கோவிலடி,கொக்குவில்**

**கேள்வி :** தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணி அவசர அவசரமாக புனரமைக் கப்படுகின்றதே?

**பதில் :** பந்தியில் இடம் பிடிக்க இலைபோட்டு வைக்கும் கதை தான். ஆனால் பெயரள விலிருக்கும் இளைஞரணி தலைகளை மக்கள் போராட்டங்களில் பெயரளவில் கூட காணக்கிடைக்கவில்லையென்பது மட்டும் உண்மையாகும்.

**ம.அலெக்ஸ், புதுக்குடியிருப்பு**

**கேள்வி :** அரசின் பங்காளியான தமிழ் எம்பியொருவர் இலண்டனில் வன்னியில் நில அபகரிப்பு.சிங்களகுடியேற்றமென எதுவுமேயில்லையென வக்காலத்து வாங்கியி ருக்கிறாரே?

**பதில் :** மூளைச்சலவைக்கு அனுப்பப்பட்டவர்கள். வந்திருந்த ஆறேழு பேருக்கும் ஏதாவது சொல்லவேண்டியிருந்தது. அவ்வளவு தான் .இது பற்றியெல்லாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

**மா.சுயர்சன், செட்டிகுளம், வவுனியா**

**கேள்வி :** கலைஞரின் ரெசோ மாநாடு?

**பதில் :** ஆடு நனைகின்றதென ஓநாய் அழுத கதைதான். தன்ர செல்வாக்க உயத் திறத்துக்கு கருணாநிதி மாநாட்டைக் கூட்ட அதைப் பயன்படுத்தி சிறிலங்கா சீனாவோட போனால் சிக்கலில முடியும் என்ற எச்சரிக்கையை டில்லி கொழும்புக்குக் கொடுக்க இதைப் பயன்படுத்தி உருப்படியான தீர்மானத்தை எடுக்கப் பண்ண வேண்டும் என்ற சிந்தனை தமிழ்த் தலைமைகளுக்கு ஒருத்தருக்கும் வராமப்போனது வேதனைதான்.

**பா.பிரதீபன், திருவையாறு,கிளிநொச்சி**

**கேள்வி :** மக்களது அன்றாட பிரச்சினைகளை கூட தீர்க்காத அரசும் அதனது எடுபிடி களும் வடக்கில் வசந்தம் வீசுவதாக கூறுகின்றனரே?

**பதில் :** யுத்தத்தினால் நடு வீதியில் அநாதரவாக விடப்பட்ட மக்கள் வாழ்வில் அவ்வாறு ஏதேனும் வந்து சேர்ந்ததா தெரியவில்லை. ஆனால் வடக்கில் வசந்தம் பற்றி பேசிக்கொண்டிருப்பவர்கள் வாழ்விலெல்லாம் அந்த வசந்தம் வந்துவிட்டது.

**த.அருட்குமரன், குருநகர்,யாழ்ப்பாணம்**

**கேள்வி :** கூட்டமைப்பை கட்சியாக பதிவு செய்யப்போகிறார்களாமே?

**பதில் :** முரண்பட்டவர்களை விடுத்து உடன்பட்டவர்களை இணைக்க முயல்வதாக கேள்வி. கதிரையை காப்பாற்ற தலைகீழா நிற்கினம்.

# இரத்த ராத்திரிகள்

மனதை பிழியும் பதிவுகள்...

**அங்கம் -01**

- முகிலன்

ஒரு இளம் பெண் கைக்குழந்தையுடன் தடுப்பு முகாமிலிருந்து வெளியே வருகிறாள். முட்கம்பிகளைத் தாண்டி வெளியே வரும் போது கூட அவள் முகத்தில் எந்த விதமான சந்தோசமும் இருக்கவில்லை. சில நிமிடங்களுக்கு முன்பிருந்தே அந்த முகாமை வட்டமிட்ட டிஸ்கவரி மோட்டார் சைக்கிள் அவளைக் கடந்து செல்கின்றது.

சிறிது நேரத்தின் பின் அவளை ஏற்றிக் கொண்டு விரைந்து செல்கின்றது. அவர்கள் சென்ற அந்தத் தனி வீடு வவுனியா நகரை விட்டு தெற்கே சிறிது தூரத்தில் அமைந்திருந்தது.அங்கு சென்றதும் அவளது கண்ணீரோடு சேர்ந்து அவனது தேவைகள் யாவும் பூர்த்தியானதும் அவள் உடைகளைச் சரிசெய்து கொண்டாள்.அந்தக் குழந்தையின் அழுகை அறை முழுவதும் பரவிக்கொண்டிருந்தது.

சிறிது நேரத்தின் பின்,

"இந்தா சனியனே காசு ஒரு நாளைக்கு உன்ர பிள்ள சாப்பிடாட்டி செத்தா போய்டும், வேற பெடியளும் இருக்கினம். அவங்களும் வருவாங்கள்"

"இல்ல வேண்டாம்."

"ஏன் உனக்குக் காசு தானே"

"உடம்புக்கு முடியாமல் இருக்கு"

" நான் உன்னைக் கொண்டு போய் முகாம் முன்னாடி விடப்போறது இல்ல. நீயே நடந்து போ"

"ம்"

அவள் குழந்தையோடு தனது முகாமை நோக்கிப் பயணிக்கின்றாள். அவளிடத்தில் எதையோ சாதித்த வெறி. குழந்தைக்கு இரு வாரங்களுக்கு உணவுக்குப் பிரச்சனை இல்லை... இன்று எமது தாயகத்தில் இப்படி எத்தனை எத்தனை தமிழ்ப் பெண்கள்.

என்றும் போல் அந்தக் காலை விடிகின்றது. அந்த இடத்தில் இருந்து இராணுவக் காவலரண் ஐம்பது மீட்டர் தூரத்தில் இருந்தும் "ஐயோ ஐயோ" என்னும் அபாயக் குரல்... பூமாலைகளை கடைகளுக்குக் கொண்டு வந்த சிறுவன் கத்தியதைத் தொடர்ந்து சிறிது சிறிதாக அங்கு மக்கள் கூட்டம்.நிர்வாண மாக்கப்பட்ட நாற்பத்தி ஐந்து வயது மதிக்கத்தக்க ஒருவருடைய பிணம் அங்கிருந்தது.

தகவல் அறிந்து விசாரணையாளரொருவர் அந்த இடத்திற்கு விரைந்து வருகிறார்.இவர் வவுனியாவில் இடம்பெறும் கொலைகள் கொள்ளைகளோடு சம்மந்தப்பட்டவர்களை இனங்காண்பதில் வல்லவர். நேர்மையான வர்.எல்லாரோடும் அன்பாகப் பேசிப் பழகுவார்.

இறந்தவரின் ஆணுறுப்பு மோசமாகச் சிதைக்கப் பட்டிருந்தது. இது செக்ஸ்சோடு சம்மந்தப்பட்ட கொலையாகக் கூட இருக்கக் கூடும்.உயிரோடு இருக்கும் போதே மார்பகங்கள் அறுக்கப்பட்டுச்சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறது.

இறந்தவர் சிலரால் அடையாளம் காணப்பட்டார். அவர் பெயர் யோகன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இந்த ஊரில் அனைத்து மக்களாலும் மதிக்கப்படுபவர். கோயில் பரிபாலன சபையில் அங்கத்தவராக இருக்கின்றார். உதவி என்று யார் கேட்டாலும் செய்பவர்.

பெண்கள் என்றால் தெய்வம் என்பார். அப்படி ஒரு நல்ல மனிதரை யார் இப்படிச் சித்திரவதை செய்து கொலை செய்திருக்கிறது. எல்லாளன் 2, என்னும் பெயர் அவர் உடலியே பல பாகங்களில் எழுதப் பட்டிருக்கின்றன.

இந்தக் கொலையைப் புரிந்தவர்கள் ஒன்றிற்கு மேற்பட்டவர்களாகக் கூட இருக்கக் கூடும். வேறு இடத்தில் சித்திரவதை செய்து கொலை செய்த பின்னர் இங்கு கொண்டு வந்து போடப்பட்டிருக்கின்றது.

விசாரிச்சதில் ஒரு முக்கியமான எவிடென்ஸ் கிடைத்திருக்கிறது. இறந்து போன யோகனுக்குச் சொந்தமான வீட்டில் இரண்டு பேர் வாடகைக்குக் குடி இருந்திருக்கிறார்கள்.இவர் கொலை செய்யப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னால் இருந்து அந்த இருவரையும் காணவில்லை.சில வேளை அவர்கள் கூட கொலைகாரர்களாக இருக்கலாம்.

சரியாக எட்டு தினங்களுக்கு முன்பு...

அமாவாசை இரவுடன் கூடிய பலத்த மழை. மின் விளகுகள் இடை இடையே நிறுத்தப்பட்டு ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. அவர்கள் இங்கு வாடகைக்குக் குடி வந்து ஆறு தினங்கள். ஊர் நாய்கள் துரத்தித் துரத்தி முன்னோக்கி வருவது போல் ஒரு ஊகம். இறுதியில் அவர்கள் இருவரினுடைய தூக்கங்களும் பறிபோயின.

நாங்கள் எதிர்பார்த்தது தான். கொஞ்சம் கூட அவதானமில்லாமல் இருந்து விட்டோம். காலையிலே எழுந்ததும் வேறு வீடு பார்க்க வேண்டும் என்று நினைப்போம் ஆனாலும் மறு நாள் இருட்டு வரும்போது தான் அந்த நினைவு மறுபடி வளரும்.

ரங்கனும் பிரியாவும் வெளியே சென்று பார்ப்பதற்கு முடிவு செய்தார்கள். எத்தனை நாட்களுக்குத் தான் இப்படி முடங்கிக் கிடப்பது. அவர்களுடைய அடாவடித்தனம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே செல்கின்றன.

"ரங்கன் எனக்குப் பயமா இருக்குது"

"நான் தானே இருக்கிறேன்"

(கதவைத் திறந்து கொண்டு இருவரும் வெளியே செல்கிறார்கள்)

யாரோ மெயின் மீட்டர் வயரைக் கட் பண்ணி இருக்கிறார்கள். காலடித் தடங்களையும் அவதானிக்கிறார்கள். ஒரு மாதிரியாக வீட்டின் பின் புறம் வரைச் சென்று விட்டார்கள். யாரும் அகப்பட்டால் தாக்குவதற்கென்று கையில் இருப்புக் கம்பியும் வைத்திருந்தான் ரங்கன்.

மழையும் விட்ட பாடில்லை. அவர்கள் அப்போது அவதானித்தது மிகவும் பயங்கரமானது. கொஞ்சம் கூட அவர்கள் எதிர் பார்க்கவில்லை. புதிதாக வெட்டப்பட்ட குழி ஒன்றுக்குள் நிர்வாணமான நான்கு ஐந்து பெண்களுடைய பிணங்கள். பிரியா வீறிட்டுக் கத்திக் கொண்டு ரங்கனைக் கட்டி அணைக்கின்றாள்.)

ஐம்பது மீட்டர் தொலைவில் இருந்து செடிகளையும் விலத்திய படி உருவமொன்று இவர்களை நோக்கி நகர்கின்றது. சட்டென் ஓரிரு செக்கனுக்குள் தொடர்ந்து வந்த நெருங்கியதும் அவர்கள் தலைகளில் பலத்த அடி கீழே விழுகின்றார்கள். இருவருடைக பிணங்களையும் ஒன்றின் பின் ஒன்றாக இரண்டு முரட்டுக் கரங்கள் இழுத்து அதே குழிக்குள் போடுகின்றன சிறிது நேரத்தில் அந்தக் குழி மண் வெட்டியால் நிரப்பப்பட்டுச் சமதரை ஆகின்றது.

இந்தக் கேசைச் சரியாக ஆராய்ந்து பார்த்ததில் உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றன.

நேற்றுக் கொலை செய்யப்பட்ட யோகன் என்பவர் தான் இவர்களை தனது வீட்டில் வாடகைக்கு அமர்த்தியவர்.

யோகனின் நடத்தையில் இவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம் அல்லது இவர்களுக்குத் தன்னைப் பற்றிய உண்மை தெரியவந்திருக்கலாம் என்று யோகன் இவர்களைக் கொலை செய்திருக்கலாம்.

அதற்கிடையில் தாம் பெற்ற தகவல்களை கைத்தொலை பேசியின் மூலம் கொலை செய்யப்பட்ட இவர்கள் நான்கு பேருக்கு ஈ மெயில் அனுப்பி வைத்திருக்கின்றார். பிரியா என்பவர் முன்னால் பெண் போராளி என்பது இன்வெஸ்டிகேட்டின் போது தான் தெரிய வந்திருக்கின்றது.

அனுப்பப்பட்ட நான்கு ஈ மெயில்கள் போலியான பெயர்கள்.முகவரிகளில் பதிவு செய்யப் பட்டவைகள். அந்த நான்கு ஈ மெயில்களில் மூன்று ஈ மெயில்கள் தான் ரிசீவ் பண்ணப்பட்டிருக்கின்றன.

வறிய குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண்களை வேலைக்கென்று அழைத்து வந்து விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தும் யோகனைப் போன்றோர் இருந்து தான் என்ன பயன்.

பதிவுகள் தொடரும்...

# இலக்கியம்

## வரலாறு எனும் பைத்தியக்கார விடுதி

புலம் பெயர்ந்த
என் ஈழத்து நண்பர்களை
இப்போது நான் சந்திப்பதில்லை
அவர்களது மின்னஞ்சல்களை
நான் திறப்பதில்லை
கணினியின் உரையாடல் அறையில்
அவர்களது வணக்கங்களுக்கு
இப்போது நான் பதில் வணக்கம்
சொல்வதில்லை
வரலாற்றில் இதற்கு முன்பும்
இது போல்தான் இருந்ததா
அழிவின் மௌனங்கள்?

. . . .

நிறைய பார்த்தாகிவிட்டது
சிதைக்கப்பட்ட உடல்களின்
புகைப்படங்களை
நிறைய காண்பித்தாகிவிட்டது
படுகொலைகளின் படச்சுருள்களை
நிறைய படித்தாகிவிட்டது
கொரில்லா போர் முறையின் யுத்த
தந்திரங்களை
வரலாற்றில்
இதற்கு முன்பும் இப்படித்தான்
சொல்லப்பட்டதா
விடுதலையின் கதைகள்?

. . . .

முப்பதாண்டுகளின் குருதிவெள்ளம்
ஒவ்வொரு சதுரமைலாகச் சுருங்கி
இப்போது ஒரு கண்ணீர்த்துளியாக
எஞ்சி விட்டது
தோழி
நாம் இன்று அருந்துகிற
ஒவ்வொரு கோப்பை மதுவும்
உன் விடுதலைக்காக இறந்தவர்களின்
குருதியால் நிரம்புகிறது
அது மரணத்தின்
எல்லையற்ற போதையை
நம் இதயத்தில் கலக்கிறது
வரலாற்றில் இதற்குமுன்பும்
இப்படித்தான் அணைந்ததா
விடுதலையின் சுடர்கள்?

. . . .

கொலைகாரர்கள்
தன்னம்பிக்கையுடன்
இறுதி வெற்றியை நோக்கி
முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்
சாத்தான்கள்
மர்மப் புன்னகையுடன்
வேறு எங்கோ பார்த்தபடி
பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றன
நீதி தேவதைகளோ
இதைப்பற்றிய தகவல்கள்
இன்னும் தமக்கு வரவில்லை என்கின்றனர்
வரலாற்றில்
இதற்கு முன்பும்
கொலைக்களங்களில் மனிதர்கள்
இப்படித்தான் கைவிடப்பட்டார்களா?

. . . .

வெவ்வேறு தலைநகரங்களில்
கண்டன ஊர்வலங்கள் நிறைவுற்று
தனிமையின் இருளில்
என் ஈழத்து நண்பர்கள் வீடு
திரும்புகிறார்கள்
அரசியல் சூதாடிகள்
தங்கள் சீட்டுக் கட்டுகளை
கலைத்துக் கலைத்து அடுக்குகிறார்கள்
நான் ஒரு கூட்டுப் பிரார்த்தனையில்
பங்கெடுத்துவிட்டு
சாலையோரம் அமர்ந்து மூத்திரம்
போகிறேன்
வரலாற்றில்
இதற்குமுன்பும் இப்படித்தான்
சகோதரத்துவம் நிலைநாட்டப்பட்டதா?

. . . .

அமைதிக்குப்பின்
கருணை எல்லா முனைகளிலும்
ரத்து செய்யப்படுகிறது
புதுப்பிக்கப்படாத விஸாக்கள்
நிறுத்தப்படும் உதவித் தொகைகள்
காலி செய்யப்படும் அகதி முகாம்கள்
எங்கும்கொண்டு சேர்க்காத திரும்பும்
பாதைகள்
மயான பூமியை நோக்கிக்
கிளம்புகிறது
இறுகிய முகங்களுடன்
சமாதானத்தின் மரணக் கப்பல்
வரலாற்றில் இவ்வாறு
ஒடுக்கப்பட்டவர்கள்
இதற்குமுன்பு எப்போதாவது
பறவைகளாக மாறி
வனாந்தரங்களுக்குள் பறந்து
சென்றிருக்கிறார்களா?

. . . .

புலம் பெயர்ந்த
என் ஈழத்து நண்பர்கள்
இப்போது கொல்லப்பட்டவர்களை
நினைவுகூர்வதில்லை
நம்பிக்கையூட்டும்
வதந்திகள் எதையும்
நம்புவதில்லை
யுத்தமுனைச் செய்திகளைப்
படிப்பதில்லை

ஒரு தியாகத்தின் கதையை
எஞ்சியிருக்கும் தம் குழந்தைகளுக்குச்
சொல்லாமல் மறக்கிறார்கள்
வரலாறு
இதற்குமுன்பும் இப்படித்தான்
ஒரு பைத்தியக்காரவிடுதியாக இருந்ததா?

- மனுஷ்யபுத்திரன்

**இலங்கையில்...**

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்மேளனம் (FUTA) அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களை ஒருங்கிணைத்து மேற்படி போராட்டத்தை வழிநடாத்தி வருகிறது. மேற்படி சம்மேளனம் போராட்ட நியாயப்பாடு களை தேவைகளை சரியாக தெளிவுபடுத்தி வருகின்றது. எனினும் அரசுதரப்பு பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் போராட்டத்தினை துளியளவும் கணக்கெடுப்பதாக இல்லை. அரச தரப்பிலிருந்து எந்தவித பிரதிபலிப்பும் இல்லாத நிலையில் அமைச்சர் மேவின் சில்வா பல்கலைக்கழகப் பிரச்சினையை தான் பேசித் தீர்க்க விரும்புவதாக அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அந்த அளவுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டத்தை அரசு கொச்சைப்படுத்தி வருகிறது. மாறாக அரச ஊடகங்களினுடாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களைப் பற்றி அவதூறான பரப்புரைகளை பொதுமக்களுக்கு பரப்புவதிலேயே அரசதரப்பு முக்கியஸ்த்தர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

முன்னைய அரசுகள் பல்கலைக்கழக சமூகத்தினர் ஏதேனும் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்த போதெல்லாம் அதனை உரிய சிரத்தையுடன் செவிமடுத்து உரிய பரிகாரங்களை வழங்கியிருக்கின்றன. ஆனால் தற்போதய அரசோ உந்தச் சலசலப்புக்கெல்லாம் இந்தப் பனங்காட்டு நரி அஞ்சாது என்ற தோரணையில் பாராமுகமாக இருந்து வருகின்றது. இது ஒருபுறமிருக்க மக்கள் மத்தியிலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் தொடர்பில் சரியான தெளிவற்ற நிலையே காணப்படுகிறது.

**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன்வைத்திருக்கின்ற ஆறு முக்கியமான கோரிக்கைகளில் ஒன்றான சம்பள உயர்வு விடயமே மேற்படி பகிஸ்கரிப்புப் போராட்டத்துக்கு காரணமென பலரும் கருதுகின்றனர்.**

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர் கல்வியைப் பாதுகாப்பதற்கான ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

**போராட்டக் கோரிக்கைகளில் முதலாவதும் முக்கியமானதுமான விடயம் மொத்த உள்நாட்டு உற்பத்தில் 6 வீதம் கல்விக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பதாகும்.**

இலங்கையில் எழுத்தறிவுவீதம் உயர்வாக இருக்கின்ற போதிலும் உறபத்தித்திறன் கொண்ட மனிதவளத்தினை உருவாக்குவ தற்கு வேண்டிய கல்விவளர்ச்சி மிகவும் ஆரம்ப நிலையில் இருப்பதோடு மிகவும் மந்த வேகத்திலேயே வளர்ச்சியடைந்து வருகிறது. இலங்கையில் உயர்கல்வி ஏட்டுக் கல்வியாக இருப்பதற்குக் காரணம் அரசுகள் கல்வித்துறைக்கு உரிய கவனம் செலுத்தாமையேயாகும். இதனால் கல்வித் துறைக்கான நிதி ஒருக்கீடுகள் மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது. கல்வித் துறைக்கான நிதிஒதுக்கீடு அதிகரிக்கப்படுகின்ற பட்சத்தில் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை அனைத்து அரசுசார் கல்விநிறுவனங் களும் மேம்பாடடைய வழிவகுக்கும்.


**இலங்கையில் 1995 ம் ஆண்டு 2.9 வீதம் காணப்பட்ட கல்விக்கான நிதிஒதுக்கீடு தற்போது 1.9 வீதம் மாகக் குறைக்கப்பட்டுள்ளது.**

இக்குறைப்பானது அரசு கல்வித்துறை மீது கொண்டுள்ள அக்கறையின்மையை துல்லியமாகக் காட்டுகின்றது. இந்த ஒதுக்கீட்டு மட்டம் பல வறிய நாடுகளின் நிதி ஒதுக்கீட்டு அளவுடன் ஒப்பிடுகின்றபோது மிகவும் குறைவானதாகும். பாடசாலை ஆசிரியர்கள் குறைவான ஊதியம் பெறுவதற்கும் பல பாடசாலைகள் வளப்பற்றாக்குறையுடன் திண்டாடுவதற்கும் இத்தகைய குறைவான நிதி ஒதுக்கீடே காரணமாகும். வேறுவழியில் கூறுவதானால் இன்றைய கல்வித்துறை வினைத்திறனற்றதாகக் காணப்படுவதற்கு அரச ஆதரவின்மையும் போதிய நிதி ஒதுக்கீடின்மையுமே முதன்மையான காரணமாகும். கல்விக்கான நிதி ஒதுக்கீடு 6 வீதமாக அதிகரிக்கப்பட்டால் அது பாடசாலை ஆசிரியர்களின் சம்பள உயர்விற்கும் வழிசமைக்கும். மொத்தத்தில் 6 வீத நிதி ஒதுக்கீடு என்பது தரம் ஒன்றில் தொடங்கி பல்கலைக்கழகக் கல்வி வரையில் கல்வித் துறையில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தகூடிய ஒரு விடயமாகும்.

இரண்டாவது முக்கியமான கோரிக்கை அரச கல்வி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும். அதன் அர்த்தம் அரச கல்வி தற்போது பெரும் ஆபத்தினைச் சந்தித்துள்ளது அதிலிருந்து அரச கல்வியைப் பாதுகாக்க வேண்டும். தற்போதய அரசு உயர்கல்வியை தனியார்மயப்படுத்த வேண்டும் என்பதிலேயே தீவிரமாக உள்ளது. அரசு உயர்கல்வியைத் தனியார்மயப்படுத்த முற்படுவதற்குக் காரணம் தற்போதய அரசு தூரநோக்கற்ற கொள்கைகளாலும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளாலும் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கிறது. அவ்வாறிருக்கின்ற அரசுக்கு உயர்கல்வியை பராமரிப்பதென்பது பெரும் சுமையான விடயம். அடுத்து உயர்கல்வியினை தனியார் மயப்படுத்துவதனுடாக நிதி நெருக்கடியில் உள்ள அரசுக்கு பெருமளவு பணம் கிடைக்கின்ற போது அது அரசுக்கு ஒரு தற்காலிக தீர்வாக அமையும். அத்தோடு அதிகார செல்வாக்கு மிக்கவர்கள் பலருக்கு தனிப்பட்ட ஆதாயங்கள் கிடைக்கக்கூடும் என்பதுமாகும். பொருளாதார நெருக்கடியில் இருக்கின்ற அரசு ஒவ்வொரு துறையாக தனியாருக்கு விற்று கிடைக்கும் பணத்தில் ஊதாரித்தனமான ஆட்சி நடாத்துகிறது. இலங்கையில் உயர்கல்வி தனியார்மயப்படுத் தப்பட்டால் இன்றிருக்கின்ற உயர்வான எழுத்தறிவு வீதமும் பாதாளத்துக்குச் செல்லும். இலங்கை மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் குறைவான வருமானம் உடையவர் கள். இப் பிரிவினர் கல்வியறிவுடையவர்களாக இருப்பதற்குக் காரணம் இலவசக் கல்வியேயா கும். உயர்கல்வி தனியார்மயப்படுத்தப்படுகின்ற போது இலங்கைத்தீவின் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினரது கல்வி வாய்ப்பு பறிக்கப்படும். ஏனெனில் குறைவருமானமுள்ள வர்கள் பல இலட்சம் ரூபா செலவில் தனியார் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியினைப் பெறக்கூடிய அளவிற்கு வசதிபடைத்தவர்கள் அல்ல. ஆகவே தனியார்மயப்படுத்தப்பட்ட உயர்கல்வி இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் ஒரு எட்டாக்கனியாகவே இருக்கப்போகிறது. இதில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னுமொரு விடயம் **தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை ஆனால் அரச ஆதரவுடன் இயங்கும் உயர்கல்வித்துறை தனியார் மயப்படுத்தப்படக்கூடாது என்பதும், தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்குகின்ற போதும் அவற்றின் தரமான செயற் பாடுகளை கண்காணிப்பதற்கும் தகுதியுள்ள ஒரு கல்வியியலாளர் குழு அமைக்கப்பட்டு அதனூடாகவே அனுமதி வழங் குகின்ற செயற்பாடும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் வலியுறுத்திவருகின்றனர்.**

ஆனால் மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் தொடர்பிலும் அரசு இதுவரையும் காத்திரமான நடவடிக்கைகளை எதனையும் மேற்கொள்ளவில்லை.

மூன்றாவது முக்கியமான போராட்டக் கோரிக்கை



**பல்கலைக்கழகங்கள் மீது உள்ள அரசியல் தலையீடுகள் நீக்கப்பட்டு பல்கலைக்கழகங்களின் சுயாதிபத்தியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும்.**

இலங்கையின் பல்கலைக்கழகங்களின் தரமும் ஒழுங்கும் சீர்குலைந்து போனதற்கு அரசியல் தலையீடுகள் முக்கியமான காரணமாகும். அரசியல் தலையீடு பல்கலைக்கழகங்களுள் இரண்டு முக்கிய வழிகளினூடாக நுளைகின்றது. முதலாவது வழி துணைவேந்தர் நியமனம். அதாவது எந்தவெரு பல்கலைக்கழகங்களுக்கும் துணைவேந்தரை நியமிக்கின்ற அதிகாரத் தினை ஜனாதிபதியே கொண்டுள்ளார். இரண்டாவது வழி பல்கலைக்கழக ஆளுநர் சபைக்கான (Council) வெளிவாரி உறுப் பினர்களாக அரசியல்வாதிகள் உயர்கல்வி யுடன் சம்பந்தமே இல்லாத தமது ஆதரவாளர் களை நியமிப்பதாகும். இந்த வழிகளில் உள்நுளையும் அரசியல் தலையீடானது பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் செயற்பாடுகள், கொள்கை வகுப்புகள் விரிவுரையாளர்கள், நியமனம் கல்விசாரா ஊழியர்கள் நியமனம், போன்ற விடயங்களில் தாக்கத்தை உண்டு பண்ணி பல்கலைக்கழகத்தின் வினைத்தினை யும் சுதந்திரத்தினையும் சீர்குலைக்கிறது. இத்தகைய அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட்டு பல்கலைக்கழகங்கள் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்படவேண்டும் என விரிவுரை யாளர்கள் தமது போராட்டத்தினூடு வற்புறுத்தி வருகின்றார்கள்.

நான்காவது போராட்டக் கோரிக்கை ஏற்கெனவே அரசு உத்தரவாதமளித்த 20 வீத சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும்.

சம்பள உயர்விற்கான போராட்டத்தை சில திணைக்கள ஊழியர்களே ஆரம்பித்துள்ளனர். இதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் அடங்குவர். எந்தவொரு நாட்டிலும் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்தினைத் தீர்மானிக் கின்ற முக்கியமான காரணி அவரது கல்வி மட்டமாகும். அனுபவம் திறன் போன்றனவற் றின் பங்கும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்பவர் கள் கல்வியில் அதிக முதலீடுகளைச் செய்து பெரும் சிரமங்கள் மத்தியிலும் அர்ப்பணிப்பின் பிரகாரமும் முதுமானி கலாநிதி படிப்புக்களை முடித்து ஆய்வுகளைச் செய்து உயர்வான கல்வி மட்டத்தினைக் கொண்டிருப்பவர்கள். இத்தகைய தொடர்ச்சியான உயர்கல்வியினை நிறைவு செய்வதென்பது எல்லோராலும் இயலாதகாரியம். இவர்களே உயர்மட்ட கல்வியறிவினை இளம் தலைமுறையினருக்கு வழங்குகின்ற பணியினை ஆற்றுகின்றவர் கள். தொடர்ச்சியாக கல்வி ஆராய்ச்சி போன்ற முயற்சிகளினுாக அறிவியல் விருத்திக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுகின்றவர்கள். இத்தகைய உயர்வான கல்வித்தகைமை யுடையவர்கள் அதிக ஊதியம் வழங்கப்பட வேண்டும் என கோருவது தவறானவிடய மாகாது. இதுவிடயத்தில் இரண்டாவது கருத்து பல்கலைக்கழக விரிவுரையாளர் பணி என்பது அரச கடமை போன்று நேர வரையறை கொண்டதல்ல. அதாவது காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.45 வரை போன்று நேர வரையறைக்குள் ஆற்றக்கூடிய பணியல்ல. ஒரு விரிவுரையாளருக்கு நேரவரம்பு என்பது கிடையாது. வேலை நேரங்களில் விரிவுரைகளில் ஈடுபடும் ஒரு விரிவுரையாளர் ஒரு மணித்தியாலம் விரிவுரை செய்வதற்கு ஆகக் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் தயார் செய்ய வேண்டியிருக்கும். ஒரு நாளைக்கு 4 பாடங்க ளைக் கற்பிக்கின்ற விரிவுரையாளர் 8 மணித் தியாலங்கள் வரையில் தயார்ப்படுத்தலுக்காக செலவிட வேண்டியிருக்கும். பல்கலைக்கழக விரிவுரையாளர் வெறுமனே கற்பித்தலில் மட்டும் ஈடுபடுவதில்லை. தொடர்ச்சியான ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு அறிவியல் விருத்திக் குப் பங்காற்ற வேண்டும். விரிவுரையாளனான வன் தனது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வேண்டிய ஊதியத்தினைப் பெற்றுக் கொள்ளு கின்ற போதே மன அழுத்தங்கள் இன்றி சுதந்திரமாக கற்றல் கற்பித்தல் ஆய்வுச் செயன்முறைகளில் ஈடுபட முடியும். அதுவே அறிவியல் மேம்பாட்டிற்கு வழியிட்டுச் செல்லும்.

பல்கலைக்கழக பட்டதாரிகளில் ஒரு சிறிய பகுதியினர் வினைத்திறனற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது மறுக்கப்படமுடியாத விடயம். ஆனால் அதற்குரிய காரணங்கள் பல்வேறு வகைப்பட்டவை. இதற்கான காரணங்களை பெற்றோரில் தொடங்கி முன்பள்ளி மற்றும் பாடசாலை முதல் பல்கலைகழகம் வரையிலும் தொடர்பு படுத்திப் பட்டியலிட முடியும். அரசின் கல்விக் கொள்கை, தொழிற்கொள்கை, கல்வி துறைக்கான நிதி ஒதுக்கீடு, அரசியல் தலையீடு எனப் பலதரப்பட்ட விடயங்களின் செல்வாக்கும் காத்திரமான தாக்கத்தினைக் கொண்டுள்ளன. ஒரு மாணவன் பல்கலைக்கழகத்தில் செலவிடுகின்ற 4 வருடங்களில் அவனை வினைத்திறனுள்ளவனாக மாற்றுவதென்பது மிகவும் சிக்கலான விடயமாகும். ஒரு மனிதனை ஆற்றல் ஆழுமையுள்ள மனிதனாக மாற்றுகின்ற செயன்முறை கருவறையில் தொடங்க வேண்டும். இதில் பெற்றோரின் பங்கு மிகப் பெரியது. இத்தகைய செயன்முறையில் பல்கலைக்கழகத்தின் பங்கு அளப்பரியது என்பது குறைத்து மதிப்பிடமுடியாது. மாணவர் சமூகத்தினை வினைத்திறனுள்ள வளமாக மாற்றுகின்ற செயன்முறையில் பல்கலைக்கழகம் ஆற்றவேண்டியப பங்கும் பணியும் நிறையவே உண்டென்பது மறுக்கப்படமுடியாத விடயம்.

உயர்கல்வி என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது. உயர்கல்வித்துறை பெரும் சவால்களைச் சந்தித்திருக்கின்ற இந்த வேளையில் பல்கலைக்கழக சமூகம் உயர்கல்வியின் நலனை மையமாகக் கொண்டு முன்னெடுத்து வருகின்ற போராட் டத்தை அரசு உரிய அக்கறை செலுத்தி தீர்வு காணவேண்டியது மிகமிக முக்கியமானது.

**பல்கலைக்கழக விரிவுரையாளர் களது போராட்டம் பாலைவ னத்து அபயக் குரலாக போய்விடக் கூடாது என்பதே அனைவரதும் வேண்டுகையாகும்.**

**- நல்லைக் கந்தன்**

இவ்விதழ் இல.43, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த திரு.செல்வராசா செ.கஜேந்திரன் அவர்களால் நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள் பிள்ளையார் பதிப்பகத்தில் 24.08.2012 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.